# உலகில் நடைபெற்ற விநோதத் திருமணங்கள்



பாபநாசம் **குறள்பித்தன்**

# உலகில் நடைபெற்ற விநோதத் திருமணங்கள்

பணித்திறச் செம்மல் :
**பாபநாசம் குறள்பித்தன்**

**சிவபாபா நூல் நிலையம்**
எண்.16, ராணி அம்மாள் தெரு,
தந்தை பெரியார் நகர்,
தரமணி, சென்னை - 600 113.

நூல் பெயர் : உலகில் நடைபெற்ற
விநோதத் திருமணங்கள்

ஆசிரியர் : பாபநாசம் குறள்பித்தன்

முதற்பதிப்பு : ஜூலை - 2013

பதிப்புரிமை : பதிபகத்தாருக்கே

மொழி : தமிழ்

பொருள் : பொதுஅறிவுக் கட்டுரைகள்

பக்கம் : 176

**விலை : ரூ. 70/-**

அளவு : கிரவுன்

ஒளியச்சு : செல்வின், குன்றத்தூர்

வெளியீடு :
**சிவபாபா நூல் நிலையம்**
**எண். 16, ராணி அம்மாள் தெரு,**
**தந்தை பெரியார் நகர்,**
**தரமணி, சென்னை-600 113.**

அச்சிட்டோர் :
பி.வி.ஆர். சென்னை-14.

டாக்டர்
**பி.ஆர்.எம்.எம்.சாந்தகுமார்**
**ஆம்புலன்ஸ் சர்வீஸ்,**
கே.ஜி.காலனி,
கீழ்ப்பாக்கம்,
சென்னை-10.
செல்: 98410 37699



---

# பாராட்டுரை

'திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் ஒன்று பட்டிருக்க ஏற்படும் ஒரு சேர்க்கை, திருமணத்தின் மூலம் ஆண், பெண் இருவருக்கும் நட்புரிமை ஏற்படுகிறது. இது கெடாமல் இருக்க, ஒருவரை மற்றவர் அடக்கி ஆளவோ, ஒருவர் சொல்லை மற்றவர் அலட்சியம் செய்யவோ கூடாது. தனக்கு ஒன்றைக்கூற எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே உரிமை மற்றவருக்கும் இருப்பதாக உணர வேண்டும்' என்று மேநாட்டறிஞன் டே விட்மேஸ் என்பவன் கூறுகிறான்.

'இருமனமும் ஒருமனப்பட்டதே திருமணம் ஆகும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் அழகாகச் சொல்கிறார்.

திருமணம் பலருக்கு, மண்டபங்களிலும், இன்னும் சிலருக்கு கோயில்களிலும் நடைபெறுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

ஆனால், இந்நூலிலோ உலகம் முழுதும் எங்கெங் கெல்லாம் நடந்திருக்கிறது, அது எப்படி எல்லாம் நடந்திருக்கிறது என்பதை எல்லாம் மிக அழகாக வித்தியாசமாக தொகுத்து எழுதியிருக்கிறார் என் நட்பிற்குரிய நண்பரும் எழுத்தாளரும், பத்திரிகையாளருமான திரு. பாபநாசம் குறள்பித்தன் அவர்கள்.

'இப்படி எல்லாம் நடக்குமா திருமணம்?' என்று வியக்க வைக்கிறது இந்நூல்.

'கழிவறையில் திருமணம்; கடலுக்கடியில் திருமணம்; மயக்க நிலையிலே திருமணம்; மலை முகட்டிலே திருமணம்; சிறையிலே திருமணம்; சுடுகாட்டில் திருமணம்... இப்படி இந்நூலில் பல திருமணங்கள் நம்மை சிந்திக்க வைக்கின்றன.

எதைச் சிந்தித்தாலும், வித்தியாசமாக சிந்திக்கின்ற பாபநாசம் குறள்பித்தன், இந்த நூலினையும் புதிய சிந்தனை யோடு அழகுபட எழுதியிருப்பதை அறிந்து, மகிழ்வோடு பாராட்டுகிறேன்.

அன்புடன்,

டாக்டர் பி.ஆர்.எம்.எம்.சாந்தகுமார்

# பதிப்புரை



**சோ.நாராயணன்,**
பதிப்பாளர்.

இனிய வணக்கம்.

'திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகிறது என்று பலரும், 'திருமணம் ரொக்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறது' என்று சிலரும் சொல்கிறார்கள்.

வேறு சிலர், திருமணத்தைப்பற்றி இப்படிக் கூறுகிறார்கள்: 'திருமணம் சிலருக்குக் காதலின் பூந்தோட்டம். ஆனால், பலருக்கு அதுவே போர்க்களம்' என்று கிளிண்டனும் -

'எப்படி இருந்தாலும் திருமணம் செய்துகொள். நல்ல மனைவியாகக் கிடைத்தால் மகிழ்ச்சியாக இருப்பாய். மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்' என்று சாக்ரடீஸும் கூறுகிறார்கள்.

அவர்கள் சொல்லுவதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும்.. இன்று எப்படி எல்லாம் உலகெங்கும் விநோதமாகவும் விபரீத மாகவும் திருமணங்கள் நடந்திருக்கிறது என்பதை எல்லாம் இந்நூலில், எழுத்தாளரும், பத்திரிகையாளருமான திருமிகு பாபநாசம் குறள்பித்தன் அவர்கள், தம்முடைய தேடலில் கிடைத்த திருமணங்களை இந்நூலில் பதிவு செய்திருக்கிறார்.

அவைகளைப் படிக்கப்படிக்க வினாக்குறியாகவும், வியப்புக் குறியாகவும் நின்றுவிடுகிறோம், நாம்.

உதாரணத்திற்கு இங்கே ஒரு சில... பாராசூட்டில், தொடர் வண்டியில், போர்க் கப்பலில், இண்டர்நெட்டில்... இப்படி நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் இந்நூலில், படிக்கப் படிக்க சுவையூட்டுகிறது.

வாசகர்களாகிய நீங்களும் படித்து மகிழ வேண்டும் என்றும் விரும்புகிறோம். நன்றி!

அன்புடன்,
**சோ.நாராயணன்**

இனிய நண்பர்களுக்கு, இந்நூல்...

- திருமிகு: தங்க.கண்ணதாசன்
- நல்லாசிரியர்: சங்க கலைச்செல்வன்
- ஆசிரியர்.வீ.ப.க.மூர்த்தி
- கவிஞர்: சுப.சிதம்பரம்
- கவிஞர்: தமிழ்தாசன்
- எழுத்தாளர்: சி.எம்.முத்து
- புதிய பாரதம்: சிவ.சண்முகம்
- ஆசிரியர் ஏ.வி.சின்னப்பன்
- புலவர்: சுப்பு.தங்கராசு
- கோடையிடி.குருசாமி
- பத்மநாபன்....

**நட்புடன் குறள்பித்தன்**

துன்ப மென்றோ; துயரமென்றோ
எண்ணுதல் கூடாது; நட்பென்றே
எண்ண வேண்டும்; நலமென்றே
வாழவேண்டும்.

அப்படி எண்ணி தொடர்கின்றவர்
வாழ்க்கை; மண்ணில் சொர்க்கமாகும்.

ஆமாம், உண்மையும், உழைப்பும்
நம்பிக்கையும்; மனித நேயமும்
இருந்தால் -

*வாழ்க்கை இனிதே; வாழ்வதும் இனிதே. வாழ்வோம் இணைந்தே; வானமாய் உயர்ந்தே!*

*இந்நூலினை என் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய* **மருத்துவத்திலகம் டாக்டர் வி.ஜமுனா அவர்களுக்குக் காணிக்கையாக்கி** *மகிழ்கிறேன்.*

*இந்த என் நூலை வெளியிட்டு வெளிச்சப்படுத்தி யுள்ள பதிப்பகத்தார்க்கு, என் நெஞ்சார்ந்த வணக்கமும்; நன்றியும்.*

*எப்போதும்போல், என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த் துணைவியார், நீலா கண்ணன் அவர்களுக்கு வணக்கமும், வாழ்த்தும்!*

நட்புடன்
குறள்பித்தன்

109/111, ஒற்றை வாடைத் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24.
அலைபேசி: ~~9941515237~~

## சிந்தனைக்குரிய திருமணம்!

'எங்கள் திருமணத்திற்கு வருகின்றவர்கள் அன்பளிப்பு வழங்காதிருக்க வேண்டுகிறோம். முடிந்தால், இரத்த தானம் செய்துவிட்டுச் செல்லுங்கள்.'

இப்படி ஒரு திருமண அழைப்பிதழில் மேற்கூறிய வாசகங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது.

ஆமாம், மத்தியப் பிரதேசம் ராம்பூர் நகரைச் சேர்ந்தவர், ஹரிபாய். இவர், தனது மகளின் திருமண வரவேற்பை மக்களுக்கு உதவும் வகையில் செய்ய வேண்டும் என நினைத்தார்.

இது குறித்து மாப்பிள்ளை வீட்டாருடன் கலந்து பேசினார். மணமகன் தர்மேந்தர், ஜெர்மனியில் பணியில் இருந்தார். அவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

தனது வருங்கால மாமனாரின் நல்ல எண்ணத்தை உடனே செயல்படுத்த அவரும் ஒப்புதல் அளித்தார்.

மண விழா நாளன்று வந்திருந்த நண்பர்களும், உறவினர்களும் சுமார் 70 பேர் மனமகிழ்ச்சியோடு இரத்த தானம் செய்தனர்.

முதன் முதலில் மணமகளும், மணமகனும் இரத்த தானம் செய்து, இந்த பயனுள்ள நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தனர்.

## நவீன காலமாம்!

இரண்டு ஆணை மணந்தாள் ஒரு பெண். இந்த அதிசயத் திருமணம், கேரளாவிலுள்ள குட்ட நாட்டில்தான் நடந்தது.

அங்கே கோவிந்தன், இராமன் என்ற இரட்டையர்கள் இருந்தார்கள். அவர்களின் உடலமைப்பு மட்டுமல்ல, நடை உடை பாவனைகளும் ஒன்று போலவே இருக்கும்.

அந்த இரட்டையர்களுக்கு திருமண வயது வந்ததும் இருவரும் ஒரே பெண்ணை மணக்க எண்ணினார்கள்.

அதன்படியே, இருவரும் சேர்ந்து, ஜானகி என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டனர்.

கோவிந்தன், இராமன் தம்பதிகளுக்கு 14 குழந்தைகள் பிறந்தன. இந்த அதிசய ஜோடிகள், எவ்வித அச்சமும் இல்லாது எல்லா இடங்களுக்கும் சேர்ந்தே சென்று வந்தார்கள்.

இந்த நிலையில் 1986-இல் இராமன் இறந்து போனார். அன்று முதல் கோவிந்தனும் நடைப் பிணமாகவே இருந்து வந்தார்.

ஒரு நாள் படுக்கையில் விழுந்த கோவிந்தனும் 1991-ஆம் ஆண்டு இறந்து போனார். ஜானகி விதவையானாள்!

## வருண பகவான் நடத்தி வைத்தார்

மத்தியப் பிரதேசத்தில் கச்சோர்டு கிராமத்தில் நடந்த மிகவும் வித்தியாசமான திருமணம் இது.

பிரவீனா என்கிற பெண்ணை பங்கஜ் என்கிற பையனுக்கு நிச்சயம் செய்வதற்காக பெண் வீட்டிற்கு வந்தார்கள். நிச்சயமும் முடிந்தது. பையன் வீட்டுக்காரர்கள் புறப்படத் தயாரானார்கள். அப்போது பெரிதாக மழை பிடித்துக்கொண்டது.

மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிலேயே சிறிது நேரம் தங்க நேர்ந்தவுடன், மாப்பிள்ளையோ, 'இப்போதே திருமணத்தை முடித்து விட்டால் என்ன?' என்று கேட்க, பையனின் பெற்றோரும், பெண் வீட்டாரும் ஏக மனதாக ஒப்புக்கொண்டார்கள்.

பிறகென்ன? உடனடியாக பிரவீனா, பங்கஜ் திருமண ஏற்பாடுகள் நடந்து, இனிதே திருமணமும் நடந்தேறியது.

மேளமில்லை, தாளமில்லை, கூட்டமில்லை, விருந்தில்லை. செலவுமில்லாமல் இப்படி ஒரு திருமணம், வருண பகவானால் நடந்து முடிந்தது.

## எனக்கு 112, உனக்கு 27....

செகாரியோ டி சில்வா என்பது அவரது பெயர். வயது 112. மூன்று பெண்களை காதலித்துத் திருமணம் செய்து கொண்ட இவர், நான்காவதாக 112 வயதில், 27 வயது இளம் மங்கையை தன் காதல் வலையில் சிக்க வைத்து - அவளும் சிக்கிக் கொண்டு திருமணம் செய்து கொண்டாள்.

லோரா என்ற அந்தப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டது பெரிய செய்தி இல்லைதான்... 112 வயதிலும் 27 வயது காதல் மனைவியை கர்ப்பமாக்கி இருக்கிறாரே, அதுதான் செய்தி!

## குள்ளத் திருமணம்!

அச்சுதா என்பதுதான் அவர் பெயர். வயது 31. எல்லாருக்கும் வருகின்ற காதல் - திருமண ஆசை அவருக்கும் வந்தது.

அவருக்கு ஆசை வந்தது சரிதான்... அந்த ஆசைக்கு குறுக்கே தடையாக நின்றது அவரது உயரம்தான்.

எடையோ 13 கிலோ, 3 அடி 5 அங்குலம்தான். எங்கெல்லாமோ 'சைட்' அடித்துப் பார்த்தார். எதுவும் ஒர்க்கவுட் ஆகவில்லை. கடைசியில் உமா என்ற பெண்ணின் மீது தன் காதல் கணையை வீசினார். காதல் 'ஓகே'யாகிவிட்டது.

காரணம், அந்தப் பெண்ணின் உயரம் சற்று (4 அடி 5 அங்குலம்) அதிகமாக இருந்தாலும், அவளுள்ளும் காதல் மலர, திருமணத்தில் முடிந்தது.

காதலுக்கு உயரமா தடை? மனம்தானே விடை!

## மயக்கும்... மாலை....

மயக்க நிலையில் திருமணம்!

ஆமாம், கிழக்கிந்தியத் தீவுகளில் உள்ள 'புகீ' என்ற இனத்தவரிடையே நடைபெறும் திருமணம் விசித்திரமானது தான்!

திருமணம் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே, மணமகளுக்கு ஒருவகைப் பச்சிலைச் சாற்றை பருகக் கொடுத்து விடுகிறார்கள்.

இந்த மயக்கம், திருமண நாள் வரை இருக்குமாம். அப்படி அவள் மயக்க நிலையில் உள்ளபோதே சடங்குகள் நடக்குமாம். மணமகன் அவள் கழுத்தில் தாலியையும் கட்டிவிடுவானாம்.

இப்படி திருமணத்தின்போது பெண்ணை மயக்கச் செய்து விடும் வழக்கம் ஏன் ஏற்பட்டது என்பது அந்தத் தீவு வாசிகளுக்கே புரியாத புதிராக இருக்கிறது.

## தண்ணீர்க்குள்ளே....

கடலில் முத்துதான் எடுப்பார்கள். ஆனால், முத்தமும் கொடுப்பார்கள் என்பதை இச்செய்தியால் நாம் அறியலாம்.

அவர் ஒரு மருத்துவர். தைவான் நாட்டைச் சேர்ந்தவர். வயது 29. அவர் தன்னுடைய திருமணத்தை கொஞ்சம் புதுமையாக நடத்த வேண்டும் என்று விரும்பினார்.

ஹூஹ்யூசென் என்ற 28 வயது மணமகளை தன்னுடன் ஆர்ச்சிட் என்ற தீவுக்கு சில நண்பர்களுடன் ஆக்ஸிஸன் குழாய்களைப் பொருத்திக்கொண்டு, தண்ணீருக்கு அடியில் சென்று திருமணம் செய்து கொண்டார்.

மணமகன், மணமகளை முத்தமிட, நடந்து முடிந்த இத்திருமணம் தைவான் நாட்டில் தண்ணீருக்கு அடியில் நடந்த முதல் திருமணம் என்று அந்த நாடு தெரிவிக்கிறது.

## காதலுக்கு... கருத்துமில்லை!

பஸ்டர் மிக்செல் என்பது அவர் பெயர். இவர் தன்னுடைய அலுவலகத்தில் பணி செய்த பெண் ஒருத்தியை காதலித்தார். காதல் தோல்வியுற்றது.

பிறகு, கொஞ்ச காலம் பித்துப்பிடித்து அலைந்து, களைத்து, கடைசியில் இன்னொரு காதலில் மாட்டினார்.

இந்த முறை அவர் காதலித்தது எந்த அழகியையுமல்ல. தன்னுடைய காரையே காதலிக்கத் தொடங்கிவிட்டார்.

காதலியின் பெயர், 1996 மஸ்டாங் ஜி.டி.காதல் வெற்றி யடைந்ததும்! - அடுத்தக் கட்டத்திற்குப் போனார்.

தன்னுடைய காரையே திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் அதற்கு அனுமதி வழங்கும்படி கேட்டு அரசுக்கு மனு செய்தார்.

அதற்கு டென்னஸி அரசு அனுமதி தர மறுத்துவிட்டது. திருமணம் என்பது ஆணும், பெண்ணும் செய்து கொள்வது. 'இதற்கெல்லாம் அனுமதி தர இயலாது' என்று கண்டிப்பாக மறுத்துவிட்டது.

இரண்டாவது 'காதலும்' கைகூடாது போய்விடுமோ என்று காதலன் கவலைப்படத் தொடங்கினாராம்....!

## எங்களுக்கும் காலம் வரும்....

மரங்களுக்கு உயிர் இருக்கிறது; உணர்ச்சி இருக்கிறது. ஏன், மனிதர்களுக்கு இருக்கும் அனைத்து உணர்வுகளும் உண்டு என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அப்படி இருக்கும்போது... மரங்களுக்கு ஏன் திருமணம் நடத்தி வைக்கக்கூடாது? என்று ஒருவர் எண்ணினார்.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் பிகான்பூர் கிராமத்தில், 1991 ஜூலை மாதம் திருமணத்தை நடத்தியும் வைத்து விட்டார்.

மணமகன், எட்டு வயதான ஒரு மா மரம்.

மணமகள், ஜாமுன் மரம்.

இந்த இரண்டு மரங்களுக்கும் மகேஷ்-சந்திரா என்ற பணக்காரர்தான் முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்தார். இந்து முறைப்படி நடந்த இந்தத் திருமணம் எந்தக் குறையுமில்லாமல் நடந்தது.

இத்திருமணத்திற்காக முகூர்த்த நாள் குறித்து, பத்திரிகை அச்சடிக்கப்பட்டு, சுற்றியுள்ள கிராமத்தார் அனைவருக்கும் தரப்பட்டது.

திருமணத்திற்கு 500 குடும்பங்கள் சுற்றம் சூழ வந்திருந்தனர்.

இரண்டு மரங்களுக்கும் ஆடை, அணிகளால் அலங்கரிக்கப்பட்டன. குறித்த நேரத்தில் அக்னி வளர்த்து மந்திரம் ஓத, திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்கு வந்திருந்தவர்களுக்கு மாம்பழம் விருந்தாகத் தரப்பட்டது.

வந்திருந்தவர்களும், தலைக்கு இரண்டு ரூபாய் மொய்யும் எழுதிவிட்டுப் போனார்கள்.

## பிண மேடை மண மேடையாக....

பிரபல வெடிகுண்டு தீவிரவாதி தாவுத் இப்ராகிமின் கூட்டாளி, ரொமெஷ் சர்மா. இவனும், இவனது நண்பனும் ஆன நவீனும் தீவிரவாத வழக்கில் கைதாகி, டெல்லி திகார் சிறையில் இருந்தனர்.

சர்மா கைது ஆவதற்கு முன், நவீனின் 29 வயது சகோதரி குன்சமையை உயிராக காதலித்தான். இருவரும் திருமணம் செய்து கொள்வதற்கு முன் கைதாகி சிறைக்குச் சென்றுவிட்டான்.

இந்த நிலையில், குன்சம் டெல்லி அருகே சத்தர்பூர் என்ற அவளது பண்ணை வீட்டில் அடையாளம் தெரியாத மர்ம மனிதர்களால் படுகொலை செய்யப்பட்டாள்.

டெல்லி கல்காஜ் சுடுகாட்டில் அவளது உடல் தகனம் செய்யப்படுவதாக இருந்தது.

அதற்கு முன் குன்சம் கழுத்தில் தாலிகட்டி திருமணம் செய்ய சர்மா விரும்பினான். இதற்கு குன்சமின் தாயார் ராணியும் சம்மதித்தார். போலீஸ் தரப்பில் இதற்கு அனுமதியும் அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, குன்சம் உடலுக்கு பட்டுச்சேலை அணிவித்து கல்காஜ் சுடுகாட்டில் சிதையின் அருகே தயாராக வைத்திருந்தனர். உடல் அருகே தாயார் ராணியும், உறவினர்களும் கதறி அழுதபடியே நின்றிருந்தனர்.

திகார் சிறையில் இருந்து சர்மாவும், குன்சம் சகோதரர் நவீனும் பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் வந்த போலீஸ் டிரக்கைத் தொடர்ந்து, 100 போலீசார் டிரக் வண்டியில் வந்தனர்.

குன்சம் உடலை வைத்திருந்த மேடைக்கு இருவரையும் அழைத்து வந்தனர். சர்மா, குன்சம் உடலைப் பார்த்ததும் அவன் துக்கம் தாளாமல் கதறிவிட்டான்.

அதன் பிறகு திருமணச் சடங்குகள் தொடங்கின. குன்சம் உடலுக்கு சிவப்புச் சேலையை சர்மா அணிவித்து, நெற்றியில் குங்குமம் வைத்தான். அப்போது மந்திரங்கள் ஓதப்பட்டன. இரண்டு நிமிடத்தில் திருமணம் முடிந்தது.

அதன்பின், குன்சம் உடல் சிதையில் வைக்கப்பட்டது. அதற்கு சர்மா தீ மூட்டினான். அப்போது அங்கிருந்த எல்லார் கண்களுமே நீரை சிந்தின.

## சிறைக்குள்ளேயே...

**உ**த்திரப்பிரதேச மாநிலம் இலட்சுமணபுரியில் உள்ளது மாதிரி சிறைச்சாலை.

இங்கு தண்டனை அனுபவித்து வந்த கைதி மெகபூப். வயது 43. இவருக்கும் ரயீசா என்ற பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

இவர்களது திருமணம் சிறைச்சாலைக்கு உள்ளேயே நடத்தி வைக்கப்பட்டது. அந்த வகையில் இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

சம்பவத்தன்று மணமகன் மெகபூப் தனது கைதி உடைகளை களைந்துவிட்டு, புத்தம் புதிய பேண்ட், சர்ட் அணிந்து, குதிரையில் வலம் வந்தார்.

பிறகு 'நிக்காஹ்' நடத்தி வைக்கப்பட்டது. திருமணத்திற்கான செலவுகளை மற்ற கைதிகள் ஏற்றுக் கொண்டனர்.

திருமணத்தை வீடியோ படம் எடுக்கவும் அதிகாரிகள் அனுமதித்தனர்.

## ஊர்வலமாம் ஊர்வலம்...

உத்திரப்பிரதேசத்தில் ஜான்பூர் மாவட்டத்தில் உள்ளது நவேரியா. இப்பகுதியைச் சேர்ந்த அஜீத் என்பவர், ஊர்மிளா என்ற பெண்ணை ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக திருமணம் செய்தார். ஆனால், அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்று குடும்பம் நடத்தவில்லை.

இந்தப் பிரச்சினை குறித்து மாவட்ட ஆட்சியாளர் அபர்ணா விடம் ஊர்மிளா முறையிட்டார். பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இரு குடும்பத்தினரும் சேர்ந்து கலந்து பேச, மாவட்ட ஆட்சியாளர் ஏற்பாடு செய்தார்.

ஆனால், அஜீத் குடும்பத்தினர் வரவில்லை. இதைத் தொடர்ந்து, ஊர்மிளாவே தனது மணப்பெண் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தார்.

மேள தாளங்கள் முழங்க கணவன் வீட்டுக்கு ஊர்வலமாக சென்ற அவரை, மாமியார் பூல்தேவி வரவேற்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

திருமணத்திற்குப் பின், வீட்டுக்கு அழைத்துச் செல்லாத கணவன் வீட்டுக்கு, மனைவி ஊர்வலமாக சென்ற சம்பவம் இந்த மாவட்டத்தில் இது இரண்டாவது முறையாக நடைபெற்றுள்ளது.

இதற்கு முன் பதோவன் என்ற கிராமத்தில் மோனிகா என்ற பெண் இவ்வாறு ஊர்வலம் சென்றார்.

## காதல் வந்து....

காதல் வந்துவிட்டால் மணக்கப் போகிறவரின் முன் வாழ்க்கை என்ன? எப்படி வாழ்ந்தார்? என்பதை எல்லாம் யாரும் பார்ப்பதே இல்லை.

பிரேஸில் நாட்டு கால் பந்து வீரர் பீலே. இவருக்கு வயது 53.

இவர் 34 வயதான மனோதத்துவ டாக்டர் லெமோஸ் என்ற பெண்ணை தன் நாட்டு ஆலயம் ஒன்றில் மிக ஆடம்பரமாக திருமணம் செய்து கொண்டார்.

வீரருக்கும், டாக்டருக்கும் இது முதல் திருமணம் அல்ல. இரண்டாவது திருமணம்.

பிலே, 12 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு குழந்தைகளுக்குத் தாயான முதல் மனைவியை விவாகரத்துச் செய்தார். மணப்பெண் லெமோஸ் மூன்று வயது பெண் குழந்தைக்குத் தாயானவள். முதல் கணவரிடம் இருந்து விவாகரத்துப் பெற்றவள்.

## சுடுகாட்டில் திருமணம்!

அந்தமான் தீவுகளில் வாழும் பழங்குடியினர், முதல் மனைவியை இழந்துவிட்டால், இரண்டவாது திருமணத்தை சுடுகாட்டில் நடத்துகின்றனர்.

காரணம், முதல் மனைவியின் ஆசி இத்திருமணத்தின் போது புதுத் தம்பதியினருக்கு கிடைக்குமாம். இந்தப் பழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

## வரதட்சணையாக பாம்பு!

திருமணத்தின்போது வரதட்சணையாக நாமெல்லாம் வீடு, கார், ஸ்கூட்டர், நகை, பணம் என்றுதானே கொடுப்போம் - வாங்குவோம்!

ஆனால், வரதட்சணையாக பாம்பை யாராவது தருவார்களா? பெறுவார்களா? பார்த்திருக்கிறீர்களா, கேட்டிருக்கிறீர்களா?

குஜராத்தில் உள்ள 'கச்' மாவட்டத்தில் வாழும் 'வாடி' இன மக்கள்தான், இப்படி பெண் வீட்டு வரதட்சணையாக மாப்பிள்ளைக்கு 'பாம்பு' தருகிறார்கள்.

இவர்கள் பாம்பாட்டியினத்தைச் சேர்ந்தவர்களாதலால், இந்த பாம்பை வைத்து மாப்பிள்ளை பிழைத்துக் கொள்வார் என்று இவர்களுக்கு நம்பிக்கை.

பணக்கார பாம்பாட்டிகள் ராஜ நாகத்தை வரதட்சணை யாக தருகிறார்கள்.

ஏழையாக இருந்தால் சாதாரண நாகம்தான்!

## இப்படியும் ஒரு முதல் மந்திரி!

ஜே.பி.பட்நாயக் ஒரிசாவின் முதல்வராக இருந்தவர்.

கோடிக்கணக்கில் செலவழித்துத் திருமணம் நடத்தும் முதல்வர்கள் உள்ள இந்த நாட்டில் மிக எளிமையாகத் தமது மகனின் திருமணத்தை நடத்தி முடித்தார்.

இவரது ஒரே மகன் பிரித்வி வல்லப பட் நாயக். மகன் திருமணத்திற்கு அழைப்பிதழ் அச்சடிக்கப்படவில்லை;

அமைச்சர்கள் அழைக்கப்படவில்லை; மாப்பிள்ளை ஊர்வலம் இல்லை; வரவேற்பு இல்லை. இப்படி எந்த ஆடம்பரமும் இல்லை.

கட்டாக்கில் உள்ள கிளப் ஹவுஸில் எளிமையாக திருமணத்தை முடித்துவிட்டார். நெருக்கமான உறவினர்கள் மட்டுமே ஒரு சில கார்களில் வந்திருந்தனர். தமது இரண்டாவது மகள் திருமணத்தையும் இதே முறையில்தான் நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இதுதான் காதல்!

இது பிரான்ஸில் நடந்தது. இங்கே ஒரு பெண் தனக்குரிய ஆணை, அவன் இறந்த பிறகு திருமணம் செய்திருக்கிறார்.

பிரான்காய் ஸ்கிளின் என்பவர் ஒரு போலீஸ் அதிகாரி. 4 மில்லியன் டாலர் பண கொள்ளை வழக்கில் ஈடுபட்டு, எதிரியால் சுடப்பட்டு இறந்தார்.

அவர் உடல் புதைக்கப்பட்ட பின்னும் அவரையே மணக்க விரும்பினாள் கோலீனி பிலிடே என்ற பெண். தனது விருப்பத்தை அதிபருக்கு தெரிவித்தாள். பிரான்ஸ் நாட்டில், போர் காலத்தில் இறந்த ஒரு ஆணை ஒரு பெண் மணக்கலாம். அதுவும் இறந்து போனவனால் உருவாக்கப் பட்ட கருவை சுமந்து கொண்டிருந்தால், அதைப்போலவே கோலீனுக்கு சில மாதங்களில் அனுமதி கிடைத்தது. திருமணத்தின் அடையாளமான 'தங்கப்பட்டை' ஒன்றை தனக்குத்தானே அவள் தன் கையில் கட்டிக் கொண்டாள். அவள் அப்படிக் கட்டிக் கொண்டபோது, கணவன் இறந்து ஓர் ஆண்டாகி இருந்தது.

## திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது...?

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்ற முன்மொழியை இனி மறந்துவிடுங்கள். அப்படித் தான் இந்நிகழ்ச்சி நமக்குச் சொல்கிறது.

ஆம், கோவை நீதிபதி சடையப்பன் என்பவர் சொர்க்கத்தை மாற்றி சிறைச்சாலை என்று நிரூபித்திருக்கிறார்.

நவாப்கான் என்பவரைத் தடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்துவிட்டார்கள். இவருக்கு அஸ்லத் என்ற பெண்ணைத் திருமணம் செய்வதாக நிச்சயிக்கப் பட்டிருந்தது. தடா, போட்டு விட்டது திருமணத்திற்குத் தடை!

அஸ்லத் நவாபின் பெற்றோர், நீதிபதியிடம் திருமணம் பற்றி முறையிட, நீதிபதி சடையப்பன் சிறைச்சாலை யிலேயே மாலை 3 முதல் 5 மணிக்குள் திருமணத்தை நடத்த அனுமதி கொடுத்து விட்டார்.

பிறகு என்ன? குறிப்பிட்ட நாளில் இருவருக்கும் திருமணம் முடிந்தது. மணமகள் தற்போது கணவனின் வருகைக்காக வீட்டில் காத்திருக்கிறாள்!

## இறக்கும் முன்னே...

பிலிப்பைன்ஸின் தேசத் தந்தை என்று போற்றப்பட்ட ரிசலுக்கு நடந்த திருமணம் போல் உலக வரலாற்றில் யாருக்கும் நடந்தது இல்லை.

30.12.1896 அன்று காலை 5 மணிக்கு ரிசலை சுட்டுக் கொன்று அரசு மரண தண்டனையை நிறைவேற்றியது.

தண்டனை நிறைவேற 5 நிமிடங்கள் இருந்தபோது அவருடைய அருமைக் காதலியான அயர்லாந்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

## மீண்டும் திருமணம்!

நாற்பது ஆண்டுகளுக்கு முன், ஸ்வீடனில் வாழ்ந்த விக்டார் என்பவர் திருமணம் செய்து கொண்டார்.

அப்போது, திருமண மோதிரத்தை மணப்பெண்ணின் விரலில் போட அவர் முயன்றபோது, அது தவறிப்போய் ஒரு வைக்கோல் போருக்குள் விழுந்துவிட்டது. எவ்வளவோ பேரை வைத்துத் தேடியும் கிடைக்கவில்லை. ஆனால், குறிப்பிட்ட நேரத்தில் திருமணம் நடந்துவிட்டது.

குழந்தைகள் பிறந்தன. அவருக்கும் வயது 59 ஆகியது. இந்த நிலையில், இவர் திருமணம் நடந்த அதே இடத்தில் 'வாக்கிங்' சென்றபோது, அந்தத் திருமண மோதிரம் பளிச்சென்று அவர் கண்ணில் பட்டு மின்னியது.

பிறகு என்ன நடந்தது? தம்பதிகள் தம் உறவினர், நண்பர்களை அழைத்து விருந்து வைத்து, கோலாகலமாக மீண்டும் ஒரு முறை திருமணம் செய்து கொண்டார்கள்.

நம்மூர் என்றால் இதை அறுபதாவது திருமணம் என்றிருப்போம். அவர்கள் 'புதுத் திருமணம்' என்று சொல்லி இருப்பார்களோ?

## எனக்குப் பிறகு....

90 வயதிலும் ஆல்பிரட் பெர்மியருக்கு தன்னுடைய மனைவி லிட்வினாவின் மீது அளவிட முடியாத காதல். அவளுடைய வயதோ 86.

60 ஆண்டுகளாக கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தாலும், தனக்குப் பிறகு இவளை யார் கண் கலங்காமல் பார்த்துக் கொள்வார்கள் என்ற கவலை ஏற்பட, இவளை நாம் இருக்கும்போதே கொலை செய்துவிட்டால் என்ன என்ற எண்ணம் வரவே, உடனே ஆசை மனைவியின் கழுத்தை நெரித்திருக்கிறார்.

எவ்வளவு முயன்றும் அந்த கிழ மனைவி சாக வில்லை. மயக்கம் ஏற்பட்டு உயிருக்குப் போராடவே பயந்துபோன கிழக் கணவன் மருத்துவமனைக்கு அவசரப் பிரிவிற்கு போன் செய்து இருக்கிறார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கிழவி, இரண்டு நாளில் உயிரை விட்டாள்.

விசாரணையின்போது கிழவரின் எல்லா விபரமும் வெளியில் தெரிய, 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்திருக்கிறார்கள்.

கலிபோர்னியா சிறைக் கைதிகளிலேயே வயதான கைதி என்ற பெருமை இவருக்குத்தான் என்பது வேறு விசயம்!

## நீங்கள் நினைத்தபடி.....

நீங்கள் எந்த இடத்தில் எப்படித் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறீர்களோ அப்படியே செய்து கொள்ளலாம்.

உதாரணத்திற்கு தஞ்சை பெரிய கோயிலில்,வள்ளுவர் கோட்டத்தில், டில்லிக் கோட்டையில், தாஜ்மகாலில், வெள்ளை மாளிகையில் நடக்க வேண்டும் என்று விரும்பு

கிறீர்களா? இதற்காக நீங்கள் எந்த அரசிடமும் அனுமதி பெற அலைய வேண்டாம்.

பின் எப்படி என்கிறீர்களா...?

மும்பையில் உள்ள 'ஷாமியானா டென்ட்' உரிமை யாளர்கள் உங்களது எண்ணம் போலவே செய்து தர ரெடியாக இருக்கிறார்கள்.

உங்களிடம் உள்ள 'ல'கரங்களுக்கு ஏற்ப 'டென்ட்' களை இதுபோல் '(டில்லி) கோட்டை - வெள்ளை மாளிகையை வடிவமைத்துத் தந்து, உங்கள் வீட்டுத் திருமணத்தை ஊரே வியக்கும் வண்ணம் நடத்தித் தந்துவிடுகின்றனர்.

முன்பெல்லாம் எளிமையாக திருமணத்தை கோயிலிலேயே மாலை மாற்றி முடித்துக் கொள்வார்கள். ஆனால், இன்றைய நாகரீக உலகில் பெரிய மண்டபங்களில் நடத்துவதைத்தானே மதிப்பாக எண்ணுகிறார்கள்....

இதற்கும் மேலாக ஒரு படி மேலே சென்று, மும்பைப் பணக்காரர்கள் இப்படி புகழ் பெற்ற கலை வடிவங்களில், பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் கை வண்ணத்தில் திருமணத்தை செய்வதையே நாகரீகமாக கருதுகிறார்கள்.

1995 மே மாதம் 30-ஆம் தேதி நடைபெற்ற ஒரு பணக்காரர் வீட்டுத் திருமணம், விழாவிற்கு சுமார் 50 இலட்சம் செலவில் இதுபோன்ற 'டென்ட்'கள் வடிவமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நடுத்தர வர்க்கத்திற்கு வாய்ப்பு இல்லையா? உண்டு. 25 ஆயிரம்; 35 ஆயிரம் செலவிலும் செய்து தருகிறார்கள்.

# அழைப்பிதழ்....

டில்லியில் ஒரு பெரிய பால் பண்ணையாளர் தன் மகள் திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர்களுக்கு, ஆளுக்கு ஒரு பெரிய பெட்டியை அனுப்பி வைத்தாராம்.

பெட்டிக்குள் என்ன இருந்தது தெரியுமா? பெட்டிக்குள் ஒரு டேப் ரிக்கார்டரும், கேஸட்டும் இருந்ததாம்.

கேஸட்டைப் போட்டதும் திருமணத் தேதி, இடம், ரிசப்ஷன் ஆகியவை பற்றிய விவரங்களைக் கூறியதாம்.

அந்த ரிக்கார்டரைச் சுற்றி உயர் ரக பர்ஃபி-இனிப்பு வைக்கப்பட்டிருந்ததாம்.

இதுபோதாதென்று டேப் ரிக்கார்டரைத் தூக்கினால் அடியில் ஒரு பெரிய வெள்ளி நாணயம்.

போட்டோ பிரேம்களில் அழைப்பிதழ் செதுக்கப் படுவது, ஷாம்பெய்ன் பாட்டில்கள் மீது அச்சிடுவது, வெள்ளித் தட்டில் அச்சிடுவது என்பது எல்லாம் இப்போது இந்த 'காஸ்ட்லி' திருமணங்களில் சர்வ சாதாரணமாக ஆகிப்போய்விட்டது.

ஏழைகளுக்கு இலவசத் திருமணங்கள், கொஞ்சம் இருப்பவர்களுக்கு கோயிலில் திருமணம். இன்னும் சிலரின் திருமணம் பதிவு அலுவலகத்தில்.

இதற்கு நேர் எதிராக, இலட்சக்கணக்கில் பணத்தை வாரி இறைத்து திருமணத்தை நடத்தித் தங்கள் பண பலத்தையும், பதவித் திமிரையும் காட்டி நடத்துகின்ற திருமணங்களும் உண்டு.

அந்த வகையில் 1993-இல் நடந்த திருமணங்களைப் பார்ப்போமா?

சென்னையில் ஒரு பண முதலை. இவரது மகனின் திருமணம். பெண் வாழ்ந்ததோ அமெரிக்கா - நியூயார்க்கில்.

மணமகனின் பந்துக்கள் 50 பேர் விமானத்தில் நியூயார்க்கிற்கு பறந்து போனார்கள். சென்னையில் இருந்து நியூயார்க் போய்வர ஒரு டிக்கெட்டிற்கு ரூ.50,050 ஆக விமானப் பயணத்திற்கே 25 லட்சம் ரூபாய் செலவு.

அங்கே திருமணத்திற்கு செலவுகள் என்ன நடந்தது என்பது வேறு கணக்கு.

திருமணம் முடிந்த புதுமணத் தம்பதிகள், தேனிலவிற்கு மொரீஷியஸ் தீவிற்கு சென்று சென்னை திரும்பியதும் ஒரு வரவேற்பு பார்ட்டி தரப்பட்டது.

வரவேற்பு மண்டபத்தின் வாயிலில் அழகாக அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று விருந்தினர்களை வரவேற்க நிறுத்தப்பட்டிருந்தது.

அழைக்கப்பட்ட பெரும் புள்ளிகள் எல்லாம் கோடீஸ்வரர்கள் மட்டுமே.

## கோட்டைக்குள்ளே....

பரத் ஷா என்று மும்பையில் ஒரு வைர வியாபாரி. கடை வைத்து நடத்துபவர் அல்ல. வெளிநாடுகளுக்கு வைரத்தை ஏற்றுமதி செய்பவர்.

தன் மகள் திருமணத்திற்காக மும்பையின் பிரபல வான்கடே கிரிக்கெட் ஸ்டேடியத்தையே வாடகைக்கு

எடுத்து, அதை அரண்மனைபோல பல கோடி ரூபாயில் அலங்கரித்து, அதில் திருமணத்தை நடத்தினார். இவரது சம்பந்தியும் ஒரு பிரபல வைர வியாபாரியே.

இவரே தன் குடும்பத்தில் நடந்த இன்னொரு திருமணத்தை எப்படி நடத்தினார் தெரியுமா?

பெல்ஜியம் நாட்டில் அன்ட்வெர்ப் என்னும் இடத்தில் ஒரு பிரபலமான கோட்டையை அமர்த்தியிருக்கிறார்.

அங்கே, நடுவே தாமரை மலர்போல் அலங்கரிக்கப் பட்டிருந்தது திருமண மண்டபம்.

வந்த விருந்தினர்களை சொகுசு மோட்டார் படகில் அழைத்துச் சென்றிருக்கிறார்கள் அங்கே.

அப்புறம், திருமணச் சடங்கு நடக்கும் 'ஷாமியானா' என்ற மணமேடை. மூன்று மணி நேரமே நிகழ்ச்சிகள் நடைபெறும் இந்த ஷாமியானாக்களை நிர்மாணிக்க எவ்வளவு லட்சங்கள் செலவானதாம்...!

## சளைக்காதவர்கள்....

ஆடம்பரத் திருமணங்கள் நடத்துவதில் தொழில் முதலைகளுக்கு கொஞ்சமும் சளைத்தவர்கள் கிடையாது அரசியல்வாதிகள். இவர்களுக்கு பண பலத்தோடு அதிகாரமும் இருப்பதால், பல வசதிகளை ஓசியிலேயே பெறும், பெரும் வாய்ப்புகள் உண்டு.

கர்நாடகா முதல்வர் வீரப்ப மொய்லியின் மகள் திருமணம் அகமதாபாத்தில் நடந்தது. இதற்கு குஜராத் சீஃப் செகரட்டரி, வீரப்ப மொய்லியின் குடும்பத்தினருக்கு

வேண்டும் சகல வசதிகளையும் செய்து தருமாறு போலீஸ், கலெக்டர், போக்குவரத்து சர்வீஸ், கட்டட இலாகா ஆகியோருக்கு மறைமுக ஆணை இட்டதாய் சொல்லப் பட்டது. அதுபற்றி கர்நாடகா அசெம்பிளியிலும் மொய்லி மீது குற்றஞ்சாட்டி விவாதிக்கப்பட்டது.

## 600 உணவு.....

**ஹ**ரியானாவின் முதல் அமைச்சராய் இருந்த பஜன்லால், தன் மகன் திருமணத்தை இப்படித்தான் நடத்தினார்.

ஹிசார் என்ற கிராமம்தான் மணப்பெண்ணின் இருப்பிடம். சண்டிகாரிலிருந்து அந்தக் கிராமத்திற்கு 700 கார்களில் தன் சகாக்களோடு போய்ச் சேர்ந்த அவருக்கு, அந்தக் கிராமத்தில் சிவப்பு ரத்தினக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆதம்பூர் என்னும் இடத்தில் 50,000 பேருக்கு சாப்பாடு. அதில் 600-க்கும் மேற்பட்ட உணவு வகையறாக்கள் பரிமாறப்பட்டதாம்.

## அந்தரத்தில்.....

**சீ**னாவில் நடந்த புதுமைத் திருமணம் இது. 16.6.1996-ஆம் ஆண்டு சீனாவைச் சேர்ந்த ஷாங்ஜூன், மாங்க் டங்கா ஜோடி திருமணம் செய்து கொண்டார்கள்.

இவர்கள் திருமணத்திற்கு பந்தல் போடவில்லை. பந்தங்களை அழைக்கவில்லை. நிலவிலும் நடத்தவில்லை. நிலத்திலும் நடத்தவில்லை! பிறகு?

காதலர்கள் இருவருமே பாராசூட் சாம்பியன்கள். இதனால் வடக்கு பீஜிங்கில் 1500 மீட்டர் உயரத்தில் இருந்த பாராசூட்டில் இருந்து குதிக்கும்போதே திருமணம் செய்து கொண்டார்கள்.

தரையில் இறங்கியபோது இவர்கள் புதுமணத் தம்பதிகளானார்கள்.

## பாதகி

பங்களாதேஷ் - குஷ்தியா மாவட்டம், இங்கே லத்தீப் என்னும் இளைஞரும் சார்மின் என்ற பெண்ணும் காதலித்தனர்.

திருமணத்திற்கு பெண் வீட்டில் எதிர்ப்பு. இருப்பினும் அதை கண்டு கொள்ளாமல் இருவரும் மனம் விரும்பி திருமணம் செய்து கொண்டனர்.

பெண்ணின் தாய்க்கு வந்ததே கோபம். உடனே தன் ஆட்களை அனுப்பி மாப்பிள்ளை லத்தீப்பை கடத்திக் கொண்டு வந்துவிட்டார்.

மாப்பிள்ளையை நேரில் பார்த்ததும் மேலும் கோபமாகி, அவரது அந்தரங்க உறுப்புகளை வெட்டிவிட்டார், பின் என்ன?

முதலிரவிற்குப் போக வேண்டிய மாப்பிள்ளை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டு, அங்கு இறந்து போனார்.

'மகள் தாலி அறுத்தாலும் பரவாயில்லை மருமகன் செத்தா பாதகமில்லை' என்ற பழமொழி இந்த மாமியாருக்காகத்தான் சொல்லப்பட்டதோ!

## முதல் ஜனாதிபதியின் திருமணம்!

பீகார் மாநில கிராமங்களில் நடக்கும் திருமணமும், சடங்குகளும் விநோதமான ஒன்றாகும்.

இங்கே மாப்பிள்ளை வீட்டார், பெண் வீடு இருக்கும் இடத்தை நோக்கிப் பெரிய நீண்ட ஊர்வலமாகப் புறப்படுவார்கள்.

நாலு பேர் தூக்கும் அலங்காரப் பல்லக்கில் மாப்பிள்ளை 'ஜம்'மென்று அமர்ந்து இருப்பார். அவர் பின்னே யானை, குதிரை, மாட்டு வண்டிகள் அடுத்தடுத்து வரிசையாக அணி வகுத்து வரும். மக்கள் நடந்தும், வண்டிகளிலும் செல்வர். வழிப்பாதை ஓரம் எல்லாம் மக்கள் நின்று பார்ப்பார்கள்.

நம் பாரதத்தின் முதல் ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் திருமண ஊர்வலமும் இந்த வகையில்தான் நடந்தது.

அப்படி திருமண ஊர்வலம் செல்லும் வழியில் ஆறு குறுக்கிட, மக்கள் படகில் ஏறி ஆற்றைக் கடந்தனர். குதிரைகளும், மாட்டு வண்டிகளும் நீந்திக் கடந்தன. யானை, தண்ணீருக்குள் இறங்க மறுத்துவிட்டது. (என்ன காரணமோ?)

ஊர்வலத்தில் யானை ஆற்றைக் கடந்து வரவில்லையே என்று அவரின் தந்தைக்கு கோபம். எப்படியும் திருமண ஊர்வலம் யானையுடன்தான் நடக்க வேண்டும் என்ற அவரின் கோபத்தை தணிப்பதுபோல், வேறொரு திருமண ஊர்வலம் அக்கரையில் வர, அதில் வந்த இரண்டு யானைகளை அமர்த்தி ஊர்வலத்தைத் தொடர்ந்தனர்.

மாப்பிள்ளை வீட்டார் நள்ளிரவில் மணப்பெண் வீட்டை அடையும் நேரம் - ராஜேந்திர பிரசாத் அவர்கள் பயணக் களைப்பால் பல்லக்கிலேயே உறங்கிப் போனார்.

மணச் சடங்கை செய்ய, அவரைப் பெரும்பாடுபட்டு எழுப்பினார்களாம். உறக்கக் கலக்கத்திலேயே, உறங்கி வழிந்த நிலையிலேயே உறங்கி வழிந்த மணமகளைத் திருமணம் செய்தாராம்.

அப்போது அவருக்கு பன்னிரெண்டு வயது!

## அன்றே....

புரட்சிகரமான திருமணத் திட்டம் இது. ஒரு மனைவியை கணவன் பிரிந்து வெகுநாள் வெளியே தங்கி இருந்தாலோ அல்லது அலியாகிவிட்டாலோ மனைவி அவனை உடனே மண விலக்கு செய்யலாம்.

கணவன் வெளியூர் சென்று வெகுகாலமாகத் திரும்பா விட்டாலும், இறந்தோ அல்லது துறவியாகிவிட்டாலோ மனைவி இரண்டாவது திருமணம் செய்து கொள்ளலாம்.

இத்தகைய மனைவிகள் தங்கள் கணவர் பிரிந்த பின், கணவரின் சகோதரர்களாலோ, உறவினர்களாலோ, பாதுகாக்கப் படாமல் தனியே இருந்தாலோ, வேறு எவரையோ அவள் தன் எண்ணம்போல் திருமணம் செய்து கொள்ளலாம்.

இந்த புதுமையான - புரட்சிகரமான திட்டங்கள் எப்போது இருந்தன? ஹர்ஷ வர்த்தனர் மன்னர் காலத்தில்தான். இதைவிட ஒன்றை உடனடியாகச் செய்தார்.

தன் உடன் பிறந்தவள் ராஜ்யஸ்ரீ, தன் கணவரைப் பிரிந்தபோது துன்பம் தாளாமல் நெருப்பில் விழுந்து

உயிர்விடத் துணிந்தபோது, ''நீ வாழ வேண்டியவள்'' என்று தடுத்து நிறுத்தினார். பின் அவளும் மனம் மாறி வாழ்ந்ததோடு, ஆட்சிப் பொறுப்பிலும் அங்கம் வகித்தாள். ஹர்ஷ வர்த்தனர், அவளை யுவான் சுவாங்கிடம் சட்டம் பயில வைத்து, தேர்ச்சி பெறவும் செய்தார்.

## அடேயப்பா... திருமணம்!

முன்னாள் யூனியன் சிவில் ஏவியேஷன் ஸ்டேட் மினிஸ்டர் ஹர்மோகன் தவானின் மகள் திருமணம் நடந்தது எப்படித் தெரியுமா?

சண்டிகார் மக்கள் இது மாதிரி திருமணத்தைப் பார்த்தது இல்லை என்று வியந்து போனார்களாம்.

திருமணத்திற்கு முதல் நாள் டில்லியில் இருந்து சண்டிகாருக்குச் செல்லும் ஷதாப்டி எக்ஸ்பிரஸ் டிரைனில் ஒரு டிக்கெட் கூட பொதுமக்களுக்குக் கிடைக்கவில்லை.

ஏனென்றால் டில்லியில் இருந்து வரும் மணமகன் கோஷ்டிக்கு எக்ஸ்பிரஸ் டிரைனில் டில்லி போக வேறு யாருக்கும் டிக்கெட் கிடையாது.

சண்டிகாரில் மவுன்ட் வியூ, ஷிவாலிக் வியூ, ஸ்டேட் கெஸ்ட் ஹவுஸ் எல்லாமே மணமகன் கோஷ்டிக்காக புக் செய்தாகிவிட்டது.

சண்டிகாரில் இருந்த அனைத்து மத்திய தர, மேல்மட்டக் குடும்பங்கள் எல்லாவற்றிற்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. அதுவும் எப்படி என்றால், முழுவதும் நெய்யால் செய்யப்பட்ட இனிப்புகள் அடங்கிய பெட்டியுடன்!

திருமணம் தேர் திருவிழா போல் நடந்ததாம். திருமணக் கூட்டத்தில் குழந்தைகள் தவறிப்போய் மைக் மூலம் அறிவிப்புச் செய்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங் களேன்.

திருமணத்திற்கு மொய் எழுதிய கவர்கள் அடங்கிய பாலிதீன் பைகளைப் பிரித்து எண்ணுவதற்கே 5 மணி நேரம் ஆயிற்றாம். மொய்ப் பணம் 2.35 லட்சம்.

ஆனால், தவான் திருமணத்தைப் பற்றி சொன்னதுதான் சூப்பர்.

''என்னவோ இது ரொம்ப ரொம்ப ஆடம்பரமான திருமணம் என்கிறார்கள். சுத்தப்பேத்தல். இதுமாதிரி சோஷலிஷ பாணியில் நடத்தப்பட்ட எளிமையான திருமணமே கிடையாது.''

## மீண்டும் திருமணம்!

டென்மார்க் நகரில் ஆல்போர் என்னும் இடத்தில் ஆகாகார்ல்சன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு கேப்டன். 1811-இல் தனது 20-வது வயதில் திருமணம் செய்து கொண்டார். அவர் நாடோடி வாழ்க்கை வாழ்வதில் மிகுந்த நாட்டம் கொண்டவர்.

மனைவி வந்த பின்னர் தன் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. அவளையும் தன்னோடு ஊர் சுற்ற அழைத்தார்.

அந்த வாழ்க்கை அவளுக்குப் பிடிக்காததால் மறுத்தாள். வாக்குவாதம் முற்றியது. அவர் வாழ்க்கைக்கு

தான் இடையூறாக இருக்க வேண்டாமே என்பதால் விவாகரத்து செய்துவிட்டு ஆள் கிளம்பிவிட்டார். விவாகரத்தின்போது மட்டும் மனைவியிடம் நான் என்றும் மறவேன்'' என்று மட்டும் கூறினார்.

1811-இல் டென்மார்க்கை விட்டு புறப்பட்ட ஆகாவைப் பற்றி 19-ஆம் நூற்றாண்டு முடிய எந்தவித தகவலும் இல்லை.

இருபதாம் நூற்றாண்டு பிறந்தபோது அவரது கடந்த கால மனைவி உயிரோடு இருப்பதாக தகவல் கிடைத்தது. 1903-இல் ஆகா தன் நாட்டிற்குத் திரும்பினார். 92 ஆண்டுகளாக பார்க்காத தன் மனைவியைப் போய் பார்த்தார்.

விவாகரத்து செய்த அந்த மனைவி மிகுந்த மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றாள். அவள் மீண்டும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதை அறிந்த அவர், அவள் முன் பணிந்து தன்னைக் கணவனாக மறுபடியும் மணந்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்.

அவளும் இசைந்து இருவரும் மீண்டும் திருமணம் செய்து கொண்டு கணவன் மனைவியாக ஆனார்கள்.

1903-இல் முன் அனுபவிக்காத இல்லற வாழ்க்கையில் இன்பமுடன் ஈடுபட்டார்கள். தங்களது முதல் திருமணத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார்கள்.

அடுத்த ஆண்டே இருவரும் இறந்தார்கள்.

## மனம் விரும்பி....

இங்கிலாந்தில் ஒரு பெண்ணிற்கு நீண்ட அளவில் தாடியும், மீசையும் வளரத் தொடங்கியது. கலைந்தாலும் களைபோல் மீண்டும் முளைவிட்டு வளரத் தொடங்கியது.

தாடி, மீசையோடு வளர்ந்த அவள் பருவமும் அடைந்தாள். எந்த ஆடவரும் அவளை கண்டு கொள்ளவே இல்லை. அவளையொத்த பெண்கள் எல்லாம் திருமணம் முடித்து மகிழ்ச்சியோடு இருந்தார்கள். அவளோ பருவம் வந்தும் திருமணம் நடக்காமல் இருந்தாள்.

இவளது நிலையையும், ஏக்கத்தையும் கண்டு, ஒரு இளம் பெண்ணின் தந்தை மனம் விரும்பி மணம் முடித்துக் கொண்டார்.

அவர் தாடி, மீசையோடு இருந்தாரா, மழித்துவிட்டுக் கொண்டிருந்தாரா என்பது தெரியவில்லை.

## அப்படியா செய்தி...

நீரோ மன்னனைப் பற்றி அறிந்து இருப்பீர்கள். அவன் ரோமாபுரி சக்கரவர்த்தி என்றும், ரோம் நகர் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்தான் என்றும், (அவன் காலத்தில் பிடில் இருந்ததா? இல்லையா என்பது ஆய்விற்குரிய வேறு செய்தி).

அவன் பெரிய அளவிலே விழா ஒன்றினை நடத்தித் தனது அடிமை ஸ்கோரசைத் திருமணம் செய்து கொண்டான்.

இதில் என்ன வியப்பு இருக்கிறது? அந்த அடிமை ஓர் ஆண்!

(ஓ, அந்தக் காலத்திலேயே... லெஸ்பியனா? வாழ்க!)

## மனித நேயத்தோடு...

அமெரிக்காவில் - சர்க்கஸ் ஒன்றில் பணியாற்றி எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி வந்த சித்திரக் குள்ளன் 'டாம் தம்ப்' என்பவருக்கும், அதே சர்க்கசில் வேலை செய்த சித்திரமான குள்ளி லவீனியா பம்ப் என்பவளுக்கும் திருமணம் நடைபெற்றது. காதலோடுதான் கைப் பிடித்தார்கள்.

இந்தத் திருமணத்திற்கு நண்பர்களும், உறவினர்களும் வந்து வாழ்த்தியதோடு, அமெரிக்காவின் அப்போதைய குடியரசுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கன் தனது துணைவி யாரோடு வந்து வாழ்த்தினார்.

அது மட்டுமல்ல... அவரது மந்திரி சபையில் பங்கேற்றிருந்த அனைத்து பேர்களும் வந்திருந்தனர்.

அது அப்போது தேவலோகத் திருமணம் என்று சிறப்பித்துப் பேசப்பட்டது.

## கம்ப்யூட்டரில்....

மணமகனும் மணமகளும் ஒருவரை ஒருவர் சந்திக்காமலே, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தபடியே திருமணம் செய்துகொள்ள முடியுமா என்று கேட்டால், முடியும் என்று சொல்கின்ற நிலையில்தான் இன்றைய அறிவியல் வளர்ச்சி இருக்கிறது.

ஆமாம், 1996 பிப்ரவரி 14-ஆம் தேதி கலி போர்னியாவில் இருந்து மணமகனும், ஹாலிவுட்டில் இருந்து மணமகளும் சுற்றமும் நட்பும் சூழ கம்ப்யூட்டர் மூலம் திருமணம் செய்து கொண்டனர்.

இந்த நல்ல காரியத்திற்கு இரண்டு அமெரிக்காவைச் சேர்ந்த கம்ப்யூட்டர் நிறுவனங்கள் உதவி இருக்கின்றன.

மணமக்களை கம்ப்யூட்டர் திரையில் கொண்டு வந்து, மோதிரம் மாற்றச் செய்து திருமணத்தை இனிதே நடத்தியுள்ளனர்.

இனி அடுத்து என்ன? சந்திர மண்டலத்தில்தான் திருமணங்கள் நடக்க வேண்டுமோ?

## ஆடு, மாடுகளைப் போல....

ஆடு மாடுகளுக்கு மட்டும்தானா 'சந்தை' கூடுகிறது. திருமணத்திற்கு வேண்டிய பெண்களைத் தேர்ந்தெடுப் பதற்கும் சந்தை கூடுகிறது என்றால், நம்புங்கள். எங்கே?

ருமேனியா என்ற நாட்டில் கெய்னா மலைப்பகுதியில் 'கன்னிப் பெண்கள் சந்தை' கூடுகிறது. இந்த மலைப் பகுதியில் வாழும் மக்களுக்கு முக்கியமான தொழில் ஆடு மேய்ப்பதாகும்.

இவர்களில் ஆண்கள் பெரும்பாலோர், ஓர் ஆண்டில் பாதி நாளைக்கு மேல் குடியிருப்பு இடங்களுக்குத் திரும்பாமல், ஆடு மேய்க்கும் தொழிலிலேயே கவனமாக ஈடுபட்டு இருப்பார்கள்.

இவர்கள் திரும்பி வந்ததும், திருமணத்திற்காக பெண் தேடும் காலத்தை வீணே செலவழிக்க விரும்புவது இல்லை. அதனால் அப்பகுதிகளில் உள்ள கல்யாணமாகாமல் இருக்கும் கன்னிப் பெண்கள் எல்லோரும், ஆண்டிற்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூட வேண்டும்.

அப்பொழுது அங்கு வரும் ஆண்கள், கன்னிப் பெண்களில் யார் யாருக்கு ஜோடியாக சேர விருப்பம் இருக்கிறதோ, அவர்களின் திருமணம் நடக்க ஏற்பாடு ஆகிறது.

இது கெய்னா மலைப்பகுதி மக்கள் தொடர்ந்து வரும் பழக்கமாகும்.

தற்காலத்தில் இந்தப் பகுதிக்கு பயணிகளாக வருவோரும் தங்களுக்கு வேண்டிய கன்னிப் பெண்ணை கரம் பிடிக்கலாம்.

ஒரு நிபந்தனை! ஒருவருக்கு ஒருத்திதான்!

## ‘பிக்சட்...’

1993-ஆம் ஆண்டு பல மதங்களைச் சேர்ந்த 33 கல்யாண ஜோடிகள் ஒரே இடத்தில் கோட்டயத்தில் பெரிய அளவில் கல்யாணம் செய்து கொண்டார்கள்.

மலாங்காரா என்ற இடத்தில் இந்த 33 ஜோடிகளுக்குத் திருமணம் நடந்தது. இவர்களில் கிறிஸ்துவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், மற்ற மதத்தினரும் இருந்தனர்.

ஒவ்வொரு ஜோடியின் பெயரிலும் 10,000 ரூபாய் தொகை பிக்சட் டெபாசிட் போடப்பட்டு, அதன் இரசீது அவர்களிடமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

## முதலிரவு!

நியூ ஜெனிவாவிலுள்ள கிழக்கத்தியத் தீவுகளில் ஒன்று 'கிம்மமி' தீவு.

இத்தீவிலுள்ள வயது வந்த ஓர் ஆணும் பெண்ணும் விரும்பினால், இரு வீட்டாருமே சேர்ந்து திருமணத்தை நடத்தி வைக்கிறார்கள்.

இங்குள்ள பெண்கள், இடுப்பில் நார் நாராக மணிகள் கோர்க்கப்பட்ட இழைகளைச் சேர்த்துக் கட்டிக் கொள்கிறார்கள். ஆண்களும் அப்படியே.

இவர்களுடைய முதலிரவு கொஞ்சம், இல்லை மிகமிக வித்தியாசமானது.

திருமணம் முடிந்து விருந்தெல்லாம் நடந்தபின் அன்றிரவே முதலிரவு நடக்கும்.

எப்படி? ஒரு பந்தல். அந்தப் பந்தலுக்குள்ளே வட்டமாக பெரியவர்களும், பெண்களும், சிறுவர்களும் உட்கார்ந்து பாட்டுப் படிக்க, அவர்களின் மத்தியில் புதுமணத் தம்பதிகள் இருவரும் நிர்வாணமாக உடலுறவு கொள்வார்கள்.

(அறையில் நடக்க வேண்டியது அம்பலத்தில்... அடச்...சீ...!')

## இரண்டு வார காதலி...

காதலுக்கு கண் இல்லாமல் இருந்துவிட்டுப் போகட்டும். கணக்குமா இல்லாமல் இருக்க வேண்டும்?

இப்படித்தான் நமக்கு எண்ணத் தோன்றுகிறது.

உசேன் என்ற சுப்பிரமணி. இவர் சென்னை ஓட்டேரியைச் சேர்ந்தவர்.

இவருக்கு காதல் என்பது நாளொரு 'மேனியும்', பொழுதொரு வண்ணமும் காதலிப்பதுதான். இந்தக் கில்லாடி, 16 முறை திருட்டுக் குற்றத்திற்காக தண்டனை பெற்று, சிறைக்கும் சென்று வந்தவர்.

இவரது மறுபக்க விசேஷம் பெண்களைக் காதலிப்பது தான். அதுவும் எப்படி? எந்தப் பெண்ணையும் இரண்டு வாரங்களுக்கு மேல் காதலிப்பது இல்லை.

ஆனால், எந்தப் பெண்ணைக் காதலித்தாரோ, அந்தக் காதலியின் நினைவாக அப்பெண்ணின் பெயரையும், காதலிக்கத் தொடங்கிய தேதியையும் உடல் முழுதும் பச்சைக் குத்திக் கொண்டுள்ளார்.

இப்படியே செய்தால் எப்படி? என்று கேட்டால், 'கல்யாணம் எல்லாம் வேஸ்ட். இதுதான் மனிதனுக்கே டேஸ்ட்' என்கிறார் மனிதர்.

## உறை பனியில்...

**ந**டுங்கும் குளிரில் நடந்த திருமணம் இது!

செயின்ட் பாலைச் சேர்ந்த மின்னி சோட்டாவில் பூஜ்யம் டிகிரிக்கும் கீழே பாயின்ட் நான்கு மூன்று என்ற அளவில் உறை பனி இருக்கிற இடத்தில் 'உறைபனித்

திருவிழா' கொண்டாட்டத்தின் போது, 'ஷெர்ரி நீரி மற்றும் கென்வால்க்ரென்' ஆகிய இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

திருமண மோதிரம் மாற்றிக் கொள்ள வேண்டிய வேளையில் கையுறைகளைக் கழற்றிவிட்டு மோதிரம் போட்டாராம்.

மோதிரம் அணிந்து முடித்த உடனேயே இருவரும் சறுக்குப் பாதையில் அறுபதடி வரை சறுக்கிக் கொண்டே வந்து முத்தமிட்டுக் கொண்டார்களாம்.

கணவனின் மீசையில் பனி படிந்து இருக்குமே! எப்படி அவள் முத்தமிட்டு இருப்பாள்? துடைத்துவிட்டுத்தான்! கையாலா? உதட்டாலா? எப்படி இருந்தால் என்ன? முதல் முத்தம் இனிக்கத்தானே செய்யும்!

## இவர்களின் பழக்கம்...

**ம**த்திய காலத்தில் நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட திருமணத்தை இரத்து செய்ய விரும்பினால், திருமணம் நிச்சயிக்கப் பட்ட ஆணிடமோ, பெண்ணிடமோ சிவப்பு நிறப் பூக்களை உடைய மலர்ச் செடியின் கிளை ஒன்றைக் கொடுத்து சம்பந்தப்பட்ட வீட்டுக்கு அனுப்புவார்கள்.

நிச்சயதார்த்தம் செய்து கொண்ட வீட்டார் இதைப் பார்த்து திருமணம் வேண்டாம் என்பதைப் புரிந்து கொண்டு, தாங்களும் திருமண நிச்சயதார்த்தத்தை இரத்து செய்து கொள்ள ஒப்புக் கொண்டுவிடுவார்கள். இந்தப் பழக்கம் இங்கிலாந்தில் தோன்றிய பழக்கமாகும்.

## அவ்வளவுதான்...

எந்த வயதிலும் ஆசை வரும். அப்படியே காதலும் வரும்.

அப்படியே ஒரு அரசியல்வாதிக்கு காதல் திருமணத்தில் ஆசை வந்தது.

இந்த ஆசைக்கு உட்பட்ட அரசியல்வாதி, பிரியரஞ்சன்தாஸ் முன்ஷிதான். இவர் கல்கத்தாவைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்.

இவர் திரைப்பட நடிகை தீபா கோஷைக் கண்டவுடன் காதல் கொண்டுவிட்டார்.

இவர் நடிகையைக் கண்ட வருடம் 1984. இந்த இருவர் காதலும் நீர் கண்ட பயிர் போலே வளர்ந்தது. வளர்ந்து செழித்த காதல், 1994-இல்தான் திருமணத்தில் முடிந்தது. ஏன்? இந்த இடைவெளியான 10 ஆண்டுகள்?

பெரிதாக ஒன்றுமில்லை. தீபா கோஷின் கணவரிட மிருந்து (இவர் கேமராமேன்) விவாக ரத்து பெற தாமதமாகி விட்டது. அவ்வளவுதான்!

## 66 வயதில், 90 மனைவி!

ஒரிசா மாநிலம், ஒராலி என்ற ஊரில் உள்ளவர் உதயநாத். இவரது சாதனை கின்னஸில் இடம் பெற வேண்டிய ஒன்று.

அப்படி அவர் என்ன சாதனை செய்துவிட்டார்? இதுவரை 90 பெண்களைத் திருமணம் செய்து இருக்கிறார்.

ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்த 66 வயதான உதய நாத்திற்கு வேறு எந்தவித தீய பழக்கமும் கிடையாது. இவருடைய ஒரே பொழுதுபோக்கு உடலுறவு கொள்ளுதலே.

1949-ஆம் ஆண்டு சிவப்ரியா என்ற பெண்ணை திருமணம் செய்தார். இவர் திருமணமான 15 நாட்களில் இவளுடைய பிறந்த வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

நீதிமன்றத்தின் வழியாக அவளைத் திரும்பத் தன் வீட்டிற்குக் கொண்டு வரும் முயற்சியில் தோல்வி அடைந்தார். பல ஆயிரங்கள் செலவு ஆனதுதான் மிச்சம்.

அப்போது இவர் எடுத்துக் கொண்ட விந்தையான சபதம்தான், தன் வாழ்நாளில் 100 பெண்களைத் திருமணம் செய்து கொள்வது என்பது. அவரது 61-வது வயதில் 90-வது மனைவியாக 16 வயதுப் பெண்ணை மணம் செய்து கொண்டார்.

70 மனைவிகளை வைதீக முறைப்படியும், 20 மனைவிகளை 'செட்-அப்' முறையிலும் திருமணம் செய்து கொண்டார்.

24 மனைவிகள் இறந்துவிட்டனர். 50 மனைவிகள் இவரை விட்டுச் சென்றுவிட்டனர். இவருடன் இருக்கும் மனைவிகளுக்கு சொத்து, வீடு என்று எழுதி வைத்திருக்கிறார். எல்லோரையுமே தனித்தனியாகத்தான் வைத்திருக்கிறார். இவருக்கு 11 குழந்தைகள்தான்.

இன்னும் 10 பேரை திருமணம் செய்து சதம் அடிக்க வேண்டிய இவர் வறுமையில் இருக்கிறார். இந்த வயதிலும் தனக்கு ஆண்மை பலம் அதிகம் என்கிறார். 'என்னுடைய

வறுமையில் பங்கு கொண்டுதானாக வேண்டும் வரப் போகும் மனைவிகள்' என்கிறார்.

90 மனைவிகளை மணம் புரிந்துகொண்ட இவர், பலதாரத் திருமணச் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருப்பது விந்தையே!

## கடத்தல் திருமணம்!

**வ**ரதட்சணை பிடியில் மாட்டிக் கொண்டு இங்கே பல பெற்றோர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், பீகாரில் கோதைதிகி என்ற கிராமவாசிகள் வரதட்சணைப் பேயை முறியடிக்க ஓர் அருமையான வழியைப் பின்பற்றுகிறார்கள். அதுதான் மணமகன்கள் கடத்தல்.

அந்தக் கிராமத்தில் பருவம் வந்த பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க என்று முதலில் ஒரு குழுவை நிறுவுகிறார்கள். அந்தக் கமிட்டியின் உறுப்பினர்கள் குழு குழுவாகப் பிரிந்து கிராமத்தை விட்டு நாலா பக்கமும் புறப்படுகிறார்கள்.

திருமண வயது வாலிபர்கள் பஸ், இரயில், கடைவீதி என்று எங்கு கண்ணில் பட்டாலும் பட்டென்று தாவிப்பிடித்து கடத்தி வந்துவிடுகிறார்கள்.

பின் என்ன? மணமகன் அகப்பட்டாயிற்று; ஏற்கனவே மணமகள் ஓ.கே. அப்புறம் மேளதாளம்தான்!

அந்தக் கிராமத்துப் போலீசுக்கு வரதட்சணை கொடுமையால் இவ்வளவு பெண்கள் வாழ்விழந்து

வாடுகிறார்களே என்று ஓர் அனுதாபம். அதனால், கடத்திக் கொண்டு வரப்பட்ட மணமகன் என்ன பிடிவாதம் பண்ணினாலும் அவர்கள் கண்டு கொள்வதேயில்லை. இந்த முறை நம் நாட்டில் வந்தால் எப்படி இருக்கும்?

## வளைத்துப் போட்டு...

எகிப்தைச் சேர்ந்தவர் காலித் குவெஷ்டா. இவருக்கு உலகம் முழுவதும் சுற்றிவரும் கப்பல் கம்பெனி ஒன்றில் பணி. நாடு விட்டு நாடு போகும் போது, அந்த நாட்டில் தங்கியிருக்கும் சில நாட்களிலேயே எப்படியாவது அந்த நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்ணை வளைத்துப் போட்டு விடுவார்.

வளைத்துப் போடுவதோடு நிற்காமல், அந்தப் பெண்ணை திருமணமும் செய்து கொண்டு விடுவாராம்.

இப்படி இவர் திருமணம் செய்து கொண்ட திருமணங்கள் மொத்தம் அறுபது ஆகும். நிறையப் பெண்களைத் திருமணம் செய்து கொண்ட கொஞ்ச நாட்களிலேயே அவர்களிடமிருந்து விவாக ரத்து வாங்கி விடுவாராம்.

சிரியா, ஈராக், ஜோர்டான், டர்க்கி, கிரீஸ், போர்ச்சுக்கல், பிரிட்டிஷ் மற்றும் டோக்கியோவைச் சேர்ந்த மனைவிகள் மிக எளிதாக விவாக ரத்துக்குச் சம்மதித்து விடுகிறார்கள். இத்தாலியைச் சேர்ந்த மனைவிதான் இவரை கோர்ட் வரை இழுத்து ஒரு வழியாக ஆக்கிவிட்டாராம்.

## போர்க் கப்பலில்...

இங்கிலாந்து இராணுவத்தில் பெண் அதிகாரியாக இருப்பவர் ஜாக்கி ரூர்க்கி. வயது 28. இவர் இராணுவத்தில் இருக்கும் தனது காதலர் ஜான் வாக்கரை திருமணம் செய்து கொள்ள விரும்பினார். கொஞ்சம் வித்தியாசமாக - இலங்கை அல்லது மாலத் தீவுக்குச் சென்று திருமணம் செய்யலாம் என்று காதலர் இருவரும் முடிவு செய்தார்கள்.

ஆனால், இவர்கள் எண்ணத்தில் விதி விளையாடி விட்டது.

பால்கன் பகுதியில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குரோஷிய நாட்டு கடலோரப் பகுதிக்கு இங்கிலாந்து படைப்பிரிவு சென்றது. இவர்களும் அங்கு அனுப்பப் பட்டனர்.

இந்த நிலையில், வேறு வழியில்லாமல் பிரிட்டிஷ் போர்க் கப்பலான 'போர்ட் ஜார்ஜ்' என்ற கப்பலில் இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள்.

தேனிலவை இவர்கள் குரோஷிய நாட்டில் உள்ள பிராக் தீவில் கொண்டாடினார்கள்.

போர்க் கப்பலில் திருமணம் நடந்தது சரிதான். வாழ்க்கை போர்க் களமாக இல்லாது இருந்தால் சரிதான்!

## கல்யாணம்...?

பிரபல இந்தி திரைப்படக் கலைஞர் நீனா குப்தா. வெஸ்ட் இன்டீஸ் கிரிக்கெட் வீரர் விவின் ரிச்சர்ட்ஸ்

என்பவரிடம் மனதைப் பறிகொடுத்து, காதலித்து, குழந்தையும் பெற்றுக் கொண்டாள்.

குழந்தை பெற்றது பெரிய விஷயமா? இல்லை. எங்கும், எப்போதும் நடப்பதுதான்.

கல்யாணம் பண்ணாமலேயே இப்படி ஜாலியாக இருப்பதுதான் கொஞ்சம் நெருடலாக இருக்கிறது.

ஆனால், இந்த ஊரையும் உலகத்தையும் அவர்கள் கொஞ்சமும் திரும்பிப் பார்க்காது, கோவாவில் அடிக்கடி தங்களின் குழந்தை மஸாபாவுடன் சந்தித்துக் கொள்வது சர்வசாதாரணமாக இருந்தது!

## புரோக்கர் தீவிரவாதிகள்...

ஜம்மு, காஷ்மீர் தீவிரவாதிகளின் திடுக்கிடும் திருமணங்கள் இது.

இவர்கள் துப்பாக்கி முனையில் இளம் பெண்களையும், அவர்களுடைய பெற்றோர்களையும் பயம் காட்டி திருமணங்களை நடத்தி வருகிறார்கள்.

இவர்கள் இளம் பெண்களுடைய பெற்றோர்களுக்கு ''உங்கள் பெண்ணை நாங்கள் குறிப்பிடும் நபருக்கு, அதாவது மற்றொரு தீவிரவாதிக்கு நீங்கள் திருமணம் செய்து கொடுக்க வேண்டும். மறுத்தால் நீங்களும் உங்கள் பெண் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் கொலை செய்யப் படுவீர்கள்'' என்று பயமுறுத்து கிறார்கள்.

தீவிரவாதிகளுக்குப் பயந்துகொண்டு பெண்களும், அவர்களது பெற்றோர்களும் சம்மதித்து விடுகிறார்கள்.

இப்படி நடக்கும் திருமணங்களுக்கு புரோகிதர் களையும் துப்பாக்கி முனையில் கொண்டுவந்து விடுகிறார்கள்.

தாம் விரும்பும் அழகிய பெண்களை தீவிரவாதிகளின் உதவியை நாடி, சில இளைஞர்கள் கட்டாயத் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

இந்த 'நல்ல' செயலுக்காக இளைஞர்கள் தரும் பணத்தைக் கையூட்டாக தீவிரவாதிகள் பெற்றுக் கொள்கிறார்கள்.

துணிச்சலுடன் இத்திருமணத்தை எதிர்க்கும் சில பெற்றோர்களும், பெண்களும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு விடுவார்கள்.

இக்கட்டாயத் திருமணத்திற்குப் பயந்துகொண்டு பல குடும்பங்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்று விடுகின்றன.

வெளியில் செல்ல முடியாத வசதியற்றவர்கள் தங்கள் உடைமைக்கும் உயிருக்கும் பயந்துகொண்டே காலம் தள்ள வேண்டிய சூழ்நிலையில் வாழ வேண்டி இருக்கிறதாம்!

## பெண் வேண்டாம்...!

**பா**ல் மாறி திருமணம் செய்வது இயற்கைக்கு மாறானது என்பதை நாம் அறிவோம். இங்கே அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது.

அப்படி நடத்திக் கொண்டவர் சாதாரண ஆள் இல்லை. ஒரு நாட்டின் மந்திரியாக இருந்தவர்.

அவரது பெயர் டோர்பன் லுண்ட். 49 வயதான இவர், இரண்டு பெண்களை மணந்து விவாக ரத்து செய்தவர்.

பெண்கள் மோகம் தீர்ந்து விட்டதோ என்னவோ, தனது நண்பனும் 28 வயது மாணவனுமான 'கிளாஸ் லாத்ருப்' என்பவரை முறைப்படி திருமணம் செய்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சி டென்மார்க் நாட்டில் நடந்துள்ளது.

ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்வதை சட்டபூர்வமாக்கிய ஒரே நாடு டென்மார்க்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலிகாலம்...

**ஜா**ன் நியூஹாம் என்ற பெண்மணியைத் திருமணம் செய்து கொள்ள டேவிட் வில்ஸ் என்பவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. சட்டப்படி இவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள்.

இதில் என்ன வியப்பு என்கிறீர்களா...? இருக்கிறது.

நியூஹாம் பிறவியிலேயே பெண் அல்ல, ஆண். 'செக்ஸ் சேஞ்' அறுவை சிகிச்சை மூலம் பெண்ணாக மாறியவர்.

அரசி எலிசபெத்தின் உதவியோடு இவர்கள் திருமணம் நடைபெற்றது.

கணவரான வில்ஸ், முன்பு பெண்ணாக இருந்தவர். எட்டு வயதுப் பெண் குழந்தைக்குத் தாயானவர். இவரும் மாற்று அறுவை சிகிச்சையின் மூலம் ஆணாக மாறியவர் என்பதுதான் வியப்பிற்குரிய செய்தி.

## இன்னும் பெண் தேடும்...

**கா**ஞ்சன் அலி என்பவர் சொல்கிறார்: ‘என் வயது 30 தான். ஒரு வயதுக்கு ஒரு மனைவி வீதம் இதுவரை 30 முறை திருமணம் செய்துகொண்ட நான், எனது 31-ஆவது மனைவியைத் திருமணம் செய்து கொள்ள ஆவலுடன் தேடி வருகிறேன்’ என்று நிருபர்களிடம் பேட்டியே கொடுத்துள்ளார்.

பங்களாதேஷில் ரிக்ஷா ஓட்டுபவராக வாழும் இந்தத் தொழிலாளியின் எந்த ஒரு மனைவியும் இவரிடம் ஆறு மாதத்திற்கு மேல் மனைவியாக இருந்ததில்லை.

விலகிச் சென்ற பெண்கள் புகார் ஏதும் கொடுக்காததால் அடுத்தடுத்து வேறு திருமணம் செய்து கொள்கிறார், இந்த காதல் மன்னன்.

## ஒன்பதாம் எண்!

**தை**பே நகரில் 99 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் நடந்தது.

இதில் சிறப்பு என்னவென்றால், இந்த ஜோடிகள் அனைவரும் 1999-ஆம் ஆண்டு 19-ஆம் தேதி காலை 9 மணி 9 நிமிடம் 9 விநாடிக்குத் திருமணம் செய்து கொண்டதுதான்.

இந்த நூற்றாண்டின் மிகவும் அதிர்ஷ்டமான புனிதமான நேரம் இது எனக் கருதப்படுகிறது.

ஒன்பதாம் எண் அதிர்ஷ்டத்தையும், சந்தோஷத்தையும் அளிக்கும் என்று சீனர்கள் நம்புகிறார்கள்.

வணிக வளாகப் பகுதியில் நடைபெற்ற திருமணத்திற்கு இந்த 99 ஜோடிகளும் 99 மீட்டர் நீளமுள்ள சிவப்புக் கம்பளத்தில் நடந்து வந்தனர்.

தைபே நகர் மேயர் ஜிங்ஜியூ தலைமையில் நடந்தது.

இந்த நிகழ்ச்சியைக் காண உள்ளூர், வெளியூர், வெளிநாட்டிலிருந்தும் ஏராளமானவர்கள் கூடியிருந்தனர்.

## பீர் திருமணம்!

ஜிம்பாப்வே ஜனாதிபதி ராபர்ட் முகாமே, 31 வயது கிரேஸ் மரூமுவைத் திருமணம் செய்து கொண்டார்.

குடோமா கத்தோலிக்க மிஷன் மைதானத்தில் நடந்த இந்தத் திருமணம், பீர் விழாவாக அமைந்துவிட்டது.

இத்திருமணத்தில், 71 வயது முகாமே 15,000 பேர்களுக்கு விருந்து கொடுத்தார். விருந்திற்குப் பிறகு ஆயிரத்துக்கு மேற்பட்ட பீர் பீப்பாக்கள் மைதானத்தின் நடுவே வைக்கப்பட்டன.

விருந்தினர்கள் குடித்தும் பீர் தீர்ந்து போகாததால், பக்கத்து கிராம மக்கள் அலை அலையாய் திரண்டு வந்து குடித்தார்கள். குடித்ததோடு அல்லாமல் தங்கள் பாத்திரங் களில் வீட்டிற்கு எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப் பட்டார்கள்.

## 100 வயதில் திருமணம்...!

சாமுவேல் பக்கோரா உகாண்டா நாட்டைச் சேர்ந்தவர். இவரது வயது 100. இந்த வயதில் இவர் பழைய சடங்கு முறைகளோடு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து

கொண்டார். உற்றாரும் சுற்றமும் வாழ்த்த, கம்பாலா என்னுமிடத்தில் இந்தத் திருமணம் நடந்தது.

ஆனாலும், இந்தத் தம்பதிகள் சேர்ந்து வாழ இன்னும் ஆறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

காரணம், பெண்ணின் வயது 12தான். கடந்த சில மாதங்களாக இந்தப் பெண் குழந்தை மீது காதல் வசப்பட்டே இந்தத் திருமணத்தைச் செய்து கொண்டார்.

உகாண்டாவில் எந்தப் பெண்ணும் 18 வயதிற்கு மேல்தான் தாம்பத்திய வாழ்வில் ஈடுபட வேண்டும்.

மீறினால் தம்பதிகளுக்கு ஆயுள் தண்டனைதான். அது சரி. 100 வயதான மாப்பிள்ளை, 106 வயது வரை வாழ்ந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டு இருப்பாரா? எல்லாம் நம்பிக்கைதான்.

## இவளன்றோ இளவரசி!

இங்கே நம் நாட்டில் கறுப்புப் பணம் இருந்தால் அதை மிக எளிதாக காலி பண்ணுவதற்கு ஒரே வழியைக் கைக்கொள்வார்கள்.

அந்த வழி ஆடம்பரமான திருமணம். கோடிக் கணக்கான பணத்தை சர்வசாதாரணமாக செலவு செய்து விடுவார்கள்.

சிரியாவில் இளவரசி வானா அல்ஃபோர்வியின் திருமணம் மிகவும் எளிமையான முறையில் நடத்தப் பட்டது.

அங்கே ஆயிரம் கார்கள் பவனி இல்லை; நூறு யானைகள் அணி வகுப்பு இல்லை; ஆயிரம் நகை தட்டுகள் ஏந்திய பெண்களின் அணி வகுப்புகள் இல்லை.

சாதாரணமான ஓர் ஒட்டகத்தில் பெண்ணை - இளவரசியை அழைத்து வந்து திருமணத்தை முடித்து விட்டனர்.

இலட்சக்கணக்கான மக்கள், வெளிநாட்டவர், இந்த எளிய திரும்மணத்தைக் கண்டு வியந்து போனார்கள்.

## 12 ஆயிரம் திருமணம்!

ஒரே நேரத்தில் 12 ஆயிரம் ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைத்துச் சாதனை படைத்து இருக்கிறார், தென் கொரியாவைச் சேர்ந்த தலைவர் மூன்சன் முயிங்.

79 வயதான இவர், தென் கொரியாவில் ஒருங் கிணைப்பு ஆலயம் என்ற பெயரில் திருச்சபை ஒன்றை நடத்தி வருகிறார்.

இவர், உலகம் முழுவதும் உள்ள 12 ஆயிரம் ஜோடிகளுக்கு, ஒரே நேரத்தில் திருமணம் செய்து வைத்திருக்கிறார்.

தென் கொரியாவின் தலைநகரம் சியோலில் உள்ள சாம்சில் ஒலிம்பிக் மைதானத்தில், இதற்கான விழா நடந்தது. அங்கிருந்து செயற்கைக் கோள் மூலம் 12 ஆயிரம் ஜோடிகளையும் ஆசீர்வதித்தார்.

விழா நடந்த மைதானத்துக்கு, ஏற்கனவே திருமணம் செய்து கொண்ட 28 ஆயிரம் ஜோடிகள் வந்திருந்தனர்.

அவர்கள், மூன்சன் முயிங் முன்னிலையில் மீண்டும் திருமண உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சி இண்டர்நெட் மூலம் 195 நாடுகளில் காட்டப்பட்டது.

## காலைப் போட்டால் திருமணம்!

நம்மூர்களில் தாலி கட்டி, கரத்தைப் பிடித்தால்தான் திருமணம் என்கிறோம். ஆனால், அந்தமான் தீவில் வாழும் ஒரு காட்டுவாசிப் பிரிவினர் திருமணம் எப்படி நடக்கிறது?

திருமண நாளில் பெற்றோர், மற்றோர் சூழ அவர்கள் முன்னிலையில் மணமகள் கால்கள் இரண்டையும் நீட்டி உட்காருவாள். மணமகன் நீட்டிய மணமகளின் கால் மேல் தன்னுடைய கால்களைக் குறுக்காகப் போட்டு உட்காருவான்.

உடனே திருமணம் முடிந்துவிட்டதாக எல்லோரும் மதுவோடு விருந்துண்ணத் தொடங்கிவிடுவார்கள்.

## எந்த வயதிலும்.....

அந்தக் காலத்தில் ஹாலிவுட்டின் பிரபல கதாநாயகராக இருந்த நடிகர் டோனி கர்ட்டிஸ்.

அவரை எண்ணி பெருமூச்சுவிடாத இளம் பெண்களே இல்லை எனலாம்.

73 வயதான டோனி, 28 வயதான ஜில்வாண்டன் பெர்க் என்ற பெண்ணை மணந்து கொண்டார். அதுவும் ஐந்து ஆண்டுகளாய் காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

தேன் நிலவுக்கு இலண்டன், பாரிஸ், ஸ்விட்சர்லாந்து என்று இவர்களது பயணமும் தொடர்ந்ததாம்.

காதலுக்கு கண் மட்டுமல்ல; வயசும் கிடையாது என்பது தெரிகிறது அல்லவா?

## ஒரு மந்திரியின் திருமணம்!

**எ**ல்லோரும் இதை படியுங்கள்...

பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி. மிகவும் மாறுபட்ட அரசியல்வாதி. திருமணத்தில் விருப்பம் இல்லாமல் இருந்த அவர், 45-வது வயதில்தான் திருமணம் செய்து கொண்டார்.

கேரள மாநில முன்னாள் முதல்வர் உம்மன்சாண்டியின் மனைவி மரியம்மாவும், எலிசபெத்தும் ஒரே வங்கியில் பணி செய்கின்றனர். இருவரும் நல்ல நட்பினர்.

ஒரு நாள் தோழி வீட்டுக்கு போனார், எலிசபெத். அங்கு அந்தோணியும் இருந்தார். இவரைச் சுட்டிக்காட்டி, இவரை மணக்க விருப்பமா என்று தோழியிடம் கேட்டார் மரியம்மா.

ஏற்கெனவே பிரபலமாகியிருந்த அந்தோணியை திருமணம் செய்ய சம்மதம் தெரிவித்தார், எலிசபெத்.

சில நாட்களுக்கு பிறகு, 'எலிசபெத்' என்ற பெண்ணை நீ மணம் செய்து கொள்கிறாயா?' என்று கேட்டார் உம்மன்சாண்டி.

'அந்தப் பெண்ணை நான் பார்த்ததே இல்லையே' என்று அந்தோணி சொன்னபோது, அன்று தன் வீட்டுக்கு

வந்த எலிசபெத்தைப் பற்றி கூறியிருக்கிறார். ஆனால், தான் அந்தப் பெண்ணைப் பார்க்கவில்லை என்றார், அந்தோணி.

பின், இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு ஊரையே அடைத்து பந்தல் போடவில்லை; பத்தாயிரம் பேருக்கு பந்தி வைக்கவில்லை; கார்கள் அணிவகுத்து வரவில்லை. தெரு முழுதும் போஸ்டர் ஒட்டவில்லை; கட்டவுட் வைக்கவில்லை.

இரு வீட்டாரும், உம்மன்சாண்டியும், அவரது மனைவியும் ஒரு சில நண்பர்களும் மட்டும்தான் திருமணத்திற்கு வந்து இருந்தனர்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, தாம் பணிபுரியும் வங்கியில் இருந்து கடன் பெற்று, ஒரு பழைய அம்பாசிடர் கார் வாங்கினார் மனைவி, எலிசபெத். எனக்கு கிடைக்கிற காசுல இருந்து பெட்ரோல் போட முடியாதே' என்றாராம் அந்தோணி.

இந்த மாதிரி அரசியல்வாதிகளைப் பற்றி கேள்விப் படும்போது இதயத்திற்கு இதமாக இருக்கிறது, இல்லையா?

## உலகையே உற்றுப் பார்க்க வைத்த திருமணம்!

ஆடம்பரம் ஏதுமின்றி பதிவுத் திருமணங்கள் செய்து கொள்பவர்களும் உண்டு. சில ஆயிரங்களை செலவழித்து திருமணம் செய்து கொள்பவர்களும் உண்டு. இலட்சங் களில் நடக்கும் திருமணங்களையும் பார்த்திருக்கிறோம்.

ஆனால், பல கோடியில் நடந்த திருமணத்தைப் பற்றி சிலர் கேள்விப்பட்டிருக்கலாம், சிலர் தொலைக்காட்சியில் பார்த் திருக்கலாம்.

அப்படி கேட்காதவர்கள் - பார்க்காதவர்கள் இதைப் படித்து அறிந்து கொள்ளலாம்.

கடந்த 2004-ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவை இந்த திருமணம் கலக்கியது என்பதோடு, உலகையே ஒரு நிமிடம் உற்றுப் பார்க்க வைத்துவிட்டது.

ஆமாம், சஹாரா நிறுவனங்களின் அதிபர் சுப்ரதாராய் இல்லத் திருமணங்கள்தான் அது.

இந்த திருமணம் பற்றிய சில தகவல்கள்....

ஒரு வாரம் நடந்த இந்தத் திருமணங்கள் லக்னோவையே அல்லோகலப்படுத்திவிட்டது.

சஹாரா மகன்கள் சுசன்டோ, சிமன்டோ திருமணங்கள் சஹாரா சாஹர் மாளிகையில் நடந்தது.

மொத்தச் செலவு 250 கோடி ரூபாய்!

வாஜ்பாய், அத்வாணி என்று வி.ஐ.பி.கள் கட்சி பேதமின்றி குவிந்தனர். அப்படியே சினிமா நடிகர், நடிகைகளும் படையெடுத்து வந்தனர்.

டில்லியில் இருந்து லக்னோ, மும்பையில் இருந்து லக்னோவிற்கு பறந்தன தனி விமானங்கள். விமான நிலையத்திலிருந்து திருமண மண்டபம் அருகே அமைக்கப்பட்டிருந்த ஹெலிபேட்டுக்கு ஹெலிகாப்டர்கள் வி.ஐ.பி.களை சுமந்து வந்தன.

நூற்றுக்கணக்கான மெர்சிடிஸ் கார்கள், நூற்றுக் கணக்கான லிமோசின்கார்கள், எங்கும் கார்கள்... கார்கள்.

திருமணம் நடந்த இடம் 200 ஏக்கர் பரப்பளவு உள்ள பிரமாண்டமான பகுதி.

செயற்கை ஏரி உருவாக்கப்பட்டிருந்தது.

அதற்கு பல வண்ண விளக்குகளாக 45 ஆயிரம் பல்வேறு வடிவ மெழுகுவர்த்திகள், ஆங்காங்கே பிரமாண்ட உருவத்தில் ஒளி வீசி காட்சியளித்தன.

பெண்கள், விலங்குகள், பிராணிகள், பறவைகள் என்று பல்வேறு உருவங்களில் இந்த மெழுகுவர்த்திகள் இரவை பகலாக்கியதோடு வர்ண ஜாலங்கள் காட்டின.

எங்கும் பல வண்ண பூக்களின் சரம்தான். இதற்காக 500 பூ வேலை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

மாப்பிள்ளை அழைப்பின்போது கார் ஓட்டினார், இந்தியாவின் நெம்பர் ஒன் மொபைல் நிறுவனர், அம்பானி. உடன் உலக அழகி ஐஸ்வர்யாராய், அமிதாப்பச்சன் வந்தனர்.

இந்த உலக மகா திருமணங்கள் நடந்த அதே சமயம், நாடு முழுக்க ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சஹாரா நிறுவனம் சார்பில் 101 ஏழைகளுக்கு திருமணங்கள், அதுவும் தலா ஒரு இலட்சத்து ஒரு ரூபாய் செலவில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த உலக சாதனை திருமணத்தைப் பற்றி, பிபிசி சேனல், இலண்டன் டெலிகிராப் பத்திரிகை, அமெரிக்க ஹெரால்டு டிரிபியூன் என்று உலகமகா டி.வி.க்கள் பத்திரிகைகள் கூட செய்திகளை வெளியிட்டிருந்தன.

நம் தமிழ்நாட்டில் கூட நூறு கோடி ரூபாயில் ஒரு திருமணம் நடந்து, தமிழகத்தில் சாதனை புரிந்தது பலருக்கும் நினைவிருக்கும்.

இந்தத் திருமணமோ இந்தியாவிலேயே நடந்த திருமணங்களில் முதன்மை பெற்று சாதனை படைத்தது.

○

எகிப்து நாட்டைச் சேர்ந்த மியூசிக் ஏஜெண்டான முஸ்தபா சேமீடா என்பவர், 203 முறை திருமணம் செய்து சாதனை படைத்துள்ளார்.

## மலையிலே மணவிழா

இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்பு (1989-90) சீனா, வங்கம், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு 35 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சைக்கிள் பயணம் செய்தவர்தான், கோவையைச் சேர்ந்த இளைஞர் சுகுமார்.

இச்சாதனைக்கு மறு ஆண்டே டில்லி, லடாக் மலைப் பாதையில் 6,000 கிலோ மீட்டர் தூர சாகச சாதனையை சைக்கிள் பயணத்தின் மூலம் மேற்கொண்டு முடித்தார்.

இந்த பயணத்தின்போதுதான் காஷ்மீர் மாநிலத்தின் கார்டுங்லா சிகரத்தின் உச்சியையும் அவர் எட்டியிருக்கிறார்.

'உலகிலேயே அதிக உயரமான இடத்தில் (18,382 அடி) வாகனம் ஓடக்கூடிய சாலை' என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த மலை வழிச் சாலை இது.

இந்த சாதனை இடத்தின் பெருமையைக் கேள்விப் பட்டதும், எனக்குத் திருமணம் என்றால் அது இங்குதான் நடக்க வேண்டும்' என்று மனதில் உறுதியும் எடுத்துவிட்டார்.

முடிவு எடுத்துவிட்டாரே தவிர, அதை செயல்படுத்த முயன்றபோதுதான் அதிலுள்ள சிக்கல்களை அறிந்து கொண்டார்.

ஒரு மலைச்சிகரத்தில் வைத்துதான் திருமணம் என்றால், எந்தப் பெண்தான் ஏற்றுக்கொள்வார்? அப்படியே பெண் ஒப்புக் கொண்டாலும், வீட்டார் ஒப்புக் கொள்வார்களா?

இவருடைய எண்ணத்தோடு பெண் தேடியபோது ஏமாற்றமே மிஞ்சியது.

இந்த இடைக்காலத்தில் அஞ்சல் வழியே எம்.ஏ.படித்து முடித்தார்.

கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பின் கிடைத்தவர் தான் 24 வயது விஜயலட்சுமி. இவர் பி.காம். பட்டதாரி.

கடந்த 2004-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் நாள் விஜியை இமயமலையின் கார்டுங்லா சிகரப் பகுதிக்கு அழைத்துச் சென்று, தான் நினைத்ததுபோல் திருமணம் செய்து கொண்டார்.

திருமணம் குறித்து அவர் மனைவி சொல்கிறார்... "என் கணவர் சுகுமார், எங்கள் நிச்சயதார்த்தத்தின்போது தனது எண்ணத்தைக் கூறியதோடு, சைக்கிள் பயண

சாதனையையும் கூறினார். அப்போதே என் சம்மதத்தைக் கூறிவிட்டேன். ஒரு சாதனையாளருக்கு உறுதுணையாக இருப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியே.

நான் பள்ளியில் படிக்கும்போது என்.சி.சி.யில் மூன்று ஆண்டுகள் இருந்திருக்கிறேன். அவ்வேளையில் நீலகிரி, சிறுவானி, ஆனை முடி மலைகளில் மலையேற்றம் செய்து இருக்கிறேன். அதனால், மலையேறுவதில் பயம் ஏதும் இல்லை'' என்றார்.

சரி, எதற்காக இத்தனை உயர்த்தில் திருமணம்? நாட்டிலுள்ள நதிகளையெல்லாம் ஒன்றாக இணைக்க வேண்டும் என்பதற்காகவும், கின்னஸ் சாதனைக்காகவும் தான்'' என்கிறார் சாதனையாளர், சுகுமார்.

**ம**லைவாழ் மக்களான, தோடர்களிடையே திருமணம் மிகவும் எளிமையாக நடத்தப்படுகிறது. திருமணம் நிச்சயிக்கப் பட்டது.

மணமகன் மணமகளுக்கு 'கேஞ்ஸ் செடியை அன்போடு கொடுப்பான். அவளும் பெற்றுக்கொண்டு குடிசைக்கு முன்னே நிற்பார்கள்.

அங்கே நிற்கும் பெரியவர்கள் தண்ணீரும் பூவும் வைத்திருப்பார்கள். அதை எடுத்துக்கொண்டு தம்பதியினர் இருவரும் குடிசைக்குள் நுழைவார்கள்.

அன்று விருந்தும், நடனமும் நடைபெறும். அவ்வளவுதான் திருமணம்.

## மூன்று நாள்...

ஆந்திர மாநிலம் சோடவரம் வட்டத்திலுள்ள செட்டி மார்களிடையே திருமணத்தில் விநோதமான வழக்கம் ஒன்றிருக்கிறது.

இவர்களது மணவிழாவில் மணமகள் வீட்டார் வரதட்சணை கொடுக்கமாட்டார்கள். மணமகன்தான் வரதட்சணை கொடுக்க வேண்டும்.

மணமகன் வரதட்சணை கொடுத்தபின் மணமக்கள் இருவரும் ஓர் அறையில் மூன்று நாட்களுக்கு அடைத்து வைத்துவிடுவார்கள்.

நான்காம் நாள் மணமகளை அழைத்து மாப்பிள்ளை பிடித்திருக்கிறானா என்று கேட்பார்கள். பிடித்திருப்பதாகச் சொன்னால் அந்த இருவருக்கும் திருமணம் நடக்கும். இல்லை என்றால் மூன்று நாள் உறவோடு முடிந்துவிடும்.

## தலையில் கேக்

பழைய ரோம் கலாசாரத்தில் மணமகளின் தலைமீது கேக்கை வைத்து உடைப்பது ஒரு வழக்கமாக இருந்தது.

இங்கிலாந்திலும் இதுபோல் 17-ஆம் நூற்றாண்டில் மணப் பெண்ணின் தலைமீது வைப்பதற்கு என்றே ஓர் இனிப்பான உணவுப் பொருள் தயாரிக்கப்பட்டது.

அந்த உணவுப் பொருளுக்குள் ஒரு மோதிரம் வைக்கப் பட்டிருக்கும். மணமகளின் தலைமீது அந்த உணவுப் பொருளை வைத்து நசுக்கப்படும்.

அப்போது யார் அந்த மோதிரத்தை எடுக்கிறார்களோ அவர்களுக்கு அடுத்ததாகத் திருமணம் நடைபெறும் என்று நம்பப்பட்டது.

பிற்காலத்தில் அந்த இனிப்பான உணவுப் பொருளுக்கு மாற்றாக கேக் வந்தது.

திருமணம் ஆகாதவர்கள், இந்த கேக்கை தங்கள் தலையின் கீழ் வைத்துப் படுத்தால், அவர்களின் எதிர்காலத் துணை கனவில் தோன்றுவார் என்றும் நம்பப்பட்டது.

## நாய்களுக்குத் திருமணம்!

பெற்ற குழந்தைகளின் திருமணத்தை நடத்திப் பார்த்திடவே பொருளாதாரம் இடம் கொடுக்காமல், இதயத்தில் இரத்தம் வடிய இருக்கின்ற இந்த நாட்டில்...

நாய்களுக்குத் திருமணம் செய்வதற்காக பல நூறு கிலோ மீட்டர்கள் கடந்து சென்று வரன் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்காக ஒரு வெப்சைட்டும் (கம்ப்யூட்டர் சாதனத்தை நீடிப்புச் செய்து அரசு அங்கீகாரம் பெறுவதே இன்டர் நெட் அல்லது வெப்சைட் எனப்படும்) தூங்கி இருக்கிறார்கள்.

வெப் சைட்டிலேயே திருமணம் செய்யப்படும் நாய்களின் பெயர்களும் விவரங்களும் அறிவிக்கப்பட்டு அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்படும்.

இராஜஸ்தான் மாநிலம், ஜெயப்பூரில் அகில உலகின் நாய்கள் சந்தை ஒன்று செயல்பட்டு வருகிறது.

இங்கே பணக்கார எஜமானர்களின் வீட்டு நாய்களைப் பற்றி நிழற்படம், உயரம், அளவு, எடை, நிறம், முகவரியுடன் அனுப்பினால், அவை பரிசீலிக்கப்பட்டு, தேர்வாகும் மணமகன் மணமகள் பற்றிய விவரம் பதிலாக வரும். திருமணம் வெகு ஜோராக நடைபெறும் பொழுது உற்றார், உறவினர்களையும் வரவழைத்து திருமணத்தை அமர்க்களப்படுத்துகிறார்கள்!

## இப்படியும்...

இராஜஸ்தானில் கஞ்சார் என்று ஒரு பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் பழக்கப்படி, மணமகள் மேடைக்கு வந்து உட்காரும்போது, நிர்வாணமாக இருக்க வேண்டுமாம்.

அப்போது, அவர்கள் இனத்தைச் சேர்ந்த பெண்கள் மட்டுமே இருப்பார்கள். மணப்பெண்ணுக்கு மதுவைக் கொடுப்பார்கள். மற்ற பெண்களும் குடிப்பார்கள்.

மணப் பெண்ணின் உடலில் அப்போது குங்குமத்தைப் பூசியிருப்பார்கள். இந்த சடங்குகள் நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகுதான், எல்லோர் முன்னிலையிலும் திருமணம் நடக்கும்.

இந்த நிலையில்தான்... ஷீலாவும், தடமும் சகோதரிகள். ஷீலாவுக்கு 18 வயது. தடமுக்கு 20 வயது.

இந்த சகோதரிகள் நிர்வாணமாக திருமண மேடைக்கு வர மறுத்ததுடன் நாகரிக உடையில் தோன்றியிருந்தார்கள்.

இவர்கள் செய்த புரட்சியால் - இனி திருமணப் பெண்கள் நிர்வாணமாக மேடைக்கு வரும் பழக்கம் மாறலாம் என்று எண்ணப்படுகிறது.

## விடாதே, பிடி...

மணமகனுக்கு பெண் தேடுவது இங்கே கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது.

ஆமாம், பீகாரில் வாழும் 'மைதிலி' என்ற இனத்தைச் சார்ந்த பிராமணர்கள், தங்கள் மகள் அல்லது மகனுக்குத் திருமணம் செய்விக்க மேற்கொள்ளும் முயற்சி வித்தியாச மானதாக இருக்கிறது.

இம்மாதிரி திருமண முயற்சிக்கு வழி செய்வதற் கென்றே, அங்கே சில திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

அந்த விழாக்களில் திருமண வயதுடைய பையன் களும், திருமண வயதுடைய பெண்களின் பெற்றோரும் கூடி வந்திருப்பார்கள்.

பொதுவாக எல்லாக் குடும்பங்களையும் பற்றி நன்றாக தெரிந்து வைத்திருக்கும் தரகர்களும், அந்த விழாவிற்கு வந்திருப்பார்கள்.

பெண்ணின் தந்தையாருக்கு மணமகன்கள் காட்டப் படுவார்கள். அவர்கள் குடும்ப வரலாறு பற்றித் தரகர்கள் கூறுவார்கள்.

மாப்பிள்ளை முடிவு செய்யப்பட்டவுடன், பெண்ணின் தந்தை மாப்பிள்ளையைக் கையோடு அழைத்துக் கொண்டு போய், அன்றிரவே திருமணத்தை நடத்தி வைத்துவிடுவார்.

திருமணம் செய்து வைப்பதில் சிறிது நேரம் கால தாமதம் ஏற்பட்டாலும் மாப்பிள்ளையை வேறு யாராவது 'கொத்திக் கொண்டு போய்விடுவார்களாம்.'

## நினைத்த போதெல்லாம்...

மகாராஷ்டிர மாநிலத்தின் நாட்டுப்புறங்களில் 'பலதார'தடை பற்றி எவருக்கும் ஏதும் புரியாது. தெரிந்தாலும் அவர்கள் அதைப்பற்றி கவலைப்பட மாட்டார்கள்.

பரத்வாடா போன்ற பகுதிகளில் வாழும் ஒரு குடியானவனுக்கு பத்துப் பன்னிரண்டு இருப்பது சர்வ சாதாரண விஷயம்.

நினைத்த போதெல்லாம் அங்கே ஆண்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஓர் ஆண் இரண்டவாது மூன்றாவது திருமணம் செய்து கொள்ளும்போது அந்தப் பணிக்கான முக்கிய பொறுப்பை முதல் மனைவியே வகிப்பாள்.

பெண் பார்ப்பது முதல், திருமணத்துக்கு உறவினர்களை அழைப்பது, திருமண நிகழ்ச்சி ஆகிய அனைத்திலும் முதல் மனைவியின் பங்கே அதிகமாக இருக்கும்.

வீட்டில் வேலைக்கு ஆள் தேவைப்படும் போதெல்லாம் கணவன் புதிது புதிதாகப் பெண்களை மணந்து கொள்வான். அதனால், குடும்பத்தில் ஒவ்வொரு மனைவிக்கும் ஒவ்வொரு வேலையில் பொறுப்பு நிச்சயமாக இருக்கும்.

வீட்டில் சமையல் வேலைகளை ஒருத்தி கவனிப்பாள். மாடு கன்றுகளைப் பாதுகாத்து பால் கறப்பது ஒருத்தியின் பணியாக இருக்கும். வயல் வேலைகளை ஒரு மனைவி கவனிப்பாள்.

இப்படி ஒவ்வொரு மனைவிக்கும் ஒவ்வொரு வேலைப் பொறுப்பு இருந்தாலும், அறுவடை போன்ற

சமயங்களில் எல்லா மனைவியும் ஒன்று சேர்ந்து கூட்டாகச் செயல்படுவதும் உண்டு.

## பிள்ளைகளுக்காக...

ஜான்டி ஈபன் என்பவர் 43 வயதான விஞ்ஞானி. இவர் கேரளாவிலுள்ள திருநாள் மருத்துவக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

அதே நிறுவனத்தில் பணிபுரியும் சுதா என்பவரைக் காதலித்து மணந்து கொண்டார்.

இவர்கள் திருமணத்தை உலகம் முழுவதும் உள்ளவர்கள் பார்க்கும்படி இன்டர்நெட்டில் வசதி செய்திருந்தார்.

பார்ப்பவர்கள் புகழ வேண்டும்; அதன் விளைவாகப் பிரபலம் ஆக வேண்டும் என்பதற்காக அல்ல. இவரால் 50,000 ரூபாய் வரையில் இலாபம் பண்ண முடிந்ததாம்.

இந்தப் பணத்தை இவர் வளர்க்கும் 12 பிள்ளைகளுக்கு உதவப் பயன்படுத்த முடியும் என்கிறார்.

இவருக்கு எப்படி பிள்ளைகள்? 1992 முதல் இவர் ஒரு அனாதை விடுதியை நடத்தி வருகிறார். அதில் இப்போது 12 பிள்ளைகள் இருக்கிறார்கள்.

ஏழைகள் தாம் ஏழைகளுக்கு உதவ முடியும் என்கிறார் இவர். நல்ல எண்ணம்தானே!

## கண்களைச் சுற்றி...

பிரேசில் நாட்டில் கல்யாணமாகாத கன்னிப் பெண்கள் எல்லாம் தங்கள் கண்களைச் சுற்றிலும் சிவப்பு வண்ண மையைத் தீட்டி இருப்பார்களாம்.

அப்படி இருந்தால் அவர்கள் திருமணத்திற்குத் தயார் என்றும், மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டு இருப்ப தாகவும் அர்த்தமாம்.

## அஃக்கிரணையும் உயர் திணையும்

மேற்கு வங்கத்தில் இருப்பதுதான் கோர்டா மோகன்பூர் என்ற கிராமம்.

இங்கே அஞ்சுன்னு ஒரு சிறுமி.. இவள் சின்ன வயதாக இருந்தபோது கை உடைத்துக் கொண்டாளாம்.

ஒரு தடவை தண்ணீரில் மூழ்கி உயிர் பிழைத்தாளாம். இதை எல்லாம் அபச குணம் என்று நினைத்த அவள் வீட்டாரும், சுற்றமும், அதற்கு ஒரு பரிகாரம் செய்ய எண்ணினார்கள்.

அதன்படியே அவளை ஒரு நாய்க்குக் கல்யாணம் செய்து வைத்தனர்.

இதில் வியப்படைய ஒன்றுமில்லையாம். அஞ்சுவின் கொள்ளுத் தாத்தா காலத்திலும் இதே மாதிரிக் கல்யாணம் நடந்து இருக்கிறதாம். அதனால், இப்பவும் இப்படி செய்தனராம்.

திருமணத்தன்று அஞ்சு என்ற அந்த பிஞ்சுவிற்கு சிவப்பு நிற பனாரஸ் புடவை கட்டி... மணமகனான

நாய்க்கும் புத்தாடைகள் அணிவித்து, அவர்கள் சம்பிரதாயப் படி சங்கு ஊத... அந்தப் பெண் நாயோடு கழுத்தில் மாலை அணிவித்தாளாம்.

## முதல் திருமணம்...

**உ**லகின் முதல் இன்டர்நெட் திருமணம் (1997-நவம்பர்) நடந்து முடிந்துள்ளது.

அப்ர்டினைச் சேர்ந்த 42 வயது அட்ரியன் என்பவருக்கும் சின்டி ஐரிஷ் என்ற 40 வயது மண மகளுக்கும் இன்டர் நெட் மூலம் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

மணமகள் சின்டி, ஹார்ட் ஃபோர்டு என்னுமிடத்தில் வசித்தாள். ஏற்கெனவே இரண்டு குழந்தைகள் உள்ளன. கணவர் இறந்துவிட்டார்.

மணமகன் அட்ரியனும் மனைவியை இழந்தவர்.

கிறித்துவம் தொடர்பான நிகழ்ச்சிகள், ஹாலிவுட் படமான 'பிரேவ் ஹார்ட்' போன்ற படங்கள் பற்றியும் ஓயாது இன்டர் நெட்டில் தினமும் ஒரு மணி நேரம் தகவல் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

இதன் அடுத்த கட்டமாக தொலைபேசியிலும் இந்த நெட் காதல் நாளும் நாளும் வளர்ந்திருக்கிறது.

அதன் பிறகு இன்டர்நெட் மூலமே திருமண ஒப்பந்தம் நடந்திருக்கிறது.

மணமகன் கம்ப்யூட்டர் விற்பனை ஆலோசகராகவும், இறையியல் படிப்பு படிப்பவராகவும் இருந்துள்ளார்.

'எங்களை இணைத்து வைத்தது, தூதுவராகச் செயல்பட்டது எல்லாம் கடவுள்தான்.

எனவே, மற்றவர்கள் இன்டர்நெட்டை மட்டும் நம்பாதீர்கள்' என்கிறது இந்த காதல் கிளிகள்.

மணமகள் ஸ்காட்லாந்துக்கு தன் இரு குழந்தைகளுடன் பறந்து வந்து, மணமகன் அட்ரியனைத் திருமணம் செய்து கொண்டாள்.

அபர்டீன் பல்கலைக் கழகத்தில் உள்ள மாதா கோயிலில்தான் திருமணம் நடைபெற்றது. அட்ரியனும் இங்குதான் படிக்கிறார்.

திருமணத்திற்குப் பிறகு தற்போது 'புதுமாப்பிள்ளை', தன் மனைவி அவளது குழந்தைகளுடன் ஹார்ட் போர்டில் உள்ள மனைவி வீட்டுக்கு சென்றார்.

இன்டர்நெட்டில் காதலித்து திருமணம் செய்து கொண்டதுடன் இல்லாமல், நேரில் சந்தித்தும் எல்லோர் முன்னிலையிலும் அவர்கள் சமய முறைப்படி திருமணம் செய்து கொண்டது பெரிய செயல்தான்.

எப்போதும் மாறாதது உண்மைக் காதல்!

## அடப்பாவமே!

12 ஆண்டுக்கு ஒருமுறைதான் திருமண நாள் வருமாம்... என்ன கொடுமை என்கிறீர்களா...? மேலே படியுங்கள்....

பரோடாவுக்கு அருகில் காடவர் எனப்படும் ஆதி வாசிகள் உள்ளனர். இவர்களிடையே பெண்களுக்குக் கணவர் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது.

ஆம்ாம், அவர்கள் ஒரே ஒரு நாள்தான் திருமணம் செய்து கொள்ள முடியுமாம். அந்த நாள் 12 வருடங்களுக்கு ஒரு முறைதான் வருமாம்....!

ஒரு குடும்பத்தில் பல பெண்கள் இருந்து 12 ஆண்டுகள் காத்திருக்க விரும்பாவிட்டால், ஒரு மலர்ச் செண்டை அவர்களுக்கு மணம் செய்து வைப்பார்களாம்.

செண்டு வாடியதும் அவள் விதவை ஆகிவிடுவாள். 12 ஆண்டுக்கொருமுறை வரும் நாளில்தான் மணக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு விதவைக்குக் கிடையாது. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் ஒரு மணமகனைத் தேடிப் பிடித்து திருமணம் செய்து கொள்ளலாம்.

## மூன்று மாதத்தில்...

இங்கே பாருங்கள்... இந்த நாட்டில் மூன்று மாதம்தான் திருமண நாள் உண்டாம்.

ஆமாம், ஜாவாயில் வருடத்தில் மூன்று மாதங்கள் தான் திருமண சீசன்.

பெரும்பாலும் வெள்ளிக்கிழமை இரவு ஏழு மணிக்கே முகூர்த்தம் இருக்கும்.

இங்கே பிள்ளை வீட்டார்தான் வரதட்சணை கொடுக்கிறார்கள். ஆனால், திருமணம் பெண் வீட்டில்தான் நடக்கும்.

புரோகிதர், மணமக்களின் பெற்றோர் ஆகியோர் கையெழுத்திட்டு ஒரு பத்திரத்தை தயார் செய்வார்கள். அது முடிந்த உடன் பெண் பல சுமங்கலிகளுடன் வருவாள்.

வீட்டுக்கு வெளியில்... பெண், வரப்போகும் கணவனுடைய பாதத்தை நீர் விட்டுக் கழுவி கை நிறைய மலர்களை காலில் போட்டு வணங்குவாள்.

அவன் அவளுடைய வலது கரத்தைப் பிடித்துக் கொண்டு வீட்டினுள்ளே அழைத்து வந்து மனையில் உட்காருவான். புரோகிதர் சில சடங்குகளைச் செய்ததும் திருமணம் முடிந்துவிடும்.

## வாங்கவும், விற்கவும்!

**உ**த்தரப்பிரதேசத்தின் வடமேற்குப் பகுதியில் ஜவுன்சர்பவார் என்ற ஓர் இடம் இருக்கிறது.

இங்குள்ள மக்கள், மனைவியைக் கூட விற்கவும் வாங்கவும் செய்கிறார்கள்.

நூறு ரூபாய் முதல் நானூறு ரூபாய் வரை விலைபேசி மனைவியை விற்பதும், வாங்குவதும் மாற்றிக் கொள்வதும் இங்கு வெகு சர்வசாதாரணம்.

ஒரே பெண் பல ஆண்களை மணக்கிறார்கள். மனைவியைவிட கணவன் இளையவனாகவும் இருக்கிறான்!

## 12 - வயதில்!

**ஒ**ரிசாவிலுள்ள கண்ட்ர என்ற மலைவாசிகள், பெண்களுக்கு 12 வயதுக்குள் திருமணம் ஆகாவிட்டால், அவளைச் சூரியனுக்கு திருமணம் செய்து வைக்கிறார்கள்.

பெண், மணக்கோலத்தில் நீர் நிரம்பிய தட்டை ஏந்திக் கொண்டு வெளியில் நிற்பாள்.

தட்டு நீரில் தெரியும் சூரியனுடைய பிம்பத்துக்கும் அவளுக்கும் மணம் செய்து வைப்பார்கள்.

அதன் பிறகு, அவள் மணமான பெண்ணாகவே கருதப் படுகிறாள்.

## தந்தை கட்டும் தாலி!

கேரளத்திலுள்ள ஒரு சில குடும்பங்களில் முதல் மகன் மட்டும்தான் சொந்த ஜாதியில் மணந்து கொள்ளலாம்.

மற்றவர்கள் பிற ஜாதி குடும்பத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்கிறார்கள் இங்கே, பெண்ணிற்கு கணவன் தாலி கட்டுவது இல்லை. தந்தையே கட்டுவார்.

## வளையம்...

வளையத்தில் சாவியை மாட்டும் வழக்கத்தை முதல் முதலில் கையாண்டவர்கள் ரோம் நாட்டினரே.

திருமணத்தின் போது அவரவரது சக்திக்கேற்ற உலோகத்தில் வளையம் செய்து அதில் ஒரு சாவியை மாட்டி மணமகன், மணமகளிடம் கொடுப்பான்.

அந்த வளையத்தில் என் வீடு, மானம் இவற்றின் சாவியை உன்னிடம் அளிக்கிறேன் என்று எழுதப் பட்டிருக்குமாம்!

## முதல் சந்திப்பு...

கலிபோர்னியோவைச் சேர்ந்த டாபிமில்லருக்கும், ஜென்னியர் பெக்கிற்கும் ஒரு நர்சரி பள்ளியில் திருமணம் நடந்தது.

நர்சரி பள்ளியைத் தேர்ந்தெடுத்தது ஏன் என்று கேட்டதற்கு...

குழந்தைகளாக இருந்தபோது இங்குதான் அவர்கள் முதன் முதலில் சந்தித்துக் கொண்டார்களாம்.

## எத்தனைப் பெண்...

தென்னாப்பிரிக்காவில் ஜூலு என்னும் இனத்தவர்கள் வாழ்கின்றனர்.

இவர்களிடம் ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. ஓர் ஆண், ஒரே சமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ளலாம்.

ஆனால், எத்தனை பெண்களை மணந்து கொண்டாலும், ஒரே வீட்டில்தான் அத்தனை மனைவிகள், குழந்தைகளுடன் வாழ வேண்டும்.

இப்போதும் அப்படியே கூட்டுக் குடும்பமாக வாழ்கிறார்கள். இன்றைய ஜூலு இளைஞர்கள் கூட, ஒரு தார மணத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பெற்றோரை முதியோர் இல்லங் களுக்கு அனுப்பாமல், கூட்டுக் குடும்பமாக குதூகலத்தோடு வாழ்கிறார்கள்.

## இப்படி ஒரு சடங்கு...

மத்தியப்பிரதேசத்தில் கோண்டர் என்னும் பழங்குடிகள் வசிக்கின்றனர். இவர்களை மரியா என்றும் அழைப்பதுண்டு.

இவர்களில் காட்டெருமைக் கொம்பு மரியாக்கள் என்ற பிரிவினர் உண்டு. இவர்கள் காட்டெருமைக் கொம்பு களாலான தலைப்பாகை அணிந்து கூத்தாடுவார்கள்.

அதனால்தான் அவர்களுக்கு இந்தப் பெயர் வந்தது. இதில் சிறப்பு என்னவென்றால், திருமணச் சடங்குகளில் காட்டெருமைக் கொம்புகளால் செய்த தலைப்பாகையை அணிந்து கொண்டு இவர்கள் நடனமாடுவது பார்ப்பதற்கு விநோதமாக இருக்குமாம்.

## அர்ச்சகரே...

**ஷி**ண்டோ மதத் திருமண முறையில் வாய் மொழியாக மணமக்கள் ஏதும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் பழக்கம் இல்லை.

சூரியன் கோயிலில் உள்ள பெண் அர்ச்சகரே திருமணத்தை நடத்தி வைப்பாராம்.

## சிறையில் திருமணம்...

1997-ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டு செனட்டர்கள் ஐவர் மற்றும் புகழ் பெற்ற 12 பேர்கள் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். கைதிகளாக அல்ல. விருந்தினர்களாக...?

இந்த நாட்டின் புகழ்பெற்ற ஆக்வின் நடிகர் ராபின் பாடில்ல வெடிகுண்டு ஆயுதங்கள் வைத்திருந்ததற்காக 17 முதல் 21 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அனுபவிக்க ஜெயிலில் இருந்தார்.

இவர், தமது நீண்ட நாளைய பெண் தோழி லெய்ஜல் சிகாங்கோவைத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்.

இவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். அந்தக் குழந்தைகள், மலர் கொடுத்து 133 விருந்தினர் களையும் வரவேற்றனர்.

சிறையிலேயே... திருமணத்திற்குப் பிறகு, பதினைந்து பேர் திருமண விருந்து பரிமாறினார்கள்.

பல நாடுகளின் தூதுவர்களும், புகழ் பெற்ற அயல்நாட்டு இசையமைப்பாளர்கள் 12 பேர்களும் இந்தச் சிறைச்சாலைத் திருமணத்தில் கலந்து கொண்டார்களாம்.

## அடேங்கப்பா...

அந்தோணி ஹெக்னே என்பவருக்கும் கிளைர் பைரன் என்ற பெண்ணிற்கும் இங்கிலாந்தில் உள்ள மேற்கு யார்க்ஷைரில் ரூ.15,00,000 செலவில் திருமண நிகழ்ச்சி நடந்தது.

அதில் தான் சின்தரெல்லா கோச் வடிவிலான ஐஸிங் கேக் 250 மணி நேரம் உழைத்து உருவாக்கப்பட்டது.

அந்த கோச், குதிரை உள்ளே உள்ள மணமக்கள் என அனைத்தையும் துண்டு போட்டு உடனே சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்தனர்.

மணமக்களை அப்படியே அச்சாக கேக்கில் உருவாக்கி னார்கள். இருவரின் உடைகளும் கேக்தான்.

மிச் செல்ஃப்ளீட் என்ற பெண், 2 அடி உயரம் 5 அடி நீளத்தில் இந்த கோச் கேக்கை உருவாக்கினார்.

செலவு ரூபாய் இரண்டு இலட்சமானது. கேக்கை எப்படி அழகாக வெட்டி எடுத்துச் சாப்பிட வேண்டும் என்பதையும் முறைப்படி கற்றுக் கொடுத்து உள்ளனராம்.

இந்த கேக் செலவில் நம் நாட்டில் சில திருமணங்களே செய்து முடித்துவிடலாம் என்று எண்ணத் தோன்றுகிறதா...?

## நிறைய திருடினால் திருமணம்...

மகாராஷ்டிரா மாநிலத்தில் ஊஷ்மானாபாத் மாவட்டத்தில் 'பாஸ்பர்தி' என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள்.

இவர்களுடைய முக்கிய தொழில் பிக்பாக்கெட் மற்றும் திருட்டு ஆகும்.

இந்த இனத்தில் திருமணம் நிச்சயம் ஆகும் முன், பெண் வீட்டார் பல மாப்பிள்ளைகளின் வீடுகளுக்குச் செல்வார்கள்.

திருமணம் வேண்டும் ஆண், தான் இதுவரை களவாடிய பொருட்களை மணப்பெண்ணின் பெற்றோருக்குக் காட்ட வேண்டும்.

எந்த மாப்பிள்ளை வீட்டில் அதிகமாக திருட்டுப் பொருட்கள் காட்டப்படுகிறதோ அவனே மணமகன் ஆவானாம்.

நல்ல ஊரு.... நல்ல திருமணம்

## திருமணமில்லா தீவு

'ஆல்ஸெயின்ட்ஸ் ஆண்டிகுவா' என்ற கரீபியன் தீவில் வசிக்கும் ஆண் மக்கள் அனைவருக்கும் ஆறு அல்லது ஏழு நிலையான காதலிமார்கள் இருக்கிறார்கள்.

அங்குள்ள பெண்களுக்கும் பல காதலர்கள் உண்டு. வெளிநாட்டவருக்கு வியப்பாகத் தோன்றும் இந்த நாட்டு வாழ்க்கை முறையில், கல்யாணம் செய்து கொள்வது என்ற வழக்கம் இங்கே இல்லாததுதான்.

ஒரே சமயத்தில் ஆண் மகன் ஒருவன் பல பெண் களோடு வாழ்க்கை நடத்துவதோ அல்லது ஒரு பெண் பல ஆடவர்களோடு வாழ்க்கை நடத்துவதோ இங்கே குற்றமே இல்லை.

மிகப் பெரும்பாலான ஆண் மக்கள் ஆறு அல்லது ஏழு வைப்பாட்டிகளோடு முறை போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள்.

ஒரே நிபந்தனை; குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் அவ்வளவுதான்.

## கல்யாணம் பலவிதம்!

பெண்ணின் பெற்றோர்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு வயது வந்த ஆடவனை மணமகனாக்கி, தமது மகளை தாரை வார்த்துக் கொடுத்து, அக்னி சாட்சியாக திருமணம் நடைபெறும்....

இதில் மணமகளுடைய விருப்பம் தேவை இல்லை. பெற்றோர்களுடைய முடிவே இறுதியானது.

தர்மம், அரித்தம், காமம் என்னும் மூன்று வாழ்க்கைத் துறைகளிலும் எந்தக் குறையும் இன்றி உன்னோடு மணவாழ்க்கை நடத்துவேன் என்று மணமகன் தனது மனைவிக்கு உறுதி கூறுவான். இத்திருமணத்திற்கு 'பிராமம்' என்று பெயர்.

தன் மகளை தட்சணையோடு சேர்த்துக் கொடுத்து விடுதல் 'தைவம்' மணமுறை எனப்படும்.

'ஆர்ஷம்' என்னும் வகை மணமரபில் வரதட்சணைக்குப் பதிலாக ஒரு பசுவையும் எருதினையும் கொடுத்து, பெண்ணை ஆடவனுக்குக் கொடுத்துவிடுவர்.

'பிரஜாபத்யம்' என்னும் திருமணம், வரதட்சணை யின்றி ஒரு பெண்ணை ஓர் ஆடவனுக்கு கொடுப்பது.

'காந்தர்வம்' என்பது பெற்றோரும், மற்றோரும் அறியாமல் ஒரு பெண்ணும் ஓர் ஆடவனும் தங்கள் விருப்பம் ஒன்றையே காரணமாகக் கொண்டு தம்மில் மணந்து கொள்ளுதல். இவ்வகைத் திருமணத்தில் வைதீக சடங்குகளுக்கு இடமில்லை.

'ஆசுரம்' என்னும் மணமுறையில் மணமகளை விலைக்கு வாங்கிக் கொண்டு மணம் முடிப்பது.

'ராக்ஷசம்' என்பது ஒரு பெண்ணை ஓர் ஆடவன் வலியச் சென்று கவர்ந்துவிடுதல். ருக்மணியை கிருஷ்ணன் அவ்வாறு கவர்ந்து சென்றார் என்கிறது புராணம்.

'பைசாசம்' என்பது தூக்கத்திலோ, புத்தி தவறி விட்டதாலோ, குடி வெறியினாலோ தன்னை மறந்திருக்கும் ஒரு பெண்ணை ஓர் ஆடவன் அடைந்து பின் மணம் முடிப்பது.

பிராமம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம், காந்தர்வம், ஆசுரம், ராக்ஷசம், பைசாசம் என எண் வகை திருமணங்களை புராணங்கள் தெரிவிக்கின்றன.

## புரூனே இல்லத் திருமணம்!

உலகில் மிகப்பெரிய கோடீஸ்வரராகக் கருதப் படுபவர் புரூனை மன்னர் சுல்தான் ஹசனால் போல்கியா. 1996-ஆம் ஆண்டு தம் மூத்த மகள் ரஷீதாவுக்குத் திருமணம் செய்தார். அரசருக்கு இரண்டு மனைவிகள். ராணி ராஜ இஸ்தேரி சலேஹாதான் மணமகளின் அம்மா.

மணமகன் அநாக் அப்துல் ரஹீம் கெமாலுதீன். இவர் ஒரு பிசினஸ் மேன். ராஜ குடும்பத்துக்குத் தூரத்துச் சொந்தக்காரரும் கூட. ஆனாலும், இது ஒரு காதல் திருமணம். மணமகன் அப்துல், ராஜகுமாரியை விட ஒரு சில மாதங்கள் இளையவர்.

16 நாள் திருமண நிகழ்ச்சியில் சீர்வரிசைகள் தான் மிகவும் மலைக்க வைத்தன. திருமணத்திற்கு இரண்டு நாள் முன்பு 21 உதவியாளர்கள் வைர, வைடூரிய, தங்க ஆபரணங்கள் கொண்ட தட்டுக்களை ஏந்தி, அரண் மனைக்குள் அணிவகுத்து நின்றனர்.

மணமகள், மணமகனுக்கு அளித்த சீர் வரிசைகள் இவை. கோல்டு ரோலக்ஸ் வாட்ச், விலையுயர்ந்த கற்கள் பதித்த ஷூக்கள், ஹேண்ட்பேக்குகள் போன்றவையும் இதில் அடக்கம்.

இந்த சீர்வரிசை அணிவகுப்புக்குத் தலைமை தாங்கியவள் ஒரு சிறு பெண். மணமகள் அணிய வேண்டிய

அத்தனை நகைகளையும் இவளே அணிந்துகொண்டு காணப்பட்டாள்.

மலாய் நாட்டு வழக்கப்படி இந்தச் சிறுமியும் மணமகளின் சீர்வரிசைப் பொருளாம். அதேபோல் 21 உதவியாளர்கள் வைரம், தங்கம் வகைகளுடன் சீர் வரிசை அணிவகுப்பு.

இந்த முறை நகைகள் அணிந்த சிறுமியோடு, ஒரு சிறுவனும் துணைக்கு வந்தான். மணமகனின் அணிகலன் களுடன் இந்தச் சீர்வரிசை அணிவகுப்பில் வரதட்சணைப் பணம் எவ்வளவு...? 1000 டாலர்கள் மட்டுமே. பொதுவாக மலாய்த் திருமணங்களில் இந்த வரதட்சணைத் தொகை புத்தம் புது கரன்சி நோட்டுகளாக ஓர் ஆல்பத்தில் வைத்து அளிக்கப்படுமாம்.

ஆனால், இந்த ராஜபோக திருமணத்தில் இந்தத் தொகை வித்தியாசமாக அளிக்கப்பட்டது.

40 உதவியாளர்கள் வெள்ளை நிற உடையில் அணிவகுத்து வர, அவர்கள் ஒவ்வொருவரும் போட்டிருந்த மஞ்சள் பட்டியில் 25 டாலர்கள் என்று எழுதியிருந்தது. பட்டிகளின் கூட்டுத் தொகை 1000 டாலர். 17 முறை குண்டுகள் முழங்குவதும் முக்கிய திருமண நிகழ்ச்சிகளுள் ஒன்று.

திருமணத்திற்கு முன் நடந்த மருதாணி இடும் நிகழ்ச்சியில், அரசருக்கும் அவருடைய இரண்டு மகன் களுக்கும் பங்குண்டு. திருமணம் முடிந்து மணமக்கள் வலம் வந்த வாகனம் என்ன...

தங்க வேலைப்பாடுகள் மிளிரும் கோல்டன் கார். அதுவும் ரோல்ஸ் ராய்ஸ். பின் இருக்கையில் ராஜ முத்திரை பதித்த சிறப்பு இரட்டைச் சிம்மாசனம். மேலே நிழலுக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட குடை. அத்தோடு, பக்கத்திலேயே பணிப்பெண்கள் வேறு குடைகளைப் பிடித்துக் கொண்டு நடந்து வந்தனர்.

பப்ளிக் பாலிஸி அட்மினிஸ்ட்ரேஷனில் முதுநிலைப் படிப்புப் படித்திருக்கும் இளவரசிதான், ஏற்கெனவே வேலை பார்த்து வந்த அரசாங்க அமைச்சகத்தில் வேலையைத் தொடர்வார் என்று சொல்லப்பட்டது.

இலண்டனில் பிசினஸ் படிப்புப் படித்திருக்கும் மணமகன் அப்துல், தம் ரியல் எஸ்டேட் மற்றும் வர்த்தகத்தைத் தொடரு வாராம். இந்த இளைய தலைமுறைக்காக தனியாக ஒரு சொகுசு அரண்மனை கட்டப்படும் என்பதும் திருமணச் செய்திகளுள் ஒன்று.

தெரியாத, அறிவிக்கப்படாத மற்ற விபரங்கள். (இதை வெளிப்படையாகச் சொல்வது அவர்களின் தகுதிக்கு இழுக்கு என்பது ஓர் அரண்மனை அதிகாரியின் பதிலாக இருக்கிறது.)

மணமக்கள் தேனிலவுக்குச் செல்லவிருக்கும் இடமும் இரகசியமாக வைக்கப்பட்டது. பிரபல பாப் பாடகர் ஸ்டீவ் வொண்டரின் இசை நிகழ்ச்சி தனியே மணமக்களுக்கு ஒரு முறையும், பின்னர் பொது மக்களுக்காக ஒரு முறையும் நிகழ்த்தப்பட்டது இலவசமாக!

அடேங்கப்பா... திருமணம்!

## குடியுரிமை வேண்டி.....

**ஹா**ங்காங்கில் வியட்நாமைச் சேர்ந்த பெண்கள் பலர் நுழைந்துவிட்டார்கள். இவர்களை அகதிகளாக முகாம்களில் வைத்திருக்கிறார்கள்.

இந்தப் பெண்கள் குடியுரிமை பெற, ஹாங்காங்கைச் சேர்ந்த ஆண்களை மணம் செய்து கொள்கிறார்கள்.

அப்படி மணம் செய்து கொண்டால், உடனே அவர்களுக்குக் குடியுரிமை கிடைத்துவிடுகிறதாம். ஆட்சி முடிந்து அடுத்து சீனாவின் கைக்கு மாறப்போகிறது.

ஆகவே, அங்கேயுள்ள வியட்நாம் பெண்கள், யாரையாவது மணந்து கொண்டு, மேலை நாடுகளுக்குப் போக விரும்புகிறார்கள்.

ஹாங்காங்கிலிருந்து ஆஸ்திரேலியா அல்லது பிரிட்டனுக்குப் போகக் குறுக்குவழி இது என்று கூறப் படுகிறது.

ஒரு பெண்ணின் குடியுரிமையை திருமணமே நிச்சம் செய்கிறது!

## திருமணமா, இரத்தப் பரிசோதனை...

**அ**மெரிக்காவில் திருமணம் செய்து கொள்ள காத்திருக்க வேண்டும். அதாவது, மணமக்களைப் பரிசோதித்து குறிப்பாக இரத்தப் பரிசோதனை செய்து பார்த்த பிறகே... திருமணம் செய்து கொள்ள அனுமதி தருவார்கள். இதனால், பல தம்பதிகள் திருமணம் செய்து கொள்ள தாமதமாகிறது.

குறிப்பாக, காதலர்கள் தினத்தன்று அனைவரும் திருமணம் செய்து கொள்கின்றனர். இதற்காக இரத்தப் பரிசோதனை, அனுமதிக்குக் காத்திருத்தல் போன்ற பிரச்சனைகள் இல்லாத திருமண நிகழ்ச்சிக்குப் பெயர் பெற்ற லாஸ்வேகாஸ் என்னும் நகருக்குப் புறப்பட்டு விடுகின்றனர்.

கடந்த (1997) ஆண்டு காதலர் தினத்தில், 45 டாலர் செலவில் மாதா கோயிலில் ஆறு மாத கர்ப்பிணியான தன் காதலியுடன் வந்து திருமணம் செய்து கொண்டார் ஒரு காதலர். இதற்கும் மாதா கோயிலில் நீண்ட கியூ.

இன்னும் சில மாதா கோயில்களில் 2 அல்லது 3 நிமிடங்களிலேயே திருமணம் முடிந்துவிடுகிறது. இந்த கியூவில் நிறைய ஜோடிகள் வந்து சேர்ந்தனர்.

லிட்டில் ஒயிட் செப்பல் என்ற சர்ச்சில் 100-க்கும் மேற்பட்ட ஜோடிகள் திருமணம் செய்து கொள்ள கியூவில் வந்தனர்.

இங்கே திருமணச் செலவு 45 டாலர் மட்டுமே. சமயச் சடங்குகளுக்கு 25 டாலர். புகழ்பெற்ற மனிதர்கள் திருமணம் செய்து கொண்ட ஆலயம் இது. அதனால் இவ்வளவு கூட்டம்.

இன்னும் சிலர், டாக்ஸியின் பின் சீட்டில் அமர்ந்து திருமணம் செய்து கொண்டனர்.

லூகோ, கெல்லின் என்ற ஒரு ஜோடி நியூயார்க் நகரில் உள்ள ஓர் ஓட்டலில், சூடான சாக்லெட் ஊற்றப்பட்டு குளிர்விக்கப் பட்ட குளியல் தொட்டியில் இருந்தபடியே... பாதிரியார் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டனர்.

என்ன ஒரு வேடிக்கை என்றால், காதலர்கள் தினத்தில் காத்திருந்து விசேஷமாகத் திருமணம் செய்து கொள்ளும் அமெரிக்கர்களில் பலர், 41 வயதுக்குள் இரண்டு முறை திருமணம் செய்து கொண்டவர்களாக இருப்பதுதான்.

பெண்களும் இந்த 41 வயதிற்குள் விவாகரத்து செய்து, இன்னொருவரை மணந்து கொண்டு விடுகிறார்களாம்.

என்ன திருமணமோ, என்ன வாழ்க்கையோ!

## பூ மழை தூவ...

**ஆ**ண்ட்ரே அகாஸி உலகின் புகழ் பெற்ற டென்னிஸ் நட்சத்திரம். இவ்விளையாட்டில் கோடி கோடியாகப் பணம் சம்பாதித்தவர்.

ப்ரூக் ஷீல்ட்ஸ் என்னும் புகழ்பெற்ற ஹாலிவுட் நடிகை இவரைக் காதலித்தார்.

அகாஸி எங்கே டென்னிஸ் விளையாடினாலும், அங்கே போய் அமர்ந்து ஆட்டத்தை ரசிப்பார். ஊக்கு விப்பார். இருவரும் மூன்று ஆண்டுகள் காதலித்தார்கள்.

ஒரு நாள் - திடீரென்று திருமணத்திற்கு ஏற்பாடு செய்யச் சொன்னாள், ப்ரூக். அதன்படியே அகாஸியும் ஏற்பாடு செய்தார்.

லாஸ்வேகாஸ் நகரில் கடலை பார்த்தபடி அமைந்த ஒரு சர்ச்சில், இருவருக்கும் திருமணம் நடந்தது.

இதில் ஹைலைட் என்னவென்றால், வானத்தில் நான்கு ஹெலிகாப்டர்கள் பறந்து, சுற்றிச் சுற்றி பூக்களை அவர்கள் மீது தூவியதுதான்!

திருமணத்திற்கு முக்கியப் பிரமுகர்களாக நூறு பேர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தார்களாம்.

ப்ரூக் ஷீல்ட்ஸ் அகாஸியை விட ஐந்து வயது மூத்தவராம்!

## மாப்பிள்ளைக்கும் தாலி!

**வி**ட்டல் என்பவர் செய்த திருமணம் வித்தியாசமான ஒன்றாகும்.

ஆமாம், இவர் கூடுவாஞ்சேரியைச் சேர்ந்தவர். இவர் திருமணம் பலராலும் பேசப்படும் ஒன்றாகிவிட்டது.

28 வயதான இளைஞர், விட்டல். எட்டாவது வரைதான் படிப்பு. தன் வாழ்நாளில் வித்தியாசமாக எதையாவது செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டவர்.

தன் கல்யாணத்தையே வித்தியாசமாக செய்தால் என்ன என்று முடிவு செய்தார்.

திருமணத்தை எல்லாரும் தவிர்க்கும் மார்கழி மாதத்தில் நடத்தணும். தாலியை தான் மட்டும் மனைவிக்குக் கட்டுவதுடன் மனைவியும் தனக்கு ஒரு தாலி... கட்டி, கல்யாணம் நடக்கணும் என்று முடிவு செய்தார்.

இவர் எண்ணியபடியே... கல்யாணத்தில் இவர் மணந்த பெண் இவருக்குத் தாலியைக் கட்டினார்.

தாலி கட்டிய நிகழ்ச்சி முடிந்தவுடன் விதவைப் பெண் ஒருவரின் காலில் விழுந்து முதல் ஆசீர்வாதத்தைப் பெற்றார் விட்டல்.

இது இந்தியா முழுதும் பேசப்பட்ட நிகழ்ச்சியாக அமைந்து விட்டது.

இனி எந்தக் கல்யாணத்தில் மணமகள் மாப்பிள்ளைக்குத் தாலி கட்டினாலும் அது 'விட்டல்' கல்யாணம் என்றே குறிப்பிடப்படும்.

## திருப்புமுனை திருமணம்!

50 வருட காலத்திற்குப் பிறகு, கிழக்கு ஐரோப்பாவில் இராஜ மரியாதைகளுடன் நடைபெற்ற முதல் திருமணம் இதுதான்.

ரோமானிய இளவரசர் பால், எந்தவிதமான ஆடம்பரமும் இன்றித் திருமணம் செய்து கொள்ள விரும்பினார்.

ஆனால், விதிகள் இடம் கொடுக்கவில்லை. எனவே, பழங்காலப் பாரம்பரியக் கிரீடத்தை இளவரசர் பாலுக்கும் மணமகள் லியாடிரிப்பிற்கும் அணிவித்து, அரச முறைப்படி மாதா கோயிலில் இவர்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

1996-இல் நடந்த முக்கியமான திருமணம் இது!

## நகை நான்கு இலட்சம்....

அமெரிக்காவின் புகழ் பெற்ற மகா டென்னிஸ் வீரர் பீட் சாம்ப்ராஸ், 14-வது கிராண்ட்ஸ்வாம் பட்டத்தை வெல்ல முடியாதபோதும், தன் திருமணத்தை தள்ளிப் போட வில்லை.

2000 மே 29-ஆம் தேதியே பீட்டுக்கும் அமெரிக்க நடிகை பிரிகெட்டி வில்சனுக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

குறிப்பிட்டபடி பேவர்லி ஹில்ஸில் உள்ள சாம்ப்ராஸின் இல்லத்தில் செப்டம்பர் 30-ஆம் தேதி இவர்களின் திருமணம் நடந்தது.

திருமணத்தன்று சாம்ப்ராஸின் மனைவி, நடிகை பிரிகெட்டி அணிந்திருந்த நகைகளின் மதிப்பு மட்டும் நான்கு இலட்சம் டாலர்கள்!

## இவளன்றோ நல்ல பெண்மணி?!

24 வயதான தெரஸா வாகன் என்ற பெண் 1922-ஆம் ஆண்டு ஷெஃப்பீல்டு நீதிமன்றத்தில் பல கணவர்களை மணந்த குற்றத்திற்காக முன் நிறுத்தப்பட்டாள்.

நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டுகளில் 61 ஆண்களை மணந்து கொண்ட குற்றத்தையும் ஒப்புக்கொண்டாள். ஒரே சமயத்தில் இவ்வளவு பேர்களை எப்படிச் சமாளித்தாள், இந்த இங்கிலாந்துப் பெண்...?

இவருடைய 'கணவன்மார்கள்' பிரிட்டன், ஜெர்மனி, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் பரவலாக வாழ்ந்து வந்தனர்.

எனவே, ஒருவர் உறவு ஒருவருக்குத் தெரியாமல் இருந்ததால் சண்டை சச்சரவுக்கு இடமில்லையாம்!

## தாலிக்கு... பதில்....

நம் நாட்டில் திருமணத்தின்போது மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டுகிறான்... இல்லை, மோதிரம் அணிவிக்கிறான்.

ஆனால்,'மொராக்கோ' நாட்டில் அப்படி இல்லை. அங்கு 'காபிலஸ்' என்னும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

மணமகளின் கழுத்தில் தாலி கட்டுவதற்குப் பதில், அவள் தொண்டையில் இலேசாகக் கத்திமுனையால் மத குரு குத்திக் காயப்படுத்துகிறார்.

பொங்கி வரும் இரத்தத் துளிகள் கீழே தரையில் சிந்தியதும், அவள் குறித்தவனை மணவாளனாக மனம் உவந்து ஏற்றுக் கொண்டவளாகிறாள்.

தொன்று தொட்டு நடந்து வரும் ஒரு பழக்கமாகும் இது. இச்சடங்கின் உட்பொருள் என்னவெனில், 'சிந்திவிட்ட அளவு இரத்தம் என் உடலில் இருக்கும் வரை, என் கணவரை விட்டுப் பிரியமாட்டேன். அப்படி பிரிவேனாகில், இப்பொழுது சிந்திய இரத்தம் போல் என் உடலில் ஓடும் இரத்தம் முழுவதும் தரையில் சிந்தி வழியுமாக' என்பதாம்.

## அக்கரைக்கு இக்கரைப் பச்சை!

ராகேஷ் யாதவ் என்னும் இளைஞர், மத்தியப் பிரதேசத்தில் உள்ள சிவபுரி என்னும் ஊரில் இருக்கிறார்.

இவருக்குப் படிக்கும்போதே பெற்றோர் திருமணத்தை நிச்சயித்துவிட்டார்கள். மண நாளன்று இவருக்குத் தேர்வு வந்துவிட்டது. பரீட்சையில் பாஸ் செய்தாக வேண்டும்.

அதே நேரத்தில், மணமும் செய்து கொள்ள வேண்டும். திருமணச் சடங்குகளை சீக்கிரம் முடிக்கும்படி புரோகிதரிடம் சொன்னார்.

ஆனால், புரோகிதர் மெல்ல மந்திரங்களைச் சொல்லி நேரத்தைக் கடத்தினார்.

பாதியில் எழுந்தார் மாப்பிள்ளை. தேர்வு எழுதிவிட்டு வந்துவிடுவதாகச் சொல்லி ஓடிவிட்டார்.

ஆனால், தேர்வு தொடங்கவில்லை. இன்னும் நேரம் இருந்தது. திரும்ப மணமேடைக்கு ஓடிவந்தார்.

அதற்குள் புரோகிதர் கோபித்துக் கொண்டு போய் விட்டார். திரும்பத் தேர்வு எழுதப்போனார். உள்ளே விடவில்லை.

ஆகையால், திருமணமும் நடக்கவில்லை. தேர்வும் எழுத முடியவில்லை. இரண்டிலும் தோல்வியை அடைந்தார் இளைஞர்.

## குறட்டையால் வந்த வினை!

61 வயதான கடற்படை அதிகாரியான ஜிம் க்ரோஃபோர்டு என்ற அமெரிக்கர், டோரத்தி எப்ரைட் என்ற 21 வயது இளம் பெண் மீது காதல் கொண்டார். நிச்சய தார்த்தமும் நடந்தது.

திருமணம் செய்து கொள்ளும் நாள் நெருங்கியபோது டோர்த்தி, ஜிம்மை கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விட்டார்.

அவர் பயங்கரமாகக் குறட்டை விடுவதை நிறுத்தினால் தான் திருமணம் என்று நிபந்தனை விதிக்கவே, இந்த 61-வது மாப்பிள்ளை குறட்டை விடுவதைத் தடுக்கும் அறுவை சிகிச்சையை உடனே செய்து கொண்டார்.

பிறகு, இருவரும் இனிதே திருமணம் செய்து கொண்டார்கள்.

குறட்டைச் சத்தம் மீண்டும் வந்து, அவர்கள் தேனிலவு பாதிக்கப்படாமல் இருந்ததே!

## எதுவுமே வேண்டாம்!

**கோ**வாவில் வரதட்சணை பிரச்சினைக்குப் பஞ்சமே இல்லை. வரதட்சணை கொடுமை காரணமாக ஆண்டியாகி விட்ட பெற்றோர் எத்தனையோ பேர் உண்டு.

பதிவுத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் குடும்பங் களில் திருமணம் பதிவு செய்யும்போது, ''தந்தையின் சொத்துக்களில் இனி நான் எதுவுமே கேட்கமாட்டேன்'' என்று எழுதிப் பெண்ணிடம் கையெழுத்து வாங்கி விடுகிறார்கள்.

ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் இருந்து அவளுக்குத் திருமணம் நடைபெற்றால், ''உங்கள் வீட்டிலேயே வந்து குடித்தனம் செய்வேன். சொத்தில் உங்கள் மகளுக்குப் பாதி எனக்குப் பாதி'' என பத்திரம் எழுதிக் கொடுக்கிறார்களாம்.

## 101 வயதில் திருமணம்!

டையரா ஆவ்ரோ மோவிச் என்பவர், தனது 101 ஆவது வயதில், 95 வயதான யூலாஷிவிச் என்ற பெண்மணியை மணந்து கொண்டார்.

இத்திருமணம் 1963 நவம்பரில் யூகோஸ்லாவகியா நாட்டின் பெல்கிரேட் நகரில் நடந்தது.

இவர்கள்தான் உலகிலேயே வயதான மாப்பிள்ளை பெண்!

## விளையாட்டுக் கல்யாணம்!

1988-ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸில் நடந்த 24 மைல் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்ட இணைபிரியாக் காதலர்கள் டோனிவெல்லர், ஜாக்ஸ்லேட்டார்.

போட்டி முடிந்ததும், அதே உடையுடன் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

## ரூ.100ல் திருமணம்

ஆயிரக்கணக்கில் பணம் இருந்தால்தான் திருமணம் செய்ய முடியும் என்றில்லை. நூறு ரூபாய் இருந்தால் கூட திருமணம் செய்துவிட முடியும்.

உண்மைதான். பீகாரில் உள்ள மக்சார் என்பது கங்கை நதிக்கரையின் ஓரத்தில் இருக்கின்ற கிராமப்பகுதி. அங்கே ராதேஷ்யாம் உபாத்யாயா என்ற கல்யாணங்கள் நடத்தி வைக்கும் சுவாமிகள் 'ராம் ரேகாகாட்' என்ற இடத்தில் இருக்கிறார்.

சிக்கனத் திருமணங்களை நடத்தி வைப்பத்தில் இவர் தனித்தன்மை பெற்றவர். இங்கு திருமணங்களை முறைப்படி நடத்த மொத்தச் செலவு ரூ.100 முதல் ரூ.500 வரையில்தான்.

இதுவரை 30,000 திருமணங்களை இப்படிச் சிக்கனமாக நடத்தியிருக்கிறார். ராம் ரேகா காட் என்ற இந்தப் பகுதியில், 40 வருடங்களுக்கு முன் திருமணம் நடத்தப்பட ஆரம்பித்தன.

உத்திர பிரதேசத்தின் காஜிப்பூர், பலியா, பீகாரின் போஜ்பூர், ரோஹ்தான், பாடிலா போன்ற இனத்தவர்களின் திருமணங்கள் இங்கு அதிக அளவில் நடக்கின்றன.

நம் நாட்டில் வாழை இலை வாங்கும் செலவில், திருமணமே நடத்தப்பட்டு விடுகிறதே! பேஷ்... பேஷ்!

## புரட்சித் திருமணம்

**சி**ல மதத் தலைவர்கள் அடிக்கடி தம் பேச்சுக்களில் வேதங்களைப் படிப்பது, மந்திரங்களைச் சொல்வது, யாகங்களை நடத்துவது போன்றவற்றை ஆண்கள்தான் செய்ய வேண்டும் என்பதுபோல் பேசுவது வழக்கம்.

மேற்கு வங்காளத்தில் பெண்கள் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் சிலருக்கு இது சரியாகப் படாததால், அவர்களே வேதப் புத்தகங்களை உரக்கப் படித்து அவற்றைப் பாராயணம் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

இவர்களுக்கு மேல் ஒரு படி சென்றுவிட்டார், நடிகையான அபர்ணா சென் என்பவர்.

இவர், நடிகை சுசித்ரா சென்னின் மகள் என்பதோடு, தேசிய அளவில் பரிசு பெற்ற இயக்குனரும்கூட.

இவர், தன் மகளுக்கு ஒரு பெண் சாமிகளைக் கொண்டு மந்திரம் சொல்லச் செய்து, யாகம் நடத்தித் தன் பெண்ணைத் தானே 'தாரை வார்த்துக் (சம்ப்ரதான்) கொடுத்து திருமணத்தையே புரட்சிகரமாக நடத்தி இருக்கிறார்.

பெண் சாமிகள் 'மாங்கல்யம் தந்துனானே' சொல்ல, மேளம் முழங்க, பெண்ணின் அம்மா அபர்ணா சென் மடியில் அமர, மாப்பிள்ளை தாலி கட்டி, விழாவைக் களைகட்டச் செய்து விட்டார்கள்.

## வரதட்சணை 8,00,000 டாலர்!

அரபு நாட்டில் புகழ் பெற்ற தொலைக்காட்சி நடிகை ஜிகான் நாசர்.

இவர் சவுதி நாட்டு தொழிலதிபர் சௌட் அல் ஷார்பாட்லி என்பவரை இலண்டனில் திருமணம் செய்து கொண்டார்.

இதற்காக 8,00,000 டாலர்களை வரதட்சணையாக மணமகள் பெற்றுக் கொண்டார்.

27 வயது நாசர், எகிப்து நாட்டு நடிகை. அரபு மொழி பேசும் நாடுகளிலும் இவரது தொடர் ஒலிபரப்பாகிறது.

அல்ஸார்பாட்லிக்கு லெபனான் மற்றும் பிரிட்டனிலும் தொழில் உண்டு. நாசர் குடும்பத்தாரை எகிப்து ஏர் விமானம் ஒன்றை வாடகைக்குப் பிடித்து இலண்டனுக்கு அழைத்து வந்தார் இவரது கணவர்.

1981-இல் இளவரசி டயானா அணிந்த திருமண ஆடையையே இந்த நடிகை அணிந்து கொள்ள, இஸ்லாமிக் சென்டரில் திருமணம் இனிமையாக நடந்தது.

காதல் எப்படி, எங்கே நுழைகிறது என்று யார்தான் சரியாகச் சொன்னார்கள்...?

## போர்க்களத்தில் திருமணம்!

**கா**தல், ஒருவருக்கு எந்தச் சூழ்நிலையில் ஏற்படும் என்று யாராலும் சொல்ல முடியாது. அது பூந் தோட்டத்திலும் ஏற்படும் போர்க்களத்திலும் ஏற்படும்.

இதற்கு ஒருவரை உதாரணமாகச் சொல்ல வேண்டு மென்றால் எம்மாவைக் கூறலாம்.

29 வயதான எம்மா எமக்யூன் என்ற பிரிட்டீஷ் பெண்ணுக்கும், 40 வயதான சூடான் நாட்டு கொரில்லாப் படைத் தலைவருக்கும் இடையே போர்க்களத்தில் கடும் பசி பட்டினியுடன் ஏற்பட்ட காதல் திருமணத்தைச் சொல்லலாம்.

கொரில்லாத் தலைவரின் பெயர் ரெய்க் மாச்சர். இவருக்கு சூடன் பெண் ஒருத்தி ஏற்கெனவே மனைவி ஆகியிருக்கிறாள். இரண்டு குழந்தைகளுடன் பிராட்போர்ட் என்னுமிடத்தில் முதல் மனைவி இருக்கிறாள்.

எம்மா ஆக்ஸ்போர்டு பாலிடெக்னிக்கில் கலை மற்றும் வரலாற்றுக் கலைப் பாடங்களைப் படித்தவர்.

முதல் ஆறு மாதம் கர்த்தூம் என்ற இடத்திற்கு ஆராய்ச்சிக்குச் சென்றார். பிறகு இலண்டன் பல்கலைக் கழகத்திற்குத் திரும்பி, கிழக்கு ஆப்பிரிக்காவின் வரலாற்றையும், அரசியலையும் பற்றிப் படித்து எம்.ஏ. பட்டம் பெற்றார்.

ஆப்பிரிக்க நாடுகளில் மிகப் பெரியது சூடான். எனவே, அந்த நாட்டை தன் டாக்டர் பட்ட ஆய்விற்காகத் தேர்ந்தெடுத்தார்.

அப்போது, சூடானில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டு இருந்தது. அந்த நாட்டு இராணுவத்தை எதிர்க்க சூடான் மக்கள் விடுதலை இயக்க இராணுவம்' என்ற பெயரில் ஒரு கொரில்லாப் படை இயங்கியது. அந்தப் படையின் தலைவர்தான் இந்த ரெய்க்.

ஐ.நா.வின் கீழ் எம்மாவிற்கு வேலையும் கிடைத்தது. எனவே, சமூக நல சேவகியாகவும், ஆய்வு மாணவியாகவும் விமானம் மூலம் சூடான் சென்று இறங்கினார்.

1988-ஆம் ஆண்டு சூடானில் வந்து இறங்கியவுடனேயே எத்தியோப்பியாவில் இருந்து வந்து தஞ்சமடைந்த அகதிகளுக்குக் குரல் கொடுத்தார். இவர்கள் அனைவரும் சூடான் நாட்டைச் சேர்ந்தவர்களே.

இந்தக் கனிவான உள்ளம் கமாண்டர் ரெய்க்கைக் கவர்ந்து விட்டது.

'ரெய்க்கைப் பார்த்த முதல் கணத்திலேயே எனக்கு அவர் மீது காதல் பிறந்துவிட்டது. அவர்தான் என்னைச் சூடான் முழுவதும் சுற்றிக் காண்பித்தார். ரொம்ப நாள் பழகிய பிறகுதான் என் மீது அவருக்குக் காதல் பிறந்தது.' என்கிறாள் எம்மா.

யார்க்ஷயரில் பிறந்த எம்மாவின் திருமணம் 1989-இல் நடந்தது. ஸோபட் நதிக்கரையில் உள்ள சிறிய நகரமான நஸிர் பகுதியில் கொரில்லாப் படை வீரர்களின் முன்னிலையில் திருமணம் நடந்தது.

ஒரு வருடமாகப் போர்க்களத்தில் பசி, பட்டினியுடன் போராடி வளர்ந்த காதல் இது.

மாப்பிள்ளை மட்டும் சீருடையில் இருந்தார். எம்மா ஓர் அழுக்கான வெள்ளைத் துணியை அணிந்திருந்தார். காலில் செருப்புக்கூட இல்லை. சேறு மண் கலந்த கால்களை அன்றுதான் திருமணத்திற்கெனக் கழுவியிருந்தார்.

ரெய்க் ஆப்பிரிக்கப் பாசி மாலை ஒன்றை அணிவிக்க, திருமணம் முடிந்தது.

பசி, பட்டினியுடன் இருந்த வீரர்களுக்காக ஒரு மாட்டை அடித்து விருந்து கொடுக்க வேண்டும் என விரும்பினார்களாம்!

மாட்டுக்கு எங்கே போவது...? எனவே எந்தவித விருந்து வேடிக்கை போன்றவை இல்லையாம்.

## இதற்கும் சங்கமா?

**ஸ்**பெயினின் வடபகுதியில் உள்ள மலைப்பிரதேசக் கிராமங்களில் அனைவரும் பிரம்மச்சாரிகளே. பெண்களே இங்கு இல்லை.

பொழுதுபோக்கு அம்சங்கள் ஏதும் இங்கு இல்லாததால் இங்கிருந்த பெண்கள் நகர்ப் பகுதிக்கு வெளியேறி விட்டனர்.

இப்படி இந்த கிராமம் இருப்பதால், இந்தக் கிராமங்களின் இளைஞர்களைக் கல்யாணம் செய்து கொள்ள மற்ற பகுதிப் பெண்களும் மறுத்துவிட்டார்கள்.

இதற்காக இளைஞர்கள், சங்கம் அமைத்து உலகிலுள்ள அழகிய பெண்களை தேடிப் பிடித்துத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளார்கள்.

தங்கள் கிராமங்களில் அடிக்கடி விழாக்கள் நடத்திப் பெண்கள் வந்து கலந்து கொள்ளவும், அதன் வழியே திருமணம் நடைபெற வாய்ப்பை உருவாக்கவும் முயற்சி செய்து வருகின்றனராம்.

எல்லாம் பெண்களுக்காகத்தான்!

## இஸாலுக்கு 400 மனைவிகள்!

மொராக்கா நாட்டுப் பேரரசர் இஸால் (1646-1727) என்பவர். இவருக்கு மொத்தம் 888 குழந்தைகள்.

இவ்வளவு குழந்தைகள் இருந்தாலும், எல்லாக் குழந்தை களையும் ஒன்று போலவே நேசித்தார். இவரது 540 ஆண் குழந்தைகள் சேர்ந்து, அரச குடும்பத்தைப் பாதுகாக்கும் படை ஒன்றையும் ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு தாயாரிடமும் எத்தனை பெண் குழந்தைகள் உள்ளதோ... அத்தனை வெள்ளியால் செய்யப் பட்ட முகம் பார்க்கும் கண்ணாடிகளையும், ஒவ்வொரு பையனுக்கும் ஒரு தங்க ஷேவிங் ரேசரும் எனக் கணக்கிட்டுக் கொடுத்தார்.

எல்லாம் சரிதான்! மனைவிகள் எத்தனை பேர்? 400 பேர்...!

## திருமணமா? எலியைக் கொண்டுவா!

மேற்கு ஜாவாவில் உள்ள சு சூகன் மாவட்டத்தில் ஒரு திருமணச் சட்டம் கட்டாயமாகப் பின்பற்றப்படுகிறது.

இங்கே எலிகள் அதிகம். திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஒவ்வோர் இளைஞனும், ஐம்பது எலிகளைக் கொன்று கையுடன் எடுத்து வந்து காட்டினால்தான்... திருமணம் செய்து கொள்ள ஜாவா அரசு அனுமதி தரும்.

எலிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும், தங்கள் திருமணத்தை விரைந்து முடிக்கவும், இரவு பூராவும் கண் விழித்திருந்து, மாப்பிள்ளைகள் அங்கே எலிகளைத் தேடிப் பிடித்து அலைகிற இளைஞர்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது!

நல்லவேளை புலியைப் பிடிக்க சட்டம் போட வில்லை...!

## இவர் மனிதர்!

தான் கறுப்பு என்று தெரிந்தும், தனக்கு வரப்போகும் பெண் நல்ல சிவப்பாக இருக்க வேண்டும். அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற இந்தக் காலத்தில்... ஒருவரின் எண்ணத்தையும், செயலையும் பாருங்களேன்.

அடால்ப் பிரெடரிக் என்பவர் ஸ்வீடன் நாட்டு மன்னர். இவருக்கு ஏழு மனைவிகள். இவர்களுள் இரண்டு பேருக்கு ஒரு கண் கிடையாது.

இரண்டு பேருக்கு ஒரு கால் கிடையாது. இரண்டு பேருக்கு ஒரு கை கிடையாது. மற்றொருத்திக்கு இரண்டு கைகளுமே கிடையாது.

இரக்கமே உண்மைக் காதலுக்கு அடிப்படை என்பது பிரெடரிக்கின் கொள்கை. அந்த இரக்கத்தின் காரணமாகத் தான் இத்தகைய பெண்களை அவர் மனைவிகளாக்கிக் கொண்டாராம்.

## இவர்கள் 'பழ'க் காதலர்கள்!

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் புறநகரப் பகுதியான கிளென்டேலைச் சேர்ந்தவர், சார்லஸ் பார்னஸ் வயது 92.

இதே பகுதியைச் சேர்ந்தவர் கான்ஸ்டன்ஸ் டிரிஸ்கோல். இப்பெண்மணியின் வயது 84.

இருவரும் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்தவர்கள்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன், டிரிஸ்கோலின் கணவர் இறந்துவிட்டார். இதன் பிறகு இவர்களின் நட்பில் முன்பைக் காட்டிலும் நெருக்கமும் அழுத்தமும் ஏற்பட்டது.

1989-ல் பார்னஸின் மனைவி காலமானார். இந்த நிலையில் மழை கண்ட பயிர் போல இருவர் காதலும் செழித்து வளரத் தொடங்கியது.

இருவரும் நாளும் சந்தித்துக் கொண்டார்கள். காதல்.... வளர்ந்தது... வளர்ந்து கொண்டேயிருந்தது....

'ஜோடிகள்' கடைவீதிகளில், பூங்காக்களில் கைகோர்த்து அலைந்தார்கள். மகிழ்ந்தார்கள். ஓட்டலுக்குச்

சென்று விரும்பியதை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிச் சாப்பிட்டார்கள்.

நேரில் சந்திக்காதபோது தொலைபேசியில் மணிக் கணக்கில் பேசிக் கொண்டார்கள்.

பேச்சின் முடிவிலே போனிலேயே 'இச் இச்' என்று முத்த மழை பொழிந்து கொள்வார்களாம்.

ஒரு சமயம் டிரிஸ்கோலின் உடல் நலம் குன்றியபோது, இந்த உறவுக்கு இடைவெளி விழுந்ததாம். அவருக்கு 'அல்சேமியர்ஸ்' நோய் வந்திருப்பது தெரிய'வந்தது. காதலர் துடித்துப் போனார். நோயின் காரணமாக அருகில் உள்ள ஒரு மருத்துவமனையில் டிரிஸ்கோல் அனுமதிக்கப்பட்டார்.

இங்கு தினசரி வந்து காதலியை கவனித்துக் கொண்டார், பார்னஸ்.

இந்த விசயம், டிரிஸ்கோலின் உறவினர்களுக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது.

டிரிஸ்கோலுக்குக் குழந்தை ஏதும் இல்லை. அவரின் உடன் பிறந்தோரின் மகன்களும், மகள்களும்தான் நெருங்கிய உறவினர்கள். அவர்கள்தான் பார்னஸ் மீது ஆத்திரப்பட்டார்கள்.

டிரிஸ்கோலின் சொத்துகளின் மதிப்பு சுமார் 8 இலட்சம் டாலர் (ரூ.30 கோடிக்கும் அதிகம்) சொத்துகள் வேறு யாருக்கும் போய்விடக் கூடாது என்று, உறவினர்கள் அவற்றுக்கு வாரிசாக நீதிமன்றத்தின் மூலம் எழுதி வாங்கிக் கொண்டார்கள்.

இதன் பிறகு, பார்னஸின் கண்ணில் படாமல் இருக்க வேண்டி 500 மைல் தொலைவில் கார்னிங் என்ற சிறு நகரில் உள்ள மருத்துவமனையில் அவரைச் சேர்த்தார்கள். இந்த நகரம் உறவினர்களின் ஊருக்கு மிக அருகில் இருந்தது.

இதனால், ஆடிப் போய்விட்டார் காதலன் பார்னஸ். காதலுக்கு 500 மைல் தூரமா, என்ன? பார்னஸ் அடிக்கடி பறந்து போய் தன் காதலியைப் பார்த்து வந்தார்.

ஒருநாள் பார்னஸை, டிரிஸ்கோல் மிகவும் கோபித்துக் கொண்டார்... என் மீது உங்களுக்கு அன்பே இல்லை. ஆசையே இல்லை. இங்கு நான் இருப்பது செத்துப்போன மாதிரி இருக்கிறது. என்னை மீட்டுச் செல்ல வேண்டும் என்று ஏன் உங்களுக்கு தோன்றவில்லை? என்று பார்னஸை கோபத்தோடு கேட்டார்.

அவரோ... ஏதும் புரியாத நிலையில் கண்களைக் கைகளால் மூடியபடி சிந்தனையில் ஆழ்ந்து போனார்.

இதன் பிறகு, அதிரடியாக அந்த நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. ஒரு வருட மன உளைச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சி அரங்கேறி இருக்கிறது.

'தன் காதலியான டிரிஸ்கோலை, மதிய உணவுக்கு அழைத்துச் செல்கிறேன்' என்று மருத்துவமனைப் பணியாளர் களிடம் பார்னஸ் கூறினார்....

காதலை கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு மெல்ல மருத்துவமனையை விட்டு வெளியேறினார்.

இருவரும் விமானத்தில் ஏறி, சொந்த ஊரான கிளென் டேலுக்கு வந்தார்கள். பலகாலமாகத் தொழுதுவரும்

தேவாலயத்தில், முறைப்படி திருமணம் செய்து கொண்டார்கள்...

இதன் பின்னே, காதலன் மீது டிரிஸ்கோல் வீட்டில் பெண்ணை கடத்திக் கொண்டு போய்விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்க, அப்போது 'அவர் என்னைக் கடத்திக்கொண்டு போகவில்லை. நானே விரும்பிதான் சென்றேன் என்று காதலி கூறினார் என்பதெல்லாம் கதை.

எப்படியோ 92 வயது காதலனும் 84 வயது காதலியும் இணைந்தார்கள் என்பதே மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதானே!

## நான் வருவதற்குள்...!

ஒரு ஹாலிவுட் சினிமா நடிகர் பலமுறை விவாகரத்து செய்து கொண்ட ஒரு நடிகையை மணப்பதாக இருந்தார்.

திருமண நாளன்று நடிகரோ, வேகமாக மாதா கோயிலை நோக்கிக் காரில் வந்து கொண்டிருந்தார்.

அவருடைய கார் ஒரு சிறு விபத்துக்குள்ளாகிவிட்டது. திருமணத்தில் போய் கலந்து கொள்ள மூன்று மணி நேரம் தாமதம் ஆகும்போல் இருந்தது.

உடனே அவர் அருகிலுள்ள அஞ்சல் நிலையத்திற்குப் போய் ஒரு தந்தி அடித்தார்.

'நான் வர மூன்று மணி நேரம் தாமதமாகும். தாமதத்திற்கு வருந்துகிறேன். நான் வருவதற்குள் தயவு செய்து வேறு யாரையும் மணந்து கொண்டு விடாதே!' என்று.

எப்படியிருக்கிறது காதலும், திருமணமும்!

## எலி பிடிக்கிறாங்க....

**ஜா**வாவில் உள்ள இந்திரமாயு கிராமத்தில் எலியைக் கொன்று, கொண்டு வந்து கொடுப்பவனுக்கு பெண் கொடுக்கிறார்கள்.

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்புபவன் பத்து எலிகளையும் தனது மனைவியை விவாகரத்து செய்ய விரும்புபவன் 20 எலிகளையும் கொல்ல வேண்டுமாம்.

## 88 முறை...!

**ஒ**ரிசாவிலுள்ள ஓராலி கிராமத்தில் வாழும் உதய் ஆனந்த தக்கினே என்பவர் 89 முறை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

அவருக்கு வயது 61. இந்தியாவிலேயே நிறையப் பெண்களைத் திருமணம் செய்து கொண்ட ஆள் என்ற பெயரும் இவருக்குண்டு.

இவருடைய முதல் திருமணம் 1949-இல் நடந்தது. அந்த முதல் மனைவி 15 நாட்களில் இவரை விட்டுப் பிரிந்துவிட்டார்.

அதைத் தொடர்ந்து 88 முறை திருமணம் செய்து கொண்டார். இவர்களுள் 57 மனைவிகள் அவரை விட்டுப் பிரிந்து விட்டார்கள்.

இப்போது 6 பெண்களுடன் வாழ்ந்து வருகிறார்.

## பரபரப்பால் பரிதாபம்!

கெய்ரோவில் உம்ஹாசெம் என்ற 18 வயதுப் பெண்ணுக்கு மறுநாள் திருமணம்.

திருமண மகிழ்ச்சியில் ஏக கலகலப்பாய் இருந்த அவள், சீக்கிரமே சாப்பிட்டுத் தூங்கி எழுந்திருக்கலாம் என்ற நோக்கத்தில், அம்மாவை உணவு எடுத்துவரச் சொன்னாள்.

ஆசை ஆசையாய் உணவைத் தட்டில் போட்டு, மிளகுத் தூளைத் தூவி மகளிடம் தந்தார் தயார். அந்த உணவைச் சாப்பிட்ட மகள் கடுமையான வயிற்றுவலி என்று கூறிச் சுருண்டு விழுந்தாள்.

மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். சிகிச்சை பலனில்லாமல் பரிதாபமாக இறந்து போனாள்.

அவசரத்தில் மிளகுப் பொடி என்று நினைத்து எலி விஷயத்தை அவளது தாயார் தெரியாத்தனமாகத் தூவி இருக்கிறாள் என்று பிறகுதான் தெரிய வந்தது.

## இந்த திருமணத்தில்தான்!

அந்தப் பிரபல ஜோடிகள் இரண்டு பேருக்கும் இது மூன்றாவது திருமணம்.

ஜேன் ஃபோண்டோ என்ற பிரபல திரைப்பட நடிகையும், டெட்டர்னர் என்ற டெலிவிஷன் நிறுவன உரிமையாளரும்தான் இந்த மறுமண ஜோடிகள்.

மணமகனுக்கு வயது 53. அவருக்கு ஐந்து குழந்தைகள். பெண்மணிக்கோ இரண்டு குழந்தைகள்.

''இது எனது மூன்றாவது திருமணம் என்ற போதிலும், முதன் முதலாக இப்போதுதான் திருமண மோதிரம் எனக்கு பரிசாகக் கிடைத்திருக்கிறது'' என்று நாணத்துடன் சிரித்துக் கொண்டே கூறுகிறார், ஜேன்ஃபோண்டா.

## முதல் வைர மோதிரம்....

**ஆ**ஸ்திரியாவைச் சேர்ந்த கோமன் மாக்சி லூலியனுக்கும் பர்கண்டியைச் சேர்ந்த மேரிக்கும் 1477-இல் நிச்சயதார்த்தம் நடந்தது.

அப்போது, மணமகளின் விரலில் மாப்பிள்ளை வைர மோதிரம் அணிவித்தார்.

இதன் பிறகுதான், திருமணத்தில் வைர மோதிரம் அணியும் பழக்கம் மேலை நாடுகளில் பரவியது.

அப்போது, மணமகளின் இடது கை நடுவிரலில்தான் மோதிரம் அணிவிக்கப்பட்டது. இதற்கும் ஒரு காரணம் உண்டு.

பெண்ணின் உடலில், இதயத்திலிருந்து நடுவிரல் நுனிவரை காதல் நரம்பு செல்வதாகப் பழங்கால எகிப்தியர்கள் நம்பினார்கள்.

மணமகளுக்கு இடது கை நடுவிரலில் வைர மோதிரம் அணிவித்தார்கள்.

## பானைக்கு தாலி!

**உ**த்ராஞ்சல் மாநிலத்தில் சக்ரதா கிராமத்தில் சபிதா என்ற பெண்ணுக்கு திருமணம் நடந்தது.

முகூர்த்த நேரத்தில் மாப்பிள்ளை வந்து சேரவில்லை. பாராமிலிட்டரி அணியில் வேலை பார்க்கும் அவரால் குறித்த நேரத்தில் வர இயலவில்லை.

முகூர்த்த நேரத்தை தவறவிட விரும்பவில்லை இரு குடும்பத்தினரும். கூடிப்பேசி ஒரு பானையைக் கொண்டு வந்து அதற்கு மணமகளை மாலை போடச் செய்து திருமணத்தை முடித்துவிட்டனர்.

அவர்களுடைய பாரம்பரியத்தில் இப்படி ஒரு மாற்று உண்டாம்.

அது சரி... காலதாமதம் ஆகியும் மாப்பிள்ளை வந்தாரா...? முறையாகப் பெண்ணை மணந்தாரா...? நமக்குத் தகவல் இல்லை.

## மலையில் மணப்பெண்ணைத் தேடல்!

மொராக்கோவில் இமில்ச்சி என்ற பகுதியைச் சேர்ந்த திருமணமாகாத ஆண்களும் பெண்களும் அருகிலுள்ள 10 ஆயிரம் அடி உயர மலைச்சிகரப் பகுதியில் ஆண்டுதோறும் கூடுகிறார்கள்.

மூன்று நாள் நடைபெறும் இந்தச் சந்திப்பின்போது ஜோடியைத் தேர்ந்து எடுத்துக் கொள்கிறார்கள்.

ஆண்டுதோறும் சுமார் 15 ஆயிரம் திருமணங்கள் இப்படி நடைபெறுகின்றனவாம்.

## விளையாட்டு... விபரீதம்!

ஜெர்மனியில் பேரத் என்ற நகரில் ஒரு கல்லறை இருக்கிறது...

கல்லறைக்கும் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நினைக்கிறீர்களா...? படியுங்கள்...

இந்தக் கல்லறை 1721-ஆம் ஆண்டில் இறந்த மார்கரெட்டா சலெங்க் என்ற 19 வயது இளம் பெண்ணினுடையது தான் அது.

கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம்.... திருமண நாளன்று, ஒரு 'பின்'னைப் பல்லில் கடித்தபடி புதிய கவுனை அணிந்துகொண்டு இருந்தார், மார்கரெட்டா.

எதிர்பாராத விதத்தில் பின்னை அவர் விழுங்கியதால் இறந்துவிட்டார்.

விளையாட்டுத்தனத்தால் தன் திருமண வாழ்வு பரிபோன தோடு, உயிரும் போனது.

## ஏன் இந்த.....

'சிறுவன் ஒருவனுடன் தகாத உறவு வைத்திருக்கிறார்' என்று மைக்கேல் ஜாக்சன் மீது 1993-இல் குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு நடந்தது.

இதைத் தொடர்ந்து 'ஓரினச் சேர்க்கையில் விருப்பம் கொண்டவர்' என்றெல்லாம் பத்திரிகைகள் அவரைப் பற்றிக் கன்னாபின்னாவென்று எழுதின.

பார்த்தார் ஜாக்சன், பத்திரிகைகளின் வாயை அடக்க முடிவு செய்தார். புகழ் பெற்ற 'பாப்' பாடகரான எல்விஸ் பிரிஸ்லியின் மகள் லிசாமேரியைத் திருமணம் செய்து கொண்டார்.

சிறுவன் வழக்கில் சமாதானம் ஏற்பட்டது. நான்கு கோடி டாலரைக் கொட்டி அழுதார்.

வழக்கில் சமரசம் ஏற்பட்ட நிலையில் ஜாக்சனை விட்டுக் கழன்று கொண்டார் லிசாமேரி.

அதுசரி, இந்த திருமணம் ஏன் நடந்தது...?

## ஜோதிடத்தை நம்பி....

**தா**ன் மணந்து கொண்ட மனைவிகளை தானே யாராவது அழிப்பார்களா...? அப்படி ஒரு சம்பவம்தான் இது...!

17-ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தின் வடபகுதியை இரண்டாம் அலி ஆதில்ஷா (1656-1672) என்ற மன்னன் ஆண்டு வந்தான்.

அவனுடைய படைத் தளபதிகளில் ஒருவர் அஃப்சல்கான். பாத்தன் பிரிவைச் சேர்ந்த இந்தத் தளபதி மிகச் சிறந்த வீரன்.

இவன் பேரழகு கொண்ட அறுபது பெண்களை திருமணம் செய்து கொண்டான்.

மராட்டிய மாவீரன் சிவாஜியின் பிரதாப்காட் கோட்டையைக் கைப்பற்றும் பொறுப்பு அஃப்சல்கானிடம் ஒப்படைக்கப்பட்டது.

கோட்டையைப் பிடிக்க நடைபெறும் போரில் இவன் இறந்துவிடுவான் என்று அரசவை சோதிடர்கள் கூறினார்கள்.

இதனால், பிரதாப்காட் கோட்டையை நோக்கி படையெடுத்துச் செல்லும் முன்பாக, தன் அழகு மனைவியர் அறுபது பேரையும் கொன்றுவிட அஃப்சல்கான் முடிவு செய்தான்.

அரண்மனையை ஒட்டியுள்ள ஒரு கிணற்றில் ஒருவர் பின் ஒருவராக அறுபது பேரையும் தள்ளிக் கொன்றான்.

பின்னர், அவர்களது சடலங்களை எடுத்து, தனித் தனியே வரிசையாகப் புதைத்து, சமாதி கட்டினான்.

பீஜப்பூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த இடம் 'சாத் காபார்' என்று அழைக்கப்படுகிறது. கல்லறைகள் நிறைந்த இந்தப் பகுதியில் உள்ளூர் மக்கள் மாமரங்களை நட்டிருக்கிறார்கள்.

மனைவியருக்குச் சமாதி கட்டிய கான், போரில் தானும் இறப்பது உறுதி என்று நம்பினான். அதனால், இறந்த பின் புதைக்கப்படுவதற்காக தனக்கும் ஒரு சமாதியை முன்னரே கட்டி வைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

## வீராங்கனை!

**பி**ருதிவிராஜன் காலம் தொட்டு இன்று வரை ஆண்கள்தான் தாங்கள் விரும்பும் பெண்களை கடத்திக் கொண்டு சென்று திருமணம் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது.

இங்கே அதற்கு மாறாக ஒரு சம்பவம்.... ஒரு பெண் தனக்குப் பிடித்தமானவனை கடத்திக்கொண்டு போயிருக்கிறாள்.

ஆமாம், 23 வயதான இளம் பெண்ணின் பெயர் நர்மதா. இவள் விஜய் என்னும் 28 வயது வாலிபனை காதலிக்கவே... இருவர் வீட்டிலும் எதிர்ப்பு கிளம்பியது.

ஊரை விட்டே ஓடிவிடலாம் என்றால் பயந்தாங் கொள்ளி காதலன் சம்மதிக்கவில்லை. வேறு வழியின்றி... தனது தோழிகள் நான்கு பேரின் துணையுடன், விஜய்யை கடத்திக் கொண்டுபோய் ரூத்சாகர் அணைக்கட்டு கோயிலில் திருமணம் செய்து கொண்டாள்! இவளன்றோ உண்மையான வீரங்கனை. இது நடந்தது திரிபுராவில்.

அது சரி... தாலியை காதலி கட்டினாளா, காதலன் கட்டினானா...? யார் கட்டி இருந்தால் என்ன? கெட்டியான காதலி.... அவர்கள் காதல் வாழட்டும்!

## கில்லாடிப் பெண்...!

வேல்ஸ் நாட்டில் காதரைன்ட் யூடர் (1535-1591) என்று ஒரு பெண்மணி 1566-ஆம் ஆண்டு இவளது கணவன் இறந்து போனான்.

அவன் அடக்கம் நடந்து கொண்டிருக்கும் போதே இரண்டு ஆசாமிகள் அவளைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று முன் வந்து அவள் சம்மதத்தைக் கேட்டனர்.

அந்தப் பெண் கில்லாடியிலும் கில்லாடி. அவர்கள் இருவரையுமே ஒருவர் பின் ஒருவராகத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறியிருக்கிறாள். அதன்படியே

மாரிஸ்வென் என்பவன் அவளைத் திருமணம் செய்து கொண்டு அவளுக்கு இரண்டாவது கணவனாக ஆனான்.

1570-இல் இவன் இறந்து போனான். அவன் மறைவிற்குப் பின்பு, முன்பு வாக்களித்திருந்தபடி இன்னொரு ஆசாமி வெயிட்டிங் லிஸ்டில் இருக்கிறானே ரிச்சர்டு கனல் என்பவன்.... அவனை மூன்றாவது கணவனாய்த் திருமணம் செய்து கொண்டாள்...!

சரி, அவனுடனாவது முழுவதுமாய் வாழ்ந்தாளா என்றால் அதுதான் இல்லை.

அந்த மூன்றாவது கணவனும் மண்டையைப் போட்டு விட்டான்.

1580-இல் அவனையும் அருமையாக அடக்கம் செய்துவிட்டு, எட்வர்டு தெல்வால் என்ற நாலாவது ஆசாமியை ஜாலியாக மணந்துகொண்டு விட்டாள் அந்த அழகுப் பெண்மணி. இது எப்படி இருக்கு....?

## திருமண இயக்கம்....

பீகாரில் இருக்கிறது நவேதா மாவட்டம். இங்கே ஒரு கிராமம். கொய்தாதிகி என்று பெயர். இந்தக் கிராமத்தில் மிக விசித்திரமான பழக்கம் ஒன்று இருக்கிறது.

இங்கே பல பெண்கள் திருமண வயது வந்தும் முறைப்படி திருமணம் செய்து கொள்ள மாப்பிள்ளையின்றி கன்னியாகவே இருந்தனர்.

இவர்களை வாழவைக்க ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்

சுற்றுப்புற வட்டாரங்களில் உள்ள இளைஞர்கள். கல்யாணமாகாதவர்களா, அவர்கள் படிப்பு, வயது என்ன, பண்பு எப்படி போன்றவற்றைத் தெரிந்து கொண்ட பின், அந்த இளைஞர்களைக் குண்டுக்கட்டாக தூக்கிக் கடத்திக் கொண்டு தங்கள் கிராமத்திற்குப் போனார்கள்.

கிராமத்தில் யாராவது ஒரு பொருத்தமான பெண்ணை இந்த இளைஞருக்கு முறைப்படி திருமணம் செய்து வைத்து தங்கள் கிராமத்து மாப்பிள்ளையாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

பிறகு, அங்கேயே ஒரு வாரம் மாப்பிள்ளையை தங்க வைத்து தங்கள் கிராமப் பழக்க வழக்கத்தைத் தெரிந்து கொள்ளச் செய்கிறார்கள்.

அதற்குப் பிறகு, மரியாதையுடன் மாப்பிள்ளை வீட்டில் விட்டு விட்டு, அவரது பெற்றோர், உறவினர் ஆகியோரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறார்கள். முறைப்படி திருமணம் செய்து கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லாததால் இப்படிக் கட்டாயக் கல்யாணம் செய்கிறார்கள்!

இப்படிப் பல திருமணங்கள் நல்லபடியாகவே நடந்து முடிந்திருக்கின்றனவாம்.

## விதவையே இல்லை!

**தெ**ன் சீனாவில், ஒருவனுக்கு ஒருத்தியை திருமணத்திற்கு நிச்சயித்த பிறகு, திருமணத்திற்கு முன் மணமகன் இறந்து விட்டால் திருமணத்தை நிறுத்தாமல் மணமகனின் ஆவிக்கு அவளைத் திருமணம் செய்து வைக்கிறார்கள். எப்படி....?

குறித்த நாளன்று இறந்த மணமகனின் பெயர், பிறந்த தேதி, இறந்த தேதி ஆகியவற்றை ஒரு பலகையில் எழுதி அதன் அருகில் மணப்பெண்ணை அமர வைத்து, அந்தப் பலகையை மணமகனாகப் பாவித்து, முறைப்படி திருமணம் செய்து வைக்கிறார்கள்.

இப்படி திருமணம் செய்து கொண்ட பெண், விதவைக் கோலம் ஏற்காமல் சுமங்கலியாகவே வாழ்வாள். விரும்பினால் வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்வாள்!

## நேரில் பார்க்காமலேயே...

**சா**தி, மதம், இனம் என்ற வேறுபாட்டினால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் இந்தக் காலத்தில், இப்படியும் ஓர் அதிசய நிகழ்ச்சியா என்று வியக்க வைக்கிறது...

மூன் என்ற பாதிரியார், உலகம் முழுவதும் உள்ள பெண்களும், ஆண்களும் ஒருவரை ஒருவர் நேரில் பார்க்காமலேயே, புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்து, மணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்தார்.

இந்தத் திருமணத்திற்காக இந்தியாவிலிருந்து மட்டும் நூறு பேர் சென்றார்கள்.

கொரியாவின் தலைநகரான சியோலில் ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் கும்பலாக நின்று புகைப்படங்களை வைத்துக் கொண்டு மணம் செய்து கொண்டார்கள்.

இவர்கள் தேர்ந்தெடுத்த பெண்கள், வெவ்வேறு நாடுகளில் இருந்தார்கள். இதனால் வெவ்வேறு நாட்டவர்கள், கணவன் மனைவியாக மாறினார்கள்.

இந்தத் திருமணம் சாட்லைட் வழியாக நடைபெற்றது. உலகம் முழுவதும் உள்ளவர்கள் ஒற்றுமையாக வாழவே இந்த ஏற்பாடு என்பது மூன் எனப்படும் பாதிரியாரின் கருத்து.

## மூன்று மாதப் பெண்ணிற்கு....

கின்னஸில் இடம் பிடிக்க வேண்டிய திருமணம் இது. எப்படி, எதனால்...?

பங்களாதேஷில் இரு குடும்பங்களுக்கு இடையே இருபது ஆண்டுகளாக நிலவிய கடும்பகையைத் தீர்க்க, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 11 மாத ஆண் குழந்தைக்கும் இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று மாதப் பெண் குழந்தைக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

உலகிலேயே மிகக் குறைந்த வயதில் திருமணம் செய்து கொண்ட 'ஜோடி' இதுதான்.

## கனவில் வந்த காரிகை!

கனடாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் கனவில் அழகிய பெண்ணொருத்தி வந்தாள். 'திருமணம் செய்து கொண்டால் அவளைத்தான் மணப்பேன்' என்று மனதில் உறுதி எடுத்துக் கொண்டு, தனது பெற்றோர் உறவினர் களிடம் அவளைப் பற்றி விவரித்தார்.

பல பெண்களைப் பார்த்தும் கனவுக் கன்னி சிக்கவில்லை. இறுதியில் அவளைப் பற்றிய அங்க அடையாளங்களை எழுதிக்கொண்டு... அருகிலிருந்த பத்திரிகை அலுவலகத்திற்குச் செல்ல, என்ன ஆச்சரியம்...

அவர் கனவில் கண்டது போன்ற அழகு தேவதை விளம்பரப் பிரிவில் அமர்ந்திருந்தார்.

அப்புறம் என்ன....? முறைப்படி திருமணம் இனிதே நடந்தேறியது.

## போலீஸ் வேனில்...!

அயோத்திப் பிரச்சினையில் பந்த் காரணமாக பல இடங்களில் பல்வேறு இடர்பாடுகள் விளைந்தது. சில இடங்களில் திருமணங்கள் பாதிக்கப்பட்டது.

இதில் திருச்சூர் பாரமேக்காவு கோயிலில் நடைபெற்ற சசி-வசந்தா திருமணமும் ஒன்று.

திருமணம் நடைபெறும் கோயிலுக்குப் போக பஸ், டாக்ஸி ஒன்றும் இல்லாததால் இவர்கள் போலீஸ் உதவியை நாடினர்.

போலீஸார் தங்கள் வேனில் ஏற்றி இவர்களை அந்த ஊரில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

திருமணம் முடிந்த தம்பதிகளுக்கு வீட்டுக்குச் செல்ல ஒரு வழியும் தெரியவில்லை. திருமணம் முடிந்து முதல் பயணம் போலீஸ் வேனில் வேண்டாம் என முடிவு செய்தார்கள்.

கடைசியில் ஒரு ஸ்கூட்டரில் தேன் நிலவு கொண்டாட வீட்டுக்கு புறப்பட்டுச் சென்றார்கள்.

ஸ்கூட்டரை தோழர் ஒருவர் ஓட்ட, மாப்பிள்ளையும் பெண்ணும் பின்னால் அமர்ந்து கொள்ள, மாப்பிள்ளையின் தோழர்கள் சிலர் பைக்கில் பைலட் போல வர, இருவரும் வீடு போய் சேர்ந்தார்கள்.

## ஐ.பி.எஸ்ஸாக....

ஐதராபாத்தில் ஒரு கல்யாணம். ஐ.பி.எஸ்.போலீஸ் அதிகாரி ஒரு டாக்டர் மணமகளைக் கல்யாணம் செய்து கொள்ள விழா மேடை வரை வந்துவிட்டார்.

அப்போது, ஏ.வி.அப்பாராவ் என்ற உயர் போலீஸ் அதிகாரி திருமணத்திற்கு வருகை புரியவே, மணமகன் கைகள் மாலையுடன் கிடுகிடு என்று நடுங்க ஆரம்பித்தன.

அப்பாராவ் நேரே மணமேடைக்கு வந்து மண மகனிடம், ''நீங்க ஐ.பி.எஸ்.அதிகாரியா? எந்த ஊரில் வேலை பார்க்கிறீர்கள்? என்ன அத்தாட்சி...?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்க, மணமகன் நடுங்கியபடி மாலையைப் போட்டுவிட்டு ஓடப் பார்த்தார்.

உண்மையில் ஐ.பி.எஸ். அதிகாரியாய் நடித்த இந்த மணமகன் எஸ்.எஸ்.எல்.சி. மட்டுமே படித்தவர் என்பதும், அசல் கான்ஸ்டபிள் என்பதும் பின்னர் தெரிய வந்தது.

இந்த விசயத்தை இலட்சுமி பார்வதி ராமராவ் மனைவி எப்படியோ அறிந்து, போலீஸ் உயர் அதிகாரியை அனுப்பி தடுத்துவிட்டார்.

மணமகனாக நடத்த கான்ஸ்டபிள் மாப்பிள்ளை 'மாமியார் வீட்டில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்!'

## அந்தோ பாவம்!

பால்டோமோரி என்று ஹங்கேரியில் ஒரு இராணுவத் தளபதி (1475-1520) இவர் இருமுறை திருமணம் செய்து

கொண்டார்... இல்லை திருமணம் செய்து கொள்ள முயன்றார்.

ஒவ்வொரு தடவையும் திருமண நாளன்று மணப்பெண் என்ன காரணத்தாலோ இறந்து போனாள்.

என்ன அதிர்ஷ்ட கட்டையோ...?

## ஆராய்ச்சியாளரை....

புகழ் பெற்ற துப்பறியும் நாவலாசிரியை அகதா கிறிஸ்டி, ஒரு பழம்பொருள் ஆராய்ச்சியாளரை மணந்தார்.

அவரிடம் காரணம் கேட்டபோது, ‘பழம்பொருள் ஆராய்ச்சி யாளர்தான் நல்ல கணவர். மனைவிக்கு வயது ஆகி பழமையாகும் போது, அவர் அவளிடம் மிகவும் அன்பாக இருப்பார்’ என்றாராம்.

## கயிற்றிலே கல்யாணம்!

மைக்கேல் மெனின் என்பவர் கயிற்றில் நடக்கும் வித்தையில் புகழ்பெற்ற நிபுணர் ஆவார்.

தன் மகளுக்கு கயிற்றின் மேல் திருமணம் நடத்த வேண்டும் என்பது அவரின் ஆசை.

தன் எண்ணப்படியே 5 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்ட இரு கயிறுகளில் திருமணம் நடைபெற்றவுடன் தன் மகளும், மாப்பிள்ளையும் கயிற்றில் தொங்கிய படியே, முத்தமிட்டுக் கொண்டதை மெனின் கண்டு ரசித்திருக்கிறார்.

## நெட்டையும் குட்டையும்!

**உ**லகில் எவ்வளவோ விசித்திரமான ஜோடிகள் கணவன் - மனைவி ஆகிவிடுகிறார்கள்....

மிகக் கறுப்பான மாப்பிள்ளைக்கு நல்ல சிவப்பான மனைவி. குட்டை மாப்பிள்ளைக்கு நெட்டை மணமகள் என்று இப்படி ஜோடி இணைவதை எழுதிக்கொண்டே போகலாம்.

இந்தப் பட்டியலில் வினோதமான ஒரு புது ஜோடி சேர்ந்துள்ளனர்.

மாப்பிள்ளையான ரிச்சர்ட் பிளாக்மென் என்பவர் உயரம் 7 அடி 4 அங்குலம். இவர் காதலி சாரா, பிளாக் மெனின் முழங்கை அளவிற்குக்கூட இல்லை. உயரமோ 4 அடி 7 அங்குலம்தான். விரைவில் உலகின் வினோதமான உயர அளவுகள் கொண்ட தம்பதி என்று இவர்களது பெயர் கின்னஸில் இடம் பிடிக்கப் போகிறது.

## ஆண்டில் ஒரே திருமணம்

**ரு**மேனியாவின் ஜிப்ஸீஸ் இன மன்னர் சியோபாவின் மகள் 12 வயது அனாமரியா சியோபாவுக்கும், 15 வயது பிரிட்டா மிஹாய்க்கும் சிபாபு என்ற இடத்தில் தேவாலயத்தில் திருமணம் நடைபெற்றது.

இந்த குழந்தைத் திருமணம் எப்படி அனுமதிக்கப் பட்டது என்று தெரியவில்லை. 2003 ஆம் ஆண்டில் நடந்த ஒரே ஜிப்ஸி திருமணம் இதுதான் என்று சொல்லப்படுகிறது.

## யானைக்கும் கல்யாணம்!

**கா**தலர் தினத்தன்று, திருமணம் செய்து கொள்ள விரும்பும் தம்பதிகள் சாலையின் நடுவே சந்தித்து அன்பைப் பரிமாறிக் கொள்வது திருமண நிகழ்ச்சிகளில் ஒன்றாகவே இப்போது பாங்காக்கில் உள்ளது.

மேலும், தாய்லாந்து ஒரு காதல் நாடு என்றே சொல்லலாம். இங்கே யானைகளுக்கும் கல்யாணம் செய்து வைத்து மகிழ்கின்றனர்.

## மத குருவின் மனைவிகள்!

**க**னடாவில் உள்ள பிளைத்தி என்ற இடத்தைச் சேர்ந்தவர் கிளைன் ஸ்கூட்டி உல்ஃப் என்பவர்.

இவர் சமயச் சடங்குகள் செய்யும் மதகுருவாகப் பணி புரிந்தவர். 1908-ஆம் ஆண்டு பிறந்த இவர், 1927-இல் முதல் முறையாகத் திருமணம் செய்து கொண்டார்.

இதுவரை 27 பெண்களைத் திருமணம் செய்து கொண்டுள்ளார். 1991-இல் 27-வது பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

அந்தப் பெண்ணின் வயது 21. 26 ஆவதாக உள்ள மனைவியின் வயது 38. மொத்த குழந்தைகள் 41.

கடந்த ஆறு ஆண்டுகளில் எத்தனை பெண்களை மணந்தார் என்கிற கணக்கு நமக்குக் கிடைக்கவில்லை.

## நிச்சயித்த திருமணம்!

கர்நாடக மாநிலத்துக் கிராமம் ஒன்றில் ஒரு திருமணம் முறைப்படி பேசி, நாள் குறித்து, மண்டபம் பார்த்து நடைபெறுவதாக இருந்தது.

ஆனால், மாப்பிள்ளை வீட்டார் கேட்ட சீர், பணம் போன்றவற்றைக் கொடுக்க மணமகள் வீட்டில் வசதிக் குறைவு ஏற்படவே, திருமணமே நின்றுபோய்விட்டது.

இதனால், மணப்பெண் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்துவிட்டாள். ஆனால், கடைசி நேரத்தில் காவல் துறைக்கு தகவல் கிடைத்து, அவர்களே மணமகளையும், மணமகனையும் காவல் நிலையத்திற்கே வரவழைத்து, அங்கேயே ஜாம் ஜாம் என்று மேளம் கொட்டிக் கல்யாணத்தை நடத்திவிட்டார்கள்.

வரதட்சணை போன்ற பிரச்சினையை அதன் ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்த சம்பவம் இது!

## குழந்தைகளோடு திருமணம்!

மாக்ஸ் என்பவரும் ஜீன் சார்லஸ்வொர்த்தும் திருமணம் செய்து கொண்டார்கள். இதில் என்ன அதிசயம் என்கிறீர்களா...? என்று கேட்க நினைப்பவர்கள் தொடர்ந்து படியுங்கள்.

இந்த நாள், அவர்களின் 50-ஆவது ஆண்டுத் திருமண நாளுமாகும்.

திருமணம் நடந்த அன்றே இந்தச் சிறப்பு வேறு யாருக்கும் இதுவரை கிடைத்தது இல்லை.

அதாவது, இவர்களின் திருமணத்தை இவர்களின் இரண்டு மகன்கள், மகள் ஆகியோருடன் ஏழு பேரக் குழந்தைகள் வேறு கண்டுகளித்தார்கள்.

மணமகனின் வயது 73. மணமகளின் வயது 71. ஷெப்டன் மாலட் என்னுமிடத்தில் இந்தத் திருமணம் சிறப்பாக நடந்தது.

இதற்கு முன்பு 1945, நவம்பர் 17-ஆம் தேதி இந்தத் தம்பதி திருமணம் செய்து கொண்டவர்கள். கருத்து வேறுபாடு காரணமாக 39 ஆண்டுகளுக்கு முன்பு விவாகரத்துப் பெற்றுவிட்டனர்.

1992-ஆம் ஆண்டு எதிர்பாராத வகையில் தன் முன்னாள் மனைவியை ஒரு நண்பனின் இறுதிச் சடங்கில் கண்டார். மீண்டும் காதல் அரும்பியது. அப்போது அந்த இளைஞரின் வயது 70.

முன்னால் மனைவியின் உதவியுடன் தன் குழந்தை களையும் பேரக் குழந்தைகளையும் கொஞ்சி மகிழ்ந்தார்.

மூன்று ஆண்டுகள் காதல் தொடர்ந்தது. ‘முன் எப்போதையும் விட, என் மனைவியை அதிகம் காதலிக்கிறேன்' என்கிறார். இந்த முன்னாள் போர்ப்படை விமானி.

சிறு வயதிலிருந்தே இருவருக்கும் நன்கு அறிமுகம். இவர் விமானியானபோது, ஜீன் அதே விமான நிலையத்தில் பணி புரிந்தார். இந்நட்பு காதலாக மலர்ந்தது.

1945-இல் முதல் திருமணத்திற்கு இவரது நண்பர்கள் மெட்டீயர் போர் விமானத்தில் பறந்து வந்து வாழ்த்தி மகிழ்ந்தனர்.

அந்த வயதான நண்பர்களே, இந்த மறு திருமணத்திலும் கலந்து கொண்டு தங்கள் மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் மீண்டும் தெரிவித்தார்கள்.

இவர்களின் திருமண வரவேற்பில் இவர்களின் 40, 45 வயதுக் குழந்தைகள் என்ன தெரியுமா சொன்னார்கள்...?

''அம்மாவும் அப்பாவும் பிரிந்து சென்றது ஒரு துயரமான நிகழ்ச்சி. இப்போது பெற்றோர் ஒன்றாக இருப்பதுதான் உலகிலேயே மகிழ்ச்சி நிரம்பிய குடும்பமாக எங்களை மாற்றியுள்ளது'' என்றார்கள்.

அப்பாக்கள் முதியோர் இல்லத்துக்கும், அம்மாவை சகோதரிகள் வீட்டிற்கும் மாற்றி அனுப்பி வரும் மனிதர்கள் நிறைந்த இந்த உலகில், இப்படியும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

## காஸ்ட்லி திருமணம்!

**ஒ**ரு திருமணத்திற்கு எவ்வளவு செலவாகும்? அது அவரவர் தகுதிக்கு ஏற்ப. சிலர் சில ஆயிரங்களிலேயே முடித்துக் கொள்வார்கள். சிலருக்கு சில இலட்சம் ஆகும். இன்னும் சிலருக்கு கோடியில் போய் நிற்கும்.

ஆனால், ஒருவர் தனது பிள்ளைகளின் திருமணத்திற்காக 70 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார் என்றால் வியப்பாக இல்லை.

மும்பை திரைப்படத் துறையைச் சேர்ந்த பரத்ஷாவின் தம்பி விஜய் ஷாதான் இவ்வாறு காஸ்ட்லி திருமணத்தை நடத்தியுள்ளார்.

பெல்ஜியம் நாட்டில் ராஜஸ்தான் அரண்மனைபோல் செட் அமைத்து அதில் அவரது மகன் விஷால் ஷாவிற்கும், ஸ்ரீயா என்ற பெண்ணுக்கும், கூடவே புதல்வி பிரியாஷா - விஷால் மேத்தாவிற்கும் திருமணம் விமரிசையாக நடந்தது.

ஏழாயிரம் பேர் பங்கேற்ற விருந்தில் சிறப்பு உணவு சைவ உணவுதானாம். கூடவே சைனீஷ், இத்தாலியன் உணவுகளும் பரிமாறப்பட்டுள்ளது.

என்னதான் வசதி என்றாலும் 70 கோடி ரூபாயில் திருமணமா என்று வியக்காமல் இருக்க முடியவில்லை. இந்தத் திருமணம் 2002-இல் நடந்தது.

## என்ன வழக்கமோ...?

பண்டைய எகிப்திய மன்னர் பரம்பரையில் ஒரு விநோத - விபரீத வழக்கம் இருந்திருக்கிறது.

ஒரு அரசனுக்கு பெண், ஆண் குழந்தைகள் பிறந்தால் அந்த இருவருக்குமே மணம் முடித்து வைத்துவிடுவார்கள்.

இப்படி அண்ணன் தங்கை திருமணத்தில் பிறந்தவள் தான் பிரபல எகிப்தியப் பேரழகி கிளியோபாத்ரா.

இவள் பரம்பரையில் அவளுக்கு முன்னால் நான்கு தலைமுறைகளிலும் இப்படி அண்ணன் தங்கை திருமணம்தான் நடந்திருக்கிறது.

இன்னொரு எகிப்திய அரச பரம்பரையில் பதின்மூன்று தலைமுறைகளாய் நடைபெற்றதாம்.

அந்த காலத்து எகிப்தியர்களுக்கு இதில் தவறு ஏதும் இருந்ததாகவே தெரியவில்லை.

கிளியோபாத்ரா இப்படி தனது சகோதரர்களையே திருமணம் செய்து கொண்டவள்தான்.

முதலில் சகோதரன் 14 ஆம் டாலமியையும், பின்னர் இன்னொரு சகோதரன் 15 ஆம் டாலமியையும் மணந்து கொண்டாள். இந்த இருவரையும் மணந்து கொண்ட பின்னர் இவளே அவர்களைக் கொன்றுவிட்டதாகவும் சொல்லப் படுகிறது.

14-ஆம் டாலமியைத் தண்ணீரில் மூழ்க அடித்தும், 15-ஆம் டாலமியை விஷமிட்டும் கொன்றாளாம்.

இவள் பேரழகியா, பிசாசா...?

## என் முதல் மனைவி செல்விதான்...!

**ஊ**ர் என்ன சொல்லும், உறவு என்ன சொல்லும் நண்பர்கள் என்ன சொல்வார்கள் என்பதைப் பற்றி எல்லாம் எனக்கு கவலை இல்லை.

நான் செல்வியை மணக்கத்தான் போகிறேன். அதைத்தான் என் தாயும் விரும்புகிறார்'' என்று ஒரு முடிவோடு பேசினார் இளைஞர் செல்வகுமார்.

திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை தாயும், மகனும் செய்யத் தொடங்கினார்கள்.

தாய் மீனாவை அழைத்துக் கொண்டு மானாமதுரைக்கு போனார், செல்வகுமார்.

செல்விக்கு, பட்டுச்சேலை எடுத்தார்கள். ரவிக்கை எடுக்க வில்லை... செல்வகுமாருக்கு பட்டு வேட்டி, சட்டை எடுத்தார்கள். ஒரு கிராமில் திருமாங்கல்யம் வாங்கினார்கள்.

பத்திரிகை அடிக்கவில்லை. வெற்றிலை பாக்கு வைத்து சொந்த பந்தங்களுக்குச் சொன்னார்கள்.

சிலர் முகம் சுழித்தார்கள். சிலர் 'கர்மம்' என்று தலையில் அடித்துக் கொண்டார்கள். சிலர் 'நம்ம ஜாதியில் இப்படி ஒரு கிறுக்கனா?' என்று ஜாதியோடு கலந்து கலங்கினார்கள்.

தாங்கள் நிச்சயித்த தேதியில் நேரத்தில் வீடு களை கட்டியது. செல்வியை சோப்பு போட்டுக் குளிப்பாட்டினார்கள். பவுடர் போட்டார்கள்.

மணமகளை அழகுபடுத்தி அழைத்து வந்தார்கள். கூடவே, பங்காளி முப்பது பேர்களோடு, எல்லோரும் கணபதி கோயிலுக்கு ஊர்வலமாக சென்றார்கள்.

விளக்குளம் கிராமத்து மக்களே கூடி நின்று அதிசயமாக வேடிக்கைப் பார்த்தார்கள்.

வெற்றிலை, பாக்கு, தேங்காய், பூ, பழம், கூரைச்சேலை, தாலி வைத்து பூசாரி முனீஸ்வரனிடம் கொடுத்த செல்வகுமார், ''சாமிக்கிட்ட வச்சு எடுத்துத்தாங்க...'' என்றார்.

''என் தலையெழுத்து உலகத்துல இதுவரை நடக்காத வெட்கங்கெட்ட, விவஸ்தைக் கெட்ட கூத்தா இருக்கே....'' முனகிக் கொண்டே மாங்கல்யத் தட்டை சாமிக்கு முன்பு வைத்துக் கொண்டு வந்து கொடுத்தார் பூசாரி.

பட்டுச் சேலையை மணமகள் செல்விக்கு அணிவிக்கப்பட்டது. கழுத்தில் மாலையைப் போட்டார், தாலியும் கட்டினார் மாப்பிள்ளை செல்வகுமார்.

மேளதாளம் இல்லாததால் கூடியிருந்த கூட்டம் கைதட்டி ஆரவாரத்தோடு மகிழ்ந்தது.

என்ன நடக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியாத மணமகள் செல்வி, சுற்றும் முற்றும் வெறித்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீதான் என் முதல் பெண்டாட்டி'' என்று மிகுந்த மகிழ்ச்சியோடு தன் மனைவியை முத்தமிட்டார், செல்வகுமார்.

வீட்டுக்கு வந்தது திருமண ஊர்வலம்!

கொழுந்தனுக்கும் கொழுந்தனின் தாலியை கழுத்தில் தொங்க விட்டிருந்த செல்விக்கும் ஆரத்தி எடுத்தார், செல்வகுமாரின் அண்ணன் மனைவி முருகஜோதி.

இரண்டு பந்தி விருந்து நடந்தது. செல்வகுமாருக்கு பக்கத்து இலையில் செல்வி...

300 ரூபாய் மொய் சேர்ந்தது. செல்வியை அழைத்துச் சென்று வீட்டிற்குள் காட்டினார்கள். அங்குதான் செல்வகுமார் எப்போதும் தூங்குவார்.

உன் பக்கத்திலேயே செல்வியை ராத்திரிக்கு படுக்க வைச்சுக்கடா, செல்வகுமார்.

மானாமதுரைக்கு அருகில் உள்ள விளாக்குளம் கிராமத்தில் நடந்த இந்த விநோதத் திருமணம் மானாமதுரை ஏரியாவையே வியப்பில் ஆழ்த்திவிட்டது!

செல்வகுமாரையும், அவர் தாலிகட்டிய மனைவி, 'செல்வி' என்ற நன்றி மறவா ஜீவனான நாயையும் பார்க்க அக்கம் பக்கத்து கிராம மக்கள் கூட்டம் கூட்டமாக திரண்டு வந்தார்கள்.

கூட்டத்தில் வந்த ஒரு இளசு பேசியது, ''ஆளப்பாத்தா நல்லாதான் இருக்காரு. மென்டலும் கோளாறு இல்ல. நல்லாவும் பேசுறாரு. பின்னே ஏன் இந்த நாயைக் கல்யாணம் பண்ணி கிட்டாரு...?''

உள்ளூர் பெரிசு ஒண்ணு அந்த இளசுக்கு பதில் சொன்னுச்சு. ''தம்பி, சில ஊர்கல்ல மழை வேண்டி நாய்க்கு, கழுதைக்கு, மாட்டுக்கு, ஆட்டுக்கெல்லாம் கல்யாணம் பண்ணி வைக்கிறத நானும் கேள்விப்பட்டு இருக்கேன்.

ஆனா, இந்தத் தம்பி மழைக்காக நாய்க்கு தாலி கட்டுல.... அது ஒரு பெரிய கதை....

வெளியூர் கூட்டம் பெரிசை சூழ்ந்து கொண்டது....

''ஐயா பெரியவங்களே! அதைக் சொல்லுங்களேன்... என்று ஆர்வமாய் கேட்க'' பெரிசு சொல்லுச்சு....

''18 வயது வரைக்கும் உங்களைப் போலத்தான் நல்லா ஆரோக்கியமா இருந்தான். 18 வயசுல அவனுக்குத் தெரியாமலேயே ஒரு பாவத்தை செய்திட்டான்...

அதுனால, 19 வயசில இருந்து வியாதி வர ஆரம்பிச்சுது. காது கேக்கலை. கை, கால் வலி நடக்க முடியாத சூழ்நிலை. அவன் போகாத கோயில், குளம் இல்லை. பல வருஷம் கஷ்டப்பட்டான். இப்பதான் இவனுக்குரிய கஷ்டத்துக்கான காரணத்தை ஒரு ஜோசியர் சொல்லியிருக்கிறாரு...

ஆவலாய் கேட்டுக் கொண்டிருந்த மக்களில் ஒருவர், ''ஐயா, ஜோசியர் என்ன சொன்னாருங்க...? கேட்டார்.

ஒரு நாள் காலையிலே தூங்கி வெளிய வந்த இவன் கண்ணுல இணை சேர்ந்து இருந்ததைப் பாத்து இருக்கான். உடனே கோபப்பட்டு அரிவாளை எடுத்து வந்து ஒரே

வெட்டுல பொம்பள நாயை வெட்டிப் போட்டுட்டான்... தலை துண்டாயி அதே இடத்துல அது செத்துப் போயிருக்கு.

அந்தப் பாவம்தான் இவனையும் இவன் குடும்பத்தையும் இந்தப்பாடு படுத்துதுன்னு ஜோசியர் சொல்லிட்டு-

நீ இந்தப் பாவத்துல இருந்து விடுபட்டு நல்லபடியா வாழனுமுன்னா, ஒரு நாய்க்குத் தாலி கட்டணும். அதுதான் பரிகாரமுன்னு சொல்லியிருக்காரு.

கூடவே, அந்த நாயையும் உன் வாழ்நாள் முழுசும் வச்சி காப்பாத்தனுமுன்னு சொல்லி இருக்காரு.

அதான் இந்தப் பையன் இப்படி ஒரு நாய்க்கு தாலி கட்டி முதல் மனைவியா ஆக்கியிருக்கான்.

'ஓ...! அப்படியா என்பதுபோல் வெளியூரில் இருந்து பார்க்க வந்த மக்கள் வாய் பிளந்து நின்றிருக்கிறார்கள்.

கல்யாண மாப்பிள்ளை சொல்கிறார் ''ஊருல சிரிக்கிறவங்க சிரிச்சுட்டுப் போவட்டும். இன்னையிலே யிருந்து இந்த செல்விதான் என் முதல் மனைவி.

இனிமே எனக்கு யாரும் பெண் கொடுப்பார்களா... கொடுக்க மாட்டார்களா என்பதைப் பற்றி எல்லாம் நான் சிந்திக்கப் போவது இல்லை.

அப்படி திருமணம் நடந்தாலும் என் படுக்கை அறையில் என் இரண்டாவது மனைவியோடு முதல் மனைவியாகிய இந்த செல்வியும் இருப்பாள்!

இனி யாரும் என் மனைவி செல்வியை உச்சுக் கொட்டிக் கூப்பிடக்கூடாது. செல்வி என்றே கூப்பிட வேண்டும்'' என்று ஆணையே பிறப்பித்திருக்கிறார், இந்த மணமகன்!

செல்வியோடு நன்றியுடன் இருந்தால் சரி என்கிறீர்களா...?

## குரங்குகளுக்கு...

ஜப்பானில் நடந்த திருமணம் இது.

அங்கே முதன்முறையாக இரண்டு குரங்குகளுக்கு திருமணம் நடந்திருக்கிறது. மதகுருவின் முன்னிலையில், சம்பரதாய முறைப்படி நடந்திருக்கிறது.

மாப்பிள்ளை பேர் ஜீரோ. வயது 25. பெண்ணின் பேர், கனாமே சான் வயது 5.

இடோங்கற இடத்தில் உள்ள குரங்குகள் பூங்காவில் தான் இந்த அதிசய திருமணம் கோலாகலமாக நடந்தது.

மாப்பிள்ளைக்கும், பெண்ணிற்கும் விலை உயர்ந்த திருமண ஆடைகள் வெள்ளை நிறத்தில் அணிந்திருந்து அசத்தினார்களாம்.

தாலி கட்டினார்களா, மாலைமாற்றிக் கொண்டார்களா, மோதிரம் அணிந்து கொண்டார்களா? என்ற விபரம் நமக்குத் தெரியவில்லை!

## பேகரால் பேஜரானது...!

**நை**ட்ஸ் பிரிட்ஜில் என்ற ஊர். மேற்கு இலண்டனில் உள்ளது. இங்கே வசிக்கும் 37 வயது லெபனான்காரருக்குத் தவறான பேஜர் எண் தொடர்பால் திருமணமே நடந்து விட்டது.

ஈஸ்ட் யார்க் ஷைரில் உள்ள ஹல் பகுதியில் ஷாரோன் என்ற 24 வயது பெண் வசிக்கிறாள். இவளது தந்தையின் பேஜரில் இவனது சகோதரர் தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால், வேறு எண்தான் கிடைத்தது. எனவே, அந்தச் செய்தியை எடுத்த ஜாசன் ஷாரோனுக்குத் தெரிவித்தார். இது அடிக்கடி தொடர்ந்த ஹீரோ போல இரவு முழுவதும் போன் பேசிய இவர். 320 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தொலைபேசிக் காதலியையும் நேரில் சென்று சந்தித்தார்.

'நான் அவரைப் பார்த்ததுமே, இவர்தான் நான் அறிய வேண்டிய அவர்' என்று மனம் சொன்னது.

இப்போது இருவரும் தம்பதிகள். பேஜர். தொலைபேசி வழிக்காதல் அறுபது நாட்களில் திருமணத்திலேயே முடிந்ததும் ஆச்சரியம்தான்!

## கின்னஸ் லேடி!

**க**லிபோர்னியாவில் 'கிலின்ஸ் கூட்டி ஊல்ப்' என்பவர் கின்னஸில் இடம்பிடித்துள்ளார்.

ஓட்டத்திலோ, வானில் பறந்தோ இவர் இந்த கின்னஸில் இடம்பெறவில்லை. திருமணம் செய்துான்...

இவர் 29 தடவை திருமணம் செய்திருக்கிறார். வயது 88. இந்த வயதில்தான் இவர் 29ஆவது மனைவியை மணந்திருக்கிறார்.

அந்தப் பெண்ணின் பெயர், லிண்டா எல்செக்ஸ் ஊல்ப் என்பதாகும். இந்த அம்மாவும்... அம்மாதான். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடிச்சிருக்காங்க. எதற்காக...?

இவர் ஏற்கெனவே 23 கணவர்களை விவாகரத்துப் பண்ணினவராம்.

கிலின்ஸ், திருமணம் ஆன 19 நாளிலேயே ஒரு மனைவியை விவாகரத்துப் பண்ணினாராம்.

இந்த அம்மாவோ (லிண்டா) ஏற்கெனவே 36 மணி நேரத்தில் ஒரு கணவரை விவாகரத்து செய்தவராம்.

இப்போது புரிகிறதா இவர்களின் கின்னஸ் சாதனைக்கான காரணம்?

## 93-ம் 24-ம்

**மா**ப்பிள்ளையின் வயது 24 தான். இது திருமணத்தறிகு ஏற்ற வயதுதான்.

மணப்பெண்ணின் வயதுதான் சற்று... சற்று... கூடியிருக்கிறது. இந்தப் பெண் இல்லை அம்மா இல்லை பாட்டியின் வயது 93தான்!

இத்தாலியிலுள்ள ஜெனோவாவில் திருமணம் நடந்ததும் அண்ட்ரியா பிஸ்ஸோனி என்ற மணமகன் தன் 93 வயது மனைவி மார்சொட்டா பிகோனியும் சேர்ந்து கேக் கடை ஒன்றைத் திறக்க முடிவு செய்திருப்பதாக அறிவித்தார்.

முன்பு, பிகோனி ஒரு கேக் கடைத் தொழிலாளியாக இருந்தார். இப்போது கேக் கடை முதலாளி! எல்லாம் மனைவி அமைந்த நேரம்தான்!

## திருமணத்தை மறந்த...

**பி**ரபல விஞ்ஞானி லூயிபாஸ்டரை நம்மில் பலருக்குத் தெரியும்.

அவர் ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கிவிட்டால், எல்லாவற்றையும் மறந்துவிடுவார்.

அவருக்குத் திருமணம். மண நாளன்று மணமகள், அவள் குடும்பத்தினர், லூயிபாஸ்டரின் குடும்பத்தினர், திருமணத்தை நடத்தி வைக்க வேண்டிய பாதிரியார் எல்லோரும் திருமணம் நடக்கவிருக்கும் சர்ச்சில் வந்து கூடிவிட்டார்கள்.

ஆனால், மணமகனைக் காணவில்லை. திருமண நேரம் கடந்து கொண்டிருந்தது. ஆனால், மணமகன் வந்த பாடில்லை.

வந்திருந்தவர்கள் காத்திருந்து காத்திருந்து, முடிவில் அவர் எங்கே இருக்கிறார் என்று அறிந்து அழைத்துவர, எல்லா இடங்களுக்கும் ஆட்களை அனுப்பி தேட விட்டார்கள்... தேடினார்கள்... தேடினார்கள்....

இறுதியில் பார்த்தால், பாஸ்டர் தன் ஆராய்ச்சியில் மூழ்கி இருப்பதைப் பார்த்தார்கள். அவருக்கு அவரது திருமண நாள், நேரம் ஆகியவை சுத்தமாய் மறந்து போய்விட்டிருந்ததாம். பிறகு என்ன? ஒருவழியாக பின் திருமணம் முடிந்ததாம்.

## இப்போதாவது நம்மவர்கள்...

18ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் துருக்கி நாட்டை ஆட்சி புரிந்த சுல்தான் மூன்றாம் முஸ்தபாவுக்கு 582 பிள்ளை. பெண் பெற்றுத்தர வேண்டும் என்று 128 பெண்களை அடுத்தடுத்து திருமணம் செய்து கொண்டும் பெண்ணே பிறக்கவில்லை. மனைவிகள் ஆண் பிள்ளை களாகவே பெற்றனர்.

## இவளன்றோ பெண்?

பெல்ஜியம் நாட்டு விநோதப் பெண்மணி எட்ரியான்னி குயாட். இவளுக்கு 652 முறை நிச்சயதார்த்தம் நடந்தது. 53 முறை 53 பேரை திருமணம் செய்து கொண்டு 53 பேரையும் விவாகரத்து செய்திருக்கிறார்.

## வாய்மொழி...

சிலியின் தலைநகர் - சாண்டிகோவில் நடந்த கூத்து இது...

இங்குள்ள திருமணப் பதிவு அலுவலகத்திற்கு ஒரு ஜோடி வந்தது. மணமகன் பெயர் லூயி ஆலிவாரீஸ், மணமகள் பெயர், மரியா தெரீசா.

ஆனால், இவர்கள் இருவரது திருமணத்தையும் பதிவு செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார் அதிகாரி.

என்ன காரணம்...? இருவருமே ஊமைகள். இருவருக்குமே எழுதப் படிக்கவும் தெரியாது.

நூறு ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் சிலி நாட்டுச் சட்டத்தின்படி, மணமக்கள் வாய்மொழி மூலமோ, எழுத்து மூலமோ தங்கள் ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டும். அப்போது தான் திருமணப் பதிவு நடக்கும்.

இந்தச் செய்தி, சிலியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 'மணமக்கள், சம்மதத்திற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினாலே போதும்' என்பதைச் சட்டத்தில் இணைக்க சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயன்று வருகிறார்கள்.

## தூக்குங்க பெண்ணை!

ஓர் ஆண்மகன், தான் விரும்பும் பெண்ணை முதுகில் சுமந்து கொண்டு தன் வீட்டுக்குத் தூக்கி வருதல் வேண்டும். அந்தப் பெண் திருமணத்திற்கு சரி என்றால் இருவருக்கும் சிறப்பாக திருமணம் நடக்கும். இதுதான் அவர்களது பழக்கம்.

முன்பெல்லாம் இந்த சுமக்கும் சுகம் எந்த நாளில் வேண்டுமானாலும், எந்த இடத்தில் வேண்டுமானாலும் நடந்தது. தற்போது குறைந்துவிட்டது.

இருந்தாலும், திருவிழா நாட்களில் மட்டும் குறிப்பிட்ட அளவில் 'இந்த' கடத்தல்கள் நடைபெறுகின்றன.

இந்த ஆதிமனிதர்களின் வழக்கப்படி ஓர் இளைஞன், மணமாகாத எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் காதலிக்கலாம் விரும்பலாம் அவளை முதுகினில் சுமக்கலாம்.

இதை, அப்பெண்ணின் பெற்றோர் முன்னிலை யிலேயே அவளைத் தூக்கலாம். அவர்கள் தடை சொல்லக் கூடாது. ஊர் பெரியவர்கள் அங்கே இருந்தாலும் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாது.

பெண்ணை முதுகில் சுமந்தபடி இளைஞன் தன் வீட்டுக்குச் செல்வான். தூக்கி வந்தப் பெண்ணை இறக்கி விடுவான். பிறகு, அந்தப் பெண்ணிற்கு இனிப்புகள் உள்ளிட்ட பதார்த்தங்களைச் சாப்பிடக் கொடுப்பான். அவள் அதை ஏற்றுக் கொண்டு சாப்பிட்டால், 'அவனை மணக்கச் சம்மதம்' என்று அர்த்தம்.

பெரியவர்கள் எந்தவித மறுப்பும் கூறாது, இருவரையும் இணைத்து வைப்பார்கள்.

ஒருவேளை, அவள் தின்பண்டங்களை தின்னவில்லை என்றால், அவள் திருமணத்திற்கு உடன்படவில்லை என்று பொருள்.

அந்தப் பெண்ணை மணக்க, அவன் கட்டாயப் படுத்தவும் கூடாது. இளைஞனின் பெற்றோர் அல்லது குடும்பத்தில் உள்ள பெரியோர் அந்தப் பெண்ணை அவளது வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். அவளது பெற்றோரிடம் கடத்திச் சென்ற குற்றத்திற்காக மன்னிப்பு கேட்பார்கள். அப்போது பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூடிப்பேசுவார்கள்.

இளைஞனின் வீட்டார் கேட்ட மன்னிப்பு குறித்து அவர் களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று ஆலோசனை செய்வார்கள்...

பெண்ணின் அழகு, அவளது குடும்ப கௌரவம் ஆகியவற்றைப் பொருத்து, தண்டனை வழங்கப்படும்.

பெரும்பாலும் ரொக்கப்பணம், தானியம் அல்லது ஆடுகள் தரவேண்டும் என்றுதான் அபராதம் விதிக்கப்படும்.

இத்தத் தீர்ப்புக்கு இளைஞனின் வீட்டார் மறுப்பேதும் சொல்ல முடியாது. கட்டியே தீர வேண்டும். தவறினால், அவர்கள் குடும்பம் தள்ளி வைக்கப்படும்.

கடத்தப்பட்ட பெண் சம்மதித்துத் திருமணம் நடந்தால், வரதட்சனையும் உண்டு. ஆனால், கட்டாயமில்லை. பெண்ணின் தரப்பிலிருந்து ஆடு, மாடுகள் கொடுப்பார்கள்.

எது எப்படி இருப்பினும், கண்டிப்பாக கையால் நெய்த கம்பளிப் போர்வை ஒன்றிருக்கும்.

## தேன் நிலவு போகலாமா?

திருமணம் ஆனவுடன் இளஞ்சிட்டுக்கள் தேன் நிலவுக்குக் கிளம்பிவிடும் பழக்கம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே துவங்கப்பட்டுவிட்டதாகக் கூறலாம்.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் வட ஐரோப்பா விலிருந்த 'ஜட்லண்ட்' பகுதியிலிருந்து, புதுமணத் தம்பதியர் தென்பகுதிக்குச் சென்று, தேன் கலந்த மதுவகைகளை அருந்தி ஒரு மாதகாலம் மகிழ்ந்திருப்பார்களாம். இதுவே பிற்காகலத்தில் தேன் நிலவு செல்லும் வழக்கத்துக்கு அடிகோலியது.

## கன்னிப்பெண்ணும் கருப்பையாவும்!

சிவகங்கை மாவட்டம் சாளூரைச் சேர்ந்தவர், கருப்பையா. வயது என்பது. இளநீர் வியாபாரி.

இவரது மனைவி இறந்துவிட்டார். இவருக்கு மூன்று மகன்களும், இரண்டு பெண்களும் உள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் திருமணம் முடிந்து, பேரன், பேத்திகளுடன் வாழ்கிறார்கள்.

தனிமையில் வாழ்ந்த கருப்பையாவுக்கு திருமண ஆசை வந்தது. அதனால், மதுரை மாவட்டம் மேலூர் அருகேயுள்ள கீரையூரைச் சேர்ந்த பாண்டிச்செல்வியை மணந்து கொண்டார்.

திருமணத்தின்போது மனைவியாக வந்த பாண்டிச் செல்விக்கு பதினைந்து பவுன் நகையும் போட்டுள்ளார்.

தந்தையின் செயலைக் கண்ட மகள்கள் வந்து, சண்டை போட்டனர். ஊர் நாட்டாண்மையிடம் புகார் செய்தனர்.

ஊர் பெரியவர்கள், கருப்பையாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி, கணவன், மனைவியைப் பிரித்து வைத்தனர்.

இந்த நிலையில், மேலூர் காவல் நிலையத்தில் கருப்பையா புகார் மனு அளித்தார். அம்மனுவில், பாண்டிச்செல்வியை தான் திருமணம் செய்ததாகவும், தற்போது பிரிந்துவிட்டதாகவும், அதனால் திருமணத்தின் போது தான் மனைவிக்குப் போட்ட பதினைந்து பவுன் நகையைத் திருப்பி வாங்கித் தருமாறும் குறிப்பிட்டிருந்தார்.

அந்த நிலையில், மனைவியாக வந்த பாண்டிச்செல்வி, காவலர்களிடம், நகையை திருப்பித்தர முடியாது. ஆனால், என் கணவருடன் சேர்ந்து வாழ்வதாகக் கூறினார்.

இதைத் தொடர்ந்து, பாண்டிச்செல்விக்கும், கருப்பையா வுக்கும் மேலூர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் முறைப்படி திருமணம் செய்து வைத்தனர்.

இப்போது, இளம் மனைவியோடும், இளநீரோடும் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்

## 107ஆம் 22ஆம்

மலேசியாவின் தெரங்கானு மாகாணத்தைச் சேர்ந்தவர், உக்குன்டார், வயது 107-தான்.

இவர் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் மலேசியாவில் மட்டுமின்றி, உலகம் முழுதும் பத்திரிகை களில் பெயர் பெற்ற மூதாட்டி இவர்.

2005ஆம் ஆண்டில் தன்னைவிட 70 வயது குறைந்த முகமது நூர்சே மூசா என்பவரை 22-வதாக திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்குள் காதல் மலர்ந்ததே ஒரு பெரிய கதை. உக்குன்டாரின் வீட்டில் வாடகை விருந்தாளியாக தங்க வந்தார், மூசா. நாளடைவில் இவர்களுக்குள் காதல் அரும்பி, மலர்ந்து, இருவரும் மனம் ஒன்றி திருமணம் செய்து கொண்டனர்.

இப்போது (2009) 37 வயதாகும் மூசா, போதைக்கு அடிமையாகி, தலைநகர் கோலாலம்பூரிலுள்ள மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அங்கு வேறொரு பெண்ணுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளதாக உக்குண்டார் தெரிந்து கொண்டார்.

இதனால் அந்த இளம் பெண்ணுடன் மூசா ஓடிவிடுவார் என்று அவர் எதிர்பார்க்கிறாராம். இந்த வயதான காலத்தில் தன்னால் தனிமையில் இருக்க முடியாது என்பதால், 23வதாக திருமணம் செய்து கொள்ளப் போவதாக தெரிவித்துள்ளார், உக்குண்டார்.

இதுகுறித்து அவர் கூறுகிறார்... ''நான் ஆண்களை வசீகரிக்கும் கட்டழகோ அல்லது இளம் பெண்ணோ கிடையாது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால், இந்த வயதான காலத்தில் தனிமை என்னை வாட்டுகிறது. அதனால்தான், 23வது முறையாக திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். விரைவில் மாப்பிள்ளையும் தேடிவிடுவேன்...'' என்கிறார்.

## கழுதைக்குக் கட்டு...

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால், ஊர் மக்கள் சிறப்பு வழிபாட்டில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

பல இடங்களில் அரசுக்கும் வேம்புக்கும் திருமணம் நடத்தினர். படப்பள்ளி கிராமத்தில் தவளைகளுக்கு நடத்தி வைத்த திருமணம் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஊத்தங்கரை அடுத்துள்ள வெள்ளைக்குட்டை கிராம மக்கள் ஒன்றுபட்டு மழை பெய்ய வேண்டி சிறப்பு பிரார்த்தனை நடத்த முடிவு செய்தனர்.

இதன்படி, தீர்த்தகிரி வலசையில் உள்ள ஏரி பகுதியில் ஊர் மக்கள் கூடினர். அங்கு ஆண்-பெண் கழுதைகளை அழைத்து வந்து, அவைகளை அலங்கரித்தனர்.

கிராம முறைப்படி திருமண சடங்குகளை செய்தனர். பின்னர் அந்த கழுதைகளுக்கு மாலை அணிவித்து திருமணம் நடத்தி வைத்தனர்.

இத்திருமண விழாவில் ஊராட்சிமன்றத் தலைவரும், ஊர் நாட்டாண்மையும் கலந்து கொண்டதோடு, சுற்றுவட்டார கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

இத்திருமண விழாவில் ஆயிரம் பேருக்கு மேல் கலந்து கொண்டதோடு, சகல சீர்வரிசை தட்டுகளுடனும் இந்த திருமணம் நடைபெற்றதாம்.

அதுசரி, இத்திருமணத்தால் மழை பெய்ததா என்றுதானே கேட்கிறீர்கள்...? வருண பகவானைத்தான் கேட்க வேண்டும்!

## நம்பிக்கை...

நம்பிக்கைகள், நாட்டுக்கு நாடு மாறுபடுகிறது. 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்பது நம் நாட்டு நன்மொழி.

இதனால் நம்நாட்டில் நட்சத்திரங்களுக்கு அப்பாற் பட்டு புதன்கிழமை அதிர்ஷ்ட நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், சீன மக்களோ இதற்கு எதிர்மறையானவர்கள். புதன் கிழமையில் திருமணம் செய்து கொள்வது அவர்களது வழக்கத்தில் இல்லை. இதையும் மீறி, ஒரு புதன் கிழமை பல ஆயிரக் கணக்கானவர்கள் ஒரே நாளில் திருமணம் செய்து கொண்டார்கள். காரணம், 09.09.09. என்ற தேதிதான்!

ஆண்டு, மாதம், தேதி ஆகிய அனைத்துமே 9ஆக இருந்ததால் புதன்கிழமையும் அவர்களுக்கு அதிர்ஷ்ட நாளாக மாறிவிட்டது.

இந்த நாளில் திருமணம் செய்து கொண்டால் தங்கள் வாழ்வில் நலமும், வளமும், நீண்ட ஆயுளும் பெருகும் என்ற நம்பிக்கையில், 09.09.09 அன்று ஒரு நாளில் மட்டும் பத்தாயித்துக்கும் மேற்பட்டவர்கள் திருமணம் செய்து கொண்டனர்.

கடந்த ஆண்டில் 08.08.08 தேதியும் அதிர்ஷ்ட நாளாக சீனாவில் கடைபிடிக்கப்பட்டது. அப்போதும் பலர் திருமணம் செய்து கொண்டனர்.

இதே நாளில் மலேசியாவின் தலைநகர் கோலாலம் பூரிலும் 560 ஜோடிகள் திருமணம் செய்து கொண்டனர்.

## அழியாத காதல்....

உண்மையான-உறுதியான காதல் என்றுமே அழியாது. எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், எத்தனை ஆண்டுகள் உருண்டாலும் அது மாறாது, மறையாது என்பதற்கு எடுத்துக்காட்டே, இந்தக் காதலர்கள்...

உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த இருபது வயதான அப்துலுக்கும், அவரது பக்கத்து வீட்டில் வசித்து வந்த 16 வயதான சாந்தினிக்கும் காதல் மலர்ந்தது.

அடுத்தடுத்த வீடுகள் என்பதால், அவர்களது காதல் நீர் கண்ட பயிர் போல நாளும் வளர்ந்தது. காதல் முளைவிட்டது 1975ஆம் ஆண்டு.

இருவரும் வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவர்கள் திருமணம் செய்து கொள்ள இருவரது வீட்டிலும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

இவர்களது காதலைத் துண்டிக்க எண்ணிய சாந்தினியின் பெற்றோர் வீட்டை காலி செய்துவிட்டு வேறு இடத்திற்குச் சென்றனர்.

ஆனாலும், அப்துல்-சாந்தினி சந்திப்பு இரகசியமாகத் தொடரந்தது.

காதலர் இருவரும் பெற்றோர் சம்மதத்தைப் பெற எவ்வளவோ முயன்றும் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை.

வயது கூடிக் கொண்டிருந்த போதிலும், இவர்கள் இருவரும் வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ளாமல் பல ஆண்டுகள் தனியாகவே வாழ்ந்து வந்தனர்.

கால ஓட்டத்தில் இருவரது பெற்றோரும் காலமாகி விட்டனர்.

இந்நிலையில், குடும்பத்திலுள்ள மற்ற பெரியவர்கள் சம்மதித்ததன் பேரில், 54 வயதில் அப்துல் ரஷித்தும், 50 வயதில் சாந்தினியும் 34 ஆண்டுகளுக்குப் பிறகு திருமணம் செய்து கொண்டனர்.

காலையில் திருமணம், மாலையில் விவாகரத்து என்று நடந்து கொண்டிருக்கும் இந்நாளில் இப்படியும் ஒரு காதல் கிளிகள்! வாழ்க, என்று வாழ்த்தத் தோன்றுகிறது அல்லவா?

## பலேயாள்....

**நை**ஜீரியாவின் திகார் மாநிலத்தில் உள்ள பிடா நகரைச் சேர்ந்தவர் முகமது பெல்லோ.

84 வயது கொண்ட இவர், ஒரு மத போதகர்.

இதுவரை 86 பெண்களை திருமணம் செய்துள்ளார்.

அவர்கள் அனைவரும் உயிரோடு இருக்கிறார்கள். அவர்கள் வழியே அவருக்கு 170 பிள்ளைகள் இருக்கிறார்கள். இவரது மத வழக்கப்படி ஒரு ஆண் அதிகபட்சமாக நாலு பெண்களை மணந்து கொள்ளலாம்.

'மத வழக்கத்தை பெல்லோ மீறியுள்ளார். அவர் நாலு மனைவிகளை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற 82 பெண்களை விவாகரத்து செய்ய வேண்டும்.

அல்லது ஊரை விட்டே ஓட வேண்டும் - என்று ஊர் மத தலைவர்களும், மற்றவர்களும் வற்புறுத்தினர். அவரது முடிவைச் சொல்ல கெடுவும் கொடுத்தனர்.

அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் பெல்லோ வழக்கு தொடர்ந்தார். அதில்...

'மத தலைவர்களின் நடவடிக்கை எனது நடவடிக்கை எனது அடிப்படை உரிமையையும் தனி மனித சுதந்திரத்தையும் பாதிப்பதாக உள்ளது...' என்று முறையிட்டார்.

பெல்லோவை ஊரை விட்டு வெளியேற்ற தடை விதித்த நீதிமன்றம், வழக்கை ஒத்திப்போட்டது.

இதற்கிடையில் பெல்லோ தனது 82 மனைவிகளை விவாகரத்து செய்ய சம்மதித்ததாகவும், ஆனால், அவர்களை அவர்களின் வீடுகளில் கொண்டு போய் சேர்க்க அவகாசம் கேட்டதாகவும் தகவல் வெளியானது.

ஆனால், அதை அவருடைய உதவியாளர் மறுத்தார்.

பெல்லோ மேலும் பல பெண்களை திருமணம் செய்ய திட்டமிட்டுள்ளார் என்ற திடுக்கிடும் தகவலையும் அவர் வெளியிட்டிருப்பது மேலும் அதிர்ச்சியைத் தருகிறது.

இரண்டு மூன்று மனைவிகளை மணந்து கொண்டவர்கள் படும் அவதிகளைக் கண்டு அதிர்ந்து போய் இருக்கும் நமக்கு... பெல்லோவின் செயல்...? மிகக் கொடுமை என்று எண்ணத் தோன்றுகிறதா...?

## இந்த வயதிலும்...

''இன்னும்... இன்னும்... நிறைய குழந்தை பெற வேண்டும். அதற்காக இளம்... மிக இளம் பெண்ணை மணக்க வேண்டும் என்ற எனது கனவு நனவாகிவிட்டது'' என்று பல் இல்லா வாய் திறந்து மகிழ்ச்சியோடு சிரிக்கிறார், 112 வயதாகும் பழம் கிழம்!

ஆமாம், ஐந்து மனைவிகளுக்கு அடுத்ததாக 17 வயது இளம் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதும் அவர் வெளிப்படுத்திய மகிழ்ச்சியின் பெருக்குதான், மேலே உள்ள வார்த்தைகள்.

வறுமையில் சிக்குண்டு கிடக்கும் சோமாலியா நாட்டின் குரிசில் சேர்ந்தவர்தான், அகமது முகமதுதோர். இவரது வயது 112.

இதற்கு முன்பே ஐந்து மனைவிகள் மூலம் 18 பிள்ளை பெற்றவர். அவர்கள் வழியே பேரன், பேத்தி, கொள்ளுப் பேரன், கொள்ளுப்பேத்தி என நான்கு தலைமுறையை கண்டுவிட்டார்.

ஆனால், திருமண வாழ்க்கையில் மட்டும் இன்னும் ஆசையும், ஆர்வமும் குறைய வில்லை.

இந்த நிலையில்தான் 17 வயது இளம் பெண் சபியாவை திருமணம் செய்துள்ளார்.

இது பள்ளி அவர் சொல்லுவது... ''எனது கனவை கடவுள் நனவாக்கிவிட்டார். சபியாவை நான் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால், எனது காதலைச் சொல்லி சம்மதிக்க வைத்தேன். முழு மனதுடன் என்னை திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டாள்'' என்றார்.

''புது மனைவியின் மூலம் மேலும் பல குழந்தைகள் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். அவள் இளம் பெண் என்பதால் அது சாத்தியம் ஆகும்...'' என்று சொல்லும் தோர், சபியா வளர்ந்து 17 வயதை அடையும் வரை எனது காதலைச் சொல்லக் காத்திருந்தேன்...'' என்றாரே பார்க்கலாம்!

திருமணத்தை சோபியாவின் சக்களத்திகள் ஐந்து பேர். அவர்களது 18 பிள்ளைகள், பேரக்குழந்தைகள் என திருமண மண்டபமே நிறைந்திருந்து திருமணத்தை முன் நின்று நடத்தினார்களாம்.

இந்த 112-17 திருமணம் பற்றி சபியா குடும்பத்தினர் கூறுகையில், கணவருடன் அவள் மகிழ்ச்சியாக இருப்பாள்'' என்று நம்புகிறோம் என்கிறார்கள்.

சோமாலியா நாட்டின் கடந்த நூறாண்டு வரலாற்றில் இதுவரை இல்லாத வித்தியாச திருமணம் இது என்று வரலாற்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## தவளைக்கும்...

பருவமழை காலம் தொடங்கியும், சில மாவட்டங்களில் மழை பெய்யாததால், விவசாயிகள் கவலைக் குளத்தில் மூழ்கினர்.

இந்த நிலை நீடித்தால் குடி நீருக்கும் தவிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்ற நிலையில் விவசாயிகள், கவலை கொண்டனர். இந்த நிலையில் தமிழக விவசாயிகள் அனைவருமே அடங்குவர்.

மழை வேண்டி கோயில்கள் தோறும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. வருண பகவானை குளிர்விக்க பல ஊர்களில் யாகங்களும் நடத்தப்பட்டன. வேறு சில சடங்கு முறைகளும் ஆங்காங்கே நடத்தப்பட்டன.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையை அடுத்துள்ள படப்பள்ளி கிராம மக்கள் மழை வேண்டி, விநோதமான ஒரு நிகழ்வை செய்தனர்.

ஆமாம், திருமணம் செய்து வைத்தனர். யாருக்கு...? என்று கேட்கிறீர்களா...?

தவளைகளுக்குத்தான் நடத்தி வைத்தனர். சம்பந்தம் பேசுவது, மாப்பிள்ளை அழைப்பு, பெண் அழைப்பு, ஊர்வலம் என மனிதர்களுக்கு நடக்கும் எல்லா சடங்குகளும் மேளதாளம் முழங்க நடந்தது.

பின்னர், படப்பள்ளி ஏரியில் சுபமுகூர்த்த நேரத்தில் மந்திரங்கள் ஓத, கெட்டிமேளம் முழங்க தவளைக்கும், தவளைக்கும் திருமணத்தை நடத்தி முடித்தனர்.

இத்திருமணத்தில் ஆயிரம் பேருக்கு மேல் கலந்து கொண்டனர். பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார் என தனித்தனியாக சீர் வரிசைகளை செய்தனர். இதைத் தொடர்ந்து திருமணத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் இனிப்புடன் விருந்து கொடுக்கப்பட்டது.

விருந்து முடிந்ததும் தவளை ஜோடியை ஊர் பெரியவர்கள் அவ்வூர் ஏரியில் விட்டனர்.

## செல்போனோடு... திருமணம்

மத்திய பிரதேசத்தில் முதல்வரின் கன்னிகாதான திட்டம் என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்படுகிறது.

விதிஷா நகரில் நேற்று முன்தினம் ஒரே மேடையில் 354 ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கான மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் மிகப் பெரிய அளவில் நடந்தது. மேளதாளம் முழங்க 354 மணமகள்களும் விதிஷா நகர வீதிகளில் மூன்று கிலோ மீட்டர் தூரத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அவர்களை பொதுமக்கள் மலர் தூவி வரவேற்றனர். பின்னர், ஒரே இடத்தில் எல்லா ஜோடிகளுக்கும் திருமணம் நடந்தது.

புதுமணத் தம்பதிகளுக்கு, அரசு சார்பில் செல்போன்கள், சூட்கேஸ், மற்றும் சீர்வரிசை பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் போபாலில், ஆதரவற்ற இல்லத்தைச் சேர்ந்த ஐந்து பெண்களுக்கு திருமணம் நடக்க உள்ளதாம்.

அந்தப் பெண்கள் தங்கியுள்ள இல்லத்துக்கு சென்ற மாநில சமூக நீதித்துறை அமைச்சர் ரஞ்சனா, மணப் பெண்களின் கைகளில் மருதாணி வைத்து அலங்கரித்தாராம்.

பரவாயில்லையே, பதவியை மறந்து மனித நேயத் தோடு ஆதரவற்றவர்களுக்கும் அன்பு காட்டியிருக்கிறாரே...

## உயரம் முக்கியமல்ல...

கரூர் பழைய பஸ் நிலையம் அருகில் வசிப்பவர், ராஜ்மோகன். வயத 24. ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இரண்டடி உயரமே இவர் இருப்பார்.

இவர் அருகேயுள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்று ஊழியர்களுடன் பேசுவது வழக்கம்.

அப்படி அடிக்கடி சென்று வந்தவர், அங்கே வேலை பார்த்து வந்த நர்சைக் கண்டார், அவர் மீது காதல் கொண்டார்.

அந்த நர்சு, சிவகங்கையைச் சேர்ந்த சூசையின் மகள் அருள் கலைச்செல்வி. வயது 24.

தன்னை விரும்பும் ராஜ்மோகனின் நல்ல குணமும், நன்னடத்தையும் பிடித்து போனதால், அவர் மீது செல்வியும் காதலோடு விரும்பினார்.

ஆறு மாத காலமாக காதலித்து வந்த ஜோடிகள், திருமணம் செய்து கொள்ள விரும்பினார்கள்.

இவர்களது திருமணத்திற்கு அருள் கலைச்செல்வியின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

காதலர்களுக்கு எந்த பெற்றோர்கள் உடனே ஒப்புதல் தந்துள்ளனர்...?

அன்புள்ளங்ஙகள் ஆறு மாதங்கள் பொருத்து இருந்த காதல் கிளிகள், அவர்களின் ஒப்புதலை ஓரங்கட்டிவிட்டு, இருவரும் கரூர் வெண்ணை மலை கோயிலில் மாலை மாற்றி பதிவு திருமணம் செய்து கொண்டனர்.

மகளின் செயல் கண்டு கோபம் கொண்டு, கரூர் மகளிர் காவல் நிலையத்தில் திருமணத்தை ஏற்க முடியாது என புகார் கொடுத்தனர்.

காவலர்கள் காதலர்களை அழைத்து விசாரித்தனர். அப்போது இருவரும் விரும்பியே திருமணம் செய்ததாக தெரிவித்ததால் அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தனர்.

இது குறித்து மணமகன் கூறுகையில்... ''என் உயரத்தை பெரிதுபடுத்தாமல் கலைச்செல்வி என்னை காதலித்து

திருமணம் செய்து கொண்டதை நான் பெருமையாகக் கருதுகிறேன். அவரை என் இறுதி நாள் வரை மகிழ்ச்சியாக வைத்திருப்பேன்...'' என்றார்.

கலைச்செல்வி கூறுகையில்.... ''காதலுக்கு, தூய அன்பிற்கு உருவம் தடை இல்லை. ராஜ்மோகனின் நடவடிக்கைகள் என்னை கவர்ந்ததால்தான் நான் அவரை விரும்பி நேசித்து திருமணம் செய்து கொண்டேன்...'' என்றார்.

காதலுக்கு, உடல் முக்கியமல்ல, உள்ளமே முக்கியம் என்பதை இந்தக் காதலர்கள் உணர்த்திவிட்டார்கள்!

## இப்படியுமா...?

லிசாபிராண்ட் என்பவருக்கு வயது 34. டாமி பார்னெஸுக்கும் 34.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் காதலித்து வருகின்றனர். நான்கு குழந்தைகள் பிறந்த பிறகும் கையில் காசியில்லாததால் திருமணமே செய்து கொள்ளவில்லை.

திருமணத்திற்கு வேண்டிய பணம் திரட்டுவதற்கான வழியை யோசித்தனர். செக்ஸ் படத்தில் நடித்தால் ஏகப்பட்ட பணம் கிடைப்பதாக தகவல் கிடைத்தது.

அதையடுத்து, இதுவரை மூன்று படங்களில் நடித்துள்ளனர். இதன் மூலம் சுமார் ரூபாய் ஒரு இலட்சம் சேர்த்துள்ளனர்.

சில காட்சிகளில் மற்றொருவருடன் இணைந்து மூவராக நடித்துள்ளனர். மடோனாவின் புகழ் பெற்ற 'பாடி

ஆப் எவிடென்ஸ்' திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியைப் போலவும் நடித்துள்ளனர்.

இருந்தும், திருமணத்திற்குத் தேவையான பணம் கிடைக்க வில்லை. இதனால் இவர்கள் மேலும் நான்கு படங்களில் நடித்து வருகின்றனர்.

இவர்களது திருமணம் அடுத்த ஆண்டு (2010) ஜூன் மாதம் மெக்சிகோவில், கடற்கரையில் நடைபெறவுள்ளது.

''திருமண செலவுக்காக மட்டுமே இதுபோன்ற திரைப் படங்களில் நடிக்கிறோம் என்பதை எனது பெற்றோர்களும், நண்பர்களும் உணர்ந்துள்ளனர்'' என லிசா தெரிவித்துள்ளார்.

''எங்களது ஐந்து நிமிட நடிப்பு பிற்காலத்தில் கடந்த காலத்தை திரும்பிப் பார்க்க உதவும். இதன் மூலம் நாங்கள் மேலும் நெருங்குவதற்கு வாய்ப்புக் கிடைத்தது'' என டாமி தெரிவித்துள்ளார்.

என்ன காதலோ, என்ன திருமணமோ என்று உங்களுக்கு எண்ணத் தோன்றுகிறதா...?

மேல் நாட்டில் இதெல்லாம் சகஜமப்பா...!

## ரூ.2.7 இலட்சத்துக்கு ஏலம் போன இளம் பெண்!

**பா**கிஸ்தானில் ஜகோபாபாத் என்ற இடத்தில் ஓர் ஏலம் நடந்தது....

ஏலத்தில் இருபது வயது இளம் பெண் அசிசான் நிறுத்தப் பட்டார். திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தாய் அவர்.

கணவர் பிரிந்ததால், சகோதரர்களுடன் வசித்து வந்தார். அவரது வாழ்க்கை சுமையை சுமக்க விரும்பாத குடும்பத்தினர், அசிசானை பகிரங்க ஏலத்தில் விற்க முடிவு செய்தனர்.

இதற்காக முன்கூட்டியே விளம்பரங்கள் வெளியிடப் பட்டன.

குறிப்பிட்ட நேரத்தில் - குறிப்பிட்ட இடத்தில் ஆயிரக் கணக்கில் மக்கள் குவிந்தனர். ஆடு, மாடு, கோழி ஏலம் என்றாலே குவிகின்ற மக்கள் ஓர் இளம் பெண் ஏலம் என்றால் குவியாமல் இருப்பார்களா...?

ரூ.ஒரு இலட்சத்தில் இருந்து ஏலம் தொடங்கப்பட்டது. முடிவில் ரூ.2.7 இலட்சத்துக்கு ஐம்பது வயது பிலாவால் பூட்டோ என்பவர், அந்தப் பெண்ணை ஏலம் எடுத்தார். அன்றே முன்பணபாக ரூ.2.1 இலட்சத்தை வழங்கினார்.

## பத்துப் பெண்களை மணந்த இன்ஜினியர்

**ஆ**ந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் சுகீர்த். வயது 29. இவர் தனக்கு மணமகள் தேவை என்று கூறி இணைய தளத்தில் பதிவு செய்திருந்தார்...

'நான் கம்யூட்டர் இன்ஜினியர். மாதம் ஏழு இலட்சம் சம்பளம். பெங்களூர் மற்றும் கோவையில் சொத்துகளும் உண்டு.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஊனமற்றோர் யாராக இருந்தாலும் பரவாயில்லை! என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விளம்பரத்தைப் பார்த்து, எம்.கே.பி. நகரைச் சேர்ந்த ரேவதி என்ற பெண்ணின் தந்தை, சுகீர்த்தை வரவழைத்துப் பேசியுள்ளார்.

அப்போது வரதட்சணை முன்பணமாக ரூபாய் ஐம்பதாயிரம் பெற்றுள்ளார். அதன்பின், ரேவதியின் தந்தைக்கு போன் செய்து, ''எனக்கு காக்கா வலிப்பு நோய் இருக்கிறது. மேலும் ஐம்பதாயிரம் கொடுத்தால் அதை குணப்படுத்திவிட்டு உங்க மகளை திருமணம் செய்து கொள்கிறேன்...'' என்று கூறியுள்ளார்.

அதிர்ச்சியடைந்த தந்தை, பயந்துபோய் முன் பணமாகக் கொடுத்த ஐம்பதாயிரத்தை திரும்பத் தரும்படி கேட்டு இருக்கிறார்.

இதைக் கேட்டதும் சுகீர்த் பணத்தைப் பற்றி எதுவும் கூறாத் தலைமறைவானார்.

உடனே பெண்ணின் தந்தை புகார் செய்தார். காவல்துறையின் தனிப்படை ஒன்றை போட்டு தேடுதல் வேட்டையில் இறங்கியபோது, அகப்பட்டுக் கொண்டான், 'மாப்பிள்ளை.'

விசாரணையில் சுகீர்த்தின் சொந்த ஊர் கோவை என்பதும், அங்கே சிறிய அளவில் நகைக் கடை வைத்துள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது. மேலும் இஞ்சினியரிங் முடித்துள்ளார்.

சுகீர்த், பாலு, பாலசுப்பிரமணியம், மணிகண்டன் என்ற பெயர்களில் பதிவு செய்து, சைதாப்பேட்டையைச் சேர்ந்த கலை, பெங்களூரைச் சேர்ந்த ஜோஸ்னா உட்பட பத்து பெண்களை திருமணம் செய்து ஏமாற்றியுள்ளார். தமிழ்,

ஆங்கிலம், மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகள் அத்துப்படியாம். இன்னும், இவனைப் பற்றி செய்திகள் வரலாம்.

## ஐயோ பாவம்...

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று முன்பு சொன்னார்கள். இப்போது ரொக்கத்தில் நிச்சயிக்கப் படுகிறது என்று சொல்கிறார்கள்.

ஆனால், பீகார் மாநிலம் சமஸ்டிப்பூர் மாவட்டத்தில் உள்ள தன்யா கிராமத்தில் திருமணம் நடப்பது என்பது விநோதமாகவே இருக்கிறது. இந்த கிராமத்தில் திருமணம் நடந்தே ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. உண்மை நம்புங்கள்!

அப்படி என்ன இந்த கிராமத்தில் பிரச்சினை? பெண்கள் இங்கே பார்ப்பதற்கு அழகாகவே இருக்கிறார்கள். பின் ஏன் திருமணத்திற்கு தடை ஏற்படுகிறது?

இந்த கிராமத்தில் பெண்களை பார்க்க மாப்பிள்ளைகளோ அவர்களது குடும்பத்தினரோ வருவதற்கு வழியில்லை என்பதுதான் காரணம். கிராமத்திற்குள் வருவதற்கு சாலை வசதியே இல்லை. சமீபத்தில் சுமன் என்கிற பெண்ணுக்கு திருமணம் நிச்சயமானது.

ஆனால், மாப்பிள்ளை வீட்டார் வருவதற்கு சாலை வசதியில்லை. திருமண ஊர்வலம் நடத்த வழியில்லை என்று கூறி திருமணத்தை மாப்பிள்ளை வீட்டார் கறாராக மறுத்துவிட்டனர்.

இப்படி பல திருமணங்கள் நின்று போய்விட்டன.

தங்கள் கிராமத்துக்கு சாலை வசதி செய்து தரும்படி பல ஆண்டுகளாக இந்த கிராமத்தினர் கோரிக்கை விடுத்தும் எந்த அரசும், அதிகாரிகளும் கண்டுகொள்ளவில்லை.

இப்படியே போனால், எதிர்காலத்தில் இந்த கிராமத்தில் சந்ததியே இல்லாமல் போய்விடும் என்று பயந்தனர். அரசை நம்பி பயனில்லை என்ற முடிவுக்கு வந்த கிராமத்துப் பெரியவர்கள், தங்கள் கிரமத்துக்கு தாங்களே சாலை வசதி ஏற்படுத்த முடிவு செய்தனர். அதன்படியே செயல்படவும் முனைந்தனர்.

கிராமத்திலுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் சாலை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

விளைவு, இன்று இந்த கிராமத்துக்குச் செல்ல நல்ல சாலை போடப்பட்டுவிட்டது. இதையறிந்த மாப்பிள்ளை வீட்டார், சுமனை திருமணம் செய்து கொள்ள சம்மதம் தெரிவித்துவிட்டனர். விரைவில் சுமனுக்கு திருமணம் நடக்க உள்ளது.

இதுபற்றி சுமனின் தந்தை போலா யாதவ் கூறுகையில், ‘கிராம மக்களின் ஒத்துழைப்பால் என் மகளுக்கு சிறப்பாக திருமணம் நடக்க உள்ளது. அரசை நம்பி இத்தனை ஆண்டுகள் ஏமாந்துவிட்டோம். இனி கிராமத்துக்கு தேவையான வசதிகளை நாங்களே செய்து கொள்ள முடிவு செய்துள்ளோம்'' என்றார்.

சாலை அமைந்ததால், இவ்வூர் மக்களுக்கு வழி பிறந்தது என்று சொல்லத் தோன்றுகிறது.

## 'கலப்பில்'லாத கல்யாணம்!

**வி**ழிகளை கூச வைக்கும் மின்னொளி விளக்குகளின் வெளிச்சங்கள் இல்லை; எங்கும் பிளாஸ்டிக் குவளைகள் இல்லை; தாம்புல கவரில்லை, விருந்தில் இடம் பெற்ற காய்கறிகளில் இரசாயன வாடையில்லை; கலப்பில்லை இப்படி முற்றிலும் 'இயற்கை'யோடு - அதன் ஆதரவோடு திருமணம் ஒன்று அகமதாபாத்தில் நடந்தது.

ஆமாம், குஜராத்தைச் சேர்ந்தவர்கள் அருஷிஷா, இவருக்கு வயது 22. அதே ஊரைச் சேர்ந்த தீபன்ஷா இவருக்கு வயது 24. இந்த இருவருக்கும் திருமணம் நடந்தது.

மணமகன் பருத்தி வேட்டி அணிந்திருக்க, மணமகள் காதி பட்டுச் சேலையில் இருந்தாள்.

விருந்து நடைபெற்ற இடத்தில் பன்னீர் டிக்கா, ஸ்பிரிங்ரோல் இல்லை. மாறாக, வேக வைத்த கடலை, பழங்கள் இருந்தன.

திருமண சீதனமாக அருஷி கொண்டு வந்தது ஒரு பசுவும்; கன்றும். திருமணத்தில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு அறவே தடை. பரிசுப் பொருட்களிலும் பிளாஸ்டிக்கைத் தவிர்க்க, பத்திரிகையில் வேண்டுகோள் இருந்தது. மாறாக, உபயோகத்தில் இருந்த பொருட்கள் அனைத்தும் செம்பு, வெள்ளி, பித்தளையில் இருந்தன.

மணமகள் குடும்பத்தினர் பணக்காரர்கள் என்ற போதிலும், திருமணம் வீட்டில் எளிமையாக நடந்தது. முதல் நாள் வரவேற்பில் பங்கேற்ற விருந்தினர்களுக்கு முற்றிலும்

ரசாயனக் கலப்பின்றி விளைவிக்கப்பட்ட காய்கறிகளால், தூய நல்லெண்ணையில் தயாரான புலவ் பரிமாறப்பட்டது. இயற்கைக்கு மாறான பொருட்களால் சுற்றுச் சூழல் சீர்கெட்டு பூமி சூடாகும் பிரச்சினையைத் தடுப்பது பற்றி டென்மார்க் நாட்டின் கோபன்ஹெகரில் சர்வதேச மாநாடு நடந்து கொண்டிருக்கிறது.

அதுபோன்ற பெரிய ஏற்பாடுகள் எதுவும் தேவையில்லை. அருஷி, தீபன் போன்ற ஜோடிகள் செய்த முயற்சியே போதும் என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது அல்லவா...?

## கில்லாடி...

**சீ**னாவைச் சேர்ந்தவர் சாங். இவர் 2005இல் ஜிஜியாங் பகுதியைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

பிறகு ‘மெக்சிகோவில்’ வேலைக்குச் சென்றார். அங்கு சீனத் தலைநகர் பெய்ஜிங்கைச் சேர்ந்த பெண்ணை சந்தித்தார். தனக்கு இன்னும் மணமாகவில்லை என்று கூறி, அந்தப் பெண்ணை திருமணம் செய்தார்.

அவரை சீனா அழைத்து வந்து பெய்ஜிங்கில் குடித்தனம் வைத்தார். மெக்சிகோவில் இருந்து சீனா வரும்போதெல்லாம் பெய்ஜிங் ஜிஜியாங் நகருக்குச் சென்று இரண்டு மனைவிகளுடன் தங்குவார்.

ஒரு மனைவியிடம் இருந்து இன்னொருவர் வீட்டுக்குச் செல்லும்போது, வேலை காரணமாக மெக்சிகோ திரும்புவதாக பொய் கூறுவார்.

இப்படியே ரகசியமாக இரண்டு மனைவிகளுடன் சாங் வாழ்ந்து வந்தார். அதற்கு 'பேஸ்புக்' நெட்வொர்க் இணைய தளம் மூலம் சிக்கல் எழுந்தது. தனது குடும்ப விவரங்களை இரண்டு மனைவிகளும் பேஸ்புக்கில் வெளியிட்டனர். அதன் மூலம் நண்பர்களாகினர்.

அதன் பிறகு, தங்கள் திருமண படங்களை பரிமாறிக் கொண்டனர். அப்போதுதான் தெரிந்தது, மாப்பிள்ளை சாங், இருவரையும் வசமாக ஏமாற்றியது தெரிந்தது.

உடனடியாக முதல் மனைவி போலீசில் புகார் தர... இப்போது மாப்பிள்ளை சிறையில் இருக்கிறார்.

## கடத்தல்

ஆவடி சன்னம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் நவாப். இவர் படுக்கை - மெத்தை கடை நடத்தி வந்தார்.

இவரது மகன் பஷீருக்கு வயது பத்தொன்பது. இவர் தனியார் வங்கி ஒன்றில் கலெக்‌ஷன் ஏஜெண்ட். பைனான்ஸ் வாங்கித் தருவது தொடர்பாக பல்லாவரத்தைச் சேர்ந்த 26 வயது கொண்ட உஷாராணி என்பவருடன், பஷீருக்கு பழக்கம் ஏற்பட்டது. வயது தடையில்லை என்ற நிலையில் இருவரும் காதலித்தனர்.

ஒரு காலகட்டத்தில் இருவரும் ஊரை விட்டே ஓடிவிட்டனர்.

இந்த நிலையில், மகளை காணவில்லை என்று உஷா ராணியின் பெற்றோர் பல்லாவரம் போலீஸில் புகார் செய்தனர்.

இதையடுத்து நவாப்பை அழைத்து போலீசார் விசாரித்தனர். அவர், மகனுக்கு போன் செய்து, என்னை போலீஸார் விசாரிக்கின்றனர். உடனே வந்துவிடு'' என்றார்.

அதன்படியே உஷாராணியுடன் பஷீர் போலீஸ் நிலையம் வந்து சேர்ந்தார்.

இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டதாக கூறியதையடுத்து அவர்களை போலீஸார் அனுப்பினர்.

இந்நிலையில், நவாப், என் மகனுக்கு 19 வயதுதான் ஆகிறது. ஆனால், மகனை கடத்தி உஷாராணி திருமணம் செய்துள்ளார். இது சட்ட விரோதமானது. மேலும், என் மகனை மீட்டு, அந்தப் பெண் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஒரு மனுவை கொடுத்தார்.

பிறகு என்ன...? வழக்கம்போல் நடவடிக்கைதான்.

## தவளைக்கு சீர் வரிசையோடு...

**வி**ழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் அருகில் உள்ளது பள்ளிப்புதுப்பட்டு கிராமம்.

பழங்காலத்தில் இக்கிராமத்தில் காலரா நோய் பரவியபோது சிவன் தவளை உருவும் அம்மன் சிறுமி உருவெடுத்து அவர்களுக்கு திருமணம் நடத்தினால் காலரா நோய் குணமடையும் என பெரியவர்கள் கூறியதைத் தொடர்ந்து, தவளைக்கும் சிறுமிக்கும் திருமணம் நடந்தது.

தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பள்ளிப்புதுப்பட்டு கிராமத்தில் தவளைக்கும் சிறுமிக்கும் விநோத திருமணம் நடந்து வருகிறது. இந்த ஆண்டும் நடந்தது.

பள்ளிப்புதுப்பட்டு கிராமத்தில் வசிக்கும் சகோதர உறவினர்கள் கொண்ட குடும்பத்தினர் பெண் வீட்டாராகவும், மாமன் முறை குடும்பத்தினர் மாப்பிள்ளை வீட்டாராகவும் கருதப்பட்டனர்.

மாப்பிள்ளை - தவளை - வீட்டார் சீர்வரிசையுடன் மாலை நான்கு மணிக்கு பெண் பார்க்க ஊர்வலமாக சென்று பெண்ணைப் பார்த்தனர்.

பெண்ணுக்கு நகை, சீர்வரிசை, வரட்சணை குறித்து பேசினர். தவளை - சிறுமி திருமணத்திற்கு பள்ளிப்புதுப் பட்டு கிராமத்தைச் சேர்ந்த ராமு மகளான எட்டு வயது விக்னேஸ்வரி திருமணப் பெண்ணாக பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டார்.

பிறகு, கோயில் குளத்தில் இருந்து ஒரு தவளை பிடிக்கப்பட்டு அதை மாப்பிள்ளையாகக் கருதி மண மேடையில் அமர வைத்தனர்.

பெண் வீட்டார் சிறுமியைத் திருமணக் கோலத்தில் அலங்கரித்து வீதியுலா நடத்தி மணமேடைக்கு அழைத்து வந்தனர்.

பள்ளிப்புதுப்பட்டு கிராம ஆரம்பப் பள்ளி அருகில் அமைக்கப்பட்டு இருந்த மணமேடையில் மணமகன் தவளை, மணமகள் சிறுமி அமர வைத்தனர்.

மந்திரங்கள் ஓத பொதுமக்கள் சூழ இரவு 7.30 மணிக்கு தவளைக்கும், சிறுமிக்கும் திருமணம் நடந்தது.

தவளை சார்பில் கோவில் பூசாரி, சிறுமிக்குத் தாலி கட்டினார். தாலி கட்டிய பிறகு பெண்ணுக்குச் சீர்வரிசை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

தவளைக்கும் பெண்ணுக்கும் இரு வீட்டார் சார்பில் மொய் பணம் மற்றும் நகைகள், வரிசை வைக்கப்பட்டன. திருமணத்தில் வரிசை வைத்த பலர் தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்தினர்.

தொடர்ந்து திருமணத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது. திருமணம் முடிந்து பின் தவளைக்குப் பூஜை செய்து, பிடித்த குளத்தில் விட்டுவிட்டனர்.

## பென்குவினுக்கு...

மணமகனின் பெயர், பிராட். மணமகளின் பெயர், பியூட்டி.

இந்த இளம் ஜோடிகளுக்கு சீனாவில் உள்ள ஒரு நீர் காட்சியில் திருமணம் கோலாகலமாக நடந்தது.

மணமக்கள் யார் தெரியுமா? இரண்டு பெண்குவின்கள் தான்.

அவற்றுக்கு மணமக்கள் போன்று ஆடை அலங்காரம் செய்து வைக்கப்பட்டது.

ஆண் பென்குயின் கழுத்தில் 'டை' கூட கட்டி இருந்தது. பனி சூழ்ந்த அறைக்குள் நடந்த திருமணத்துக்கு இருவரும் திருமண விருந்தாக, அவற்றுக்குப் பிடித்தமான மீன் விருந்து பரிமாறப்பட்டது. பெண்குயின்களின் இனப்பெருக்க காலத்தில் இந்தத் திருமணம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## பக்கெட்டில்...

மலை மீது, கடல் மீது எல்லாம் திருமணம் நடந்து இருப்பதை அறிவோம்... இங்கே சிறிது வித்தியாசமாக இருக்கிறது. ஆமாம்...

டிராக்டரில் மண், கல் போன்றவற்றை வாரி போடுவதற்காக இருந்த பக்கெட்டில் சீனாவில் ஒரு ஜோடி திருமணம் செய்து கொண்டது.

சீனாவில் ஷியான் பகுதியில் ஒரு இன மக்களிடம் திருமணத்தின்போது மணப்பெண்ணின் கால்கள் தரையில் படக்கூடாது என்பது பாரம்பரியத்துக்கு மரியாதை செலுத்தும் வகையில், வீட்டில் இருந்து திருமணம் நடக்கும் இடத்திற்கு மணப்பெண்ணை அழைத்துச் செல்ல திட்டமிட்டனர்.

அப்போதுதான் மணமகன் டிராக்டர் வியாபாரம் செய்து வருவது திருமண அமைப்பாளருக்கு நினைவு வந்தது.

உடனே மணமகளையும் அவள் தோழிகளையும் ஒரு டிராக்டர் பக்கெட்டில் அமர வைத்து, இன்னொரு டிராக்டரில் மணமகனையும் அவர் தோழர்களையும் அமர வைத்து திருமணத்தை நடத்தினார்கள்.

இந்த புதுமையான திருமணம் மணமக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்ததாம்.

## இனம் பெருக...

அந்தமானின் பூர்வக்குடிகளில் ஓங்கே இனமும் ஒன்று. கடந்த 1901ஆம் ஆண்டு இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் 672 பேர் இருந்தனர்.

இந்த ஆண்டு (2009) தொடக்கத்தில் இது 94 ஆக குறைந்து போனது.

இந்த நிலையில், கடலில் மிதந்து வந்த பிளாஸ்டிக் கேனில் இருந்த ரசாயனத்தை சாராயம் என்று நினைத்து குடித்த எட்டு ஓங்கே இனத்தவர் கடந்த ஆண்டு இறுதியில் பலியாகிப் போயினர்.

இதே நிலை மேலும் நீடித்தால் ஓங்கே இனம் விரைவில் அழிந்துவிடும். இதைத் தடுக்க ஓங்கே இனத்தைச் சேர்ந்த விதவைகளுக்கு மறுமணம் செய்வதுதான் ஒரே வழி என்று அவர்கள் மேம்பாட்டுக்காக பாடுபடும் சேவை அமைப்பும், அரசு அதிகாரிகளும் கருத்து தெரிவித்தனர்.

இது குறித்து ஓங்கே இன பெரியவர்களுடன் அதிகாரிகளும், சேவை அமைப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை சம்மதிக்க வைத்தனர்.

அதையடுத்து ஓங்கே இனத்தைச் சேர்ந்த நான்கு இளம் விதவைகளுக்கு அவர்களது பாரம்பரிய முறைப்படி திருமணத்தை நடத்தி வைத்தனர்.

இவர்களில் இரண்டு பேருக்கு ஏற்கெனவே குழந்தைகள் இருக்கின்றனவாம். இதுபோன்ற மறுமணங்கள் நடப்பதன் மூலம் ஓங்கே இனம் அழிவதை தடுத்துவிடலாம் என்று அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## அவர் கையால் வேண்டாம்

**கி**ருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள களர்பதியை சேர்ந்தவர் சக்தி. வயது 26.

இவர் திருவண்ணாமலையில் பேக்கரி கடை ஒன்றில் வேலை பார்த்தார். அப்போது திருவண்ணாமலையைச் சேர்ந்த மூதேவி சாமியார் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது.

சாமியாரின் தீவிர பக்தனாக அவர் மாறினார். களர்பதியில் கோயிலும் கட்டிக் கொடுத்தார். இங்கு, அம்மன் படம் வைத்து பூஜை செய்து வந்த சாமியார், மக்களுக்கு அருள்வாக்கும் கூறினார்.

இந்நிலையில், பேக்கரியில் சக்தி வேலை பார்த்தபோது திருவண்ணாமலையைச் சேர்ந்த 21 வயது பெண் சீதா என்ற பெண்ணை காதலித்து வந்தார்.

அதனால், இவர்கள் திருமணத்துக்கு முறைப்படி ஏற்பாடு செய்யப்பட்டது. களர்பதியில் உள்ள சக்தி வீட்டில் திருமணம் நடத்த முடிவு செய்து பத்திரிகை அடித்து உறவினர்களும் அழைக்கப்பட்டனர்.

திருமணத்தன்று - காலை திருமண ஏற்பாடுகள் எல்லாம் நடந்தன. மணமக்களும் மேடையில் மகிழ்வோடு அமர்ந்திருந்தனர்.

அப்போது, மூதேவி சாமியார் அங்கு வந்து தாலியை எடுத்து ஆசிர்வதித்து சக்தி கையில் கொடுத்தார்.

இதற்கு மணப்பெண் சீதா எதிர்ப்பு தெரிவித்தார். 'கடைசி வரை வாழப்போவது உங்களுடன்தான். இதற்கு சாமியார் எதற்கு தாலி எடுத்துத் தர வேண்டும்?' என சக்தியிடம் கேட்டு உள்ளார்.

ஆனால், சக்தி, 'அவர் தாலி எடுத்துக் கொடுத்தால்தான் கட்டுவேன்' என பிடிவாதமாகக் கூறினார்.

'அப்படி என்றால் எனக்கு இந்தத் திருமணமே வேண்டாம்' என சீதா மறுத்துவிட்டார். இதனால் அங்கு திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

'இதனால் ஆத்திரமடைந்த சாமியார், திருமணமாகி பத்து நாளில் நீ கணவனை பிரிந்துவிடுவாய்' என சீதாவுக்கு சாபமிட்டார்.

அதனால் அதிர்ச்சியடைந்த பெண் வீட்டார் திருமணத்தை நிறுத்தினர். இதற்கிடையே, பெண் வீட்டார் சீர் வரிசையாக வைத்திருந்த ஐந்து பவுன் நகை, ஒரு மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சாமியார் அங்கிருந்து ஓடிவிட்டார்.

இதற்கு மணமகனும் உதவியாக இருந்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து சீதா மத்தூர் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

பிறகென்ன, காவல்துறையில் மணமக்கள்!

## விமான....

மணமகள் பெயர், எலெட்பெரைரா, வயது 27. இவர் போர்ச்சுகளில் சாகார்னியரோ நகர விமான நிலையத்திற்குள் மகிழ்வோடு நுழைந்தார்.

எதற்கு என்கிறீர்களா? அங்குதான் இவருக்குத் திருமணம்!

மாப்பிள்ளை ஜோஸ் சாண்டோஸுவிற்கு வயது 42. இவர் போர்ச்சுக்கலைச் சேர்ந்தவர்.

இவர்கள் இருவருக்கும் காதல் மலர்ந்ததே, டிஏபி நிறுவன விமானத்தில் பயணம் செய்தபோதுதான்.

காதல் மலர்ந்த ஓராண்டிற்கு, பிறகு தாங்கள் முதன் முதலில் சந்தித்த அதே விமானத்தில் இவர்கள் திருமணத்தை நடத்த விரும்பிய அவர்கள், தங்கள் விருப்பப்படி திருமணத்தை நடத்திக் கொண்டனர்.

இருபது நிமிடத்தில் திருமணம் நடந்து முடிந்ததும், காதல் ஜோடியோடு வானில் பறந்தது விமானம்.

## இதயத்தால் இருபதாண்டுகள்

கேரளா மாநிலம் திருச்சூரைச் சேர்ந்தவர் கிருஷ்ணன் குட்டி. பார்வையற்றவர். இவர் திருச்சூரில் உள்ள இராமவர்மா கல்லூரியில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன் படித்தார்.

அப்போது, அவருடன் படித்த தங்கம்மா என்ற பெண்ணுக்கும் கிருஷ்ணன்குட்டிக்கும் காதல் வளர்ந்தது.

அரசு வேலை கிடைத்ததும் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று இருவரும் இதயத்தால் முடிவு செய்தனர்.

பார்வையற்றவர்களுக்கு தனி ஒதுக்கீடு இருப்பதால் படித்து முடித்ததும் அரசு வேலை கிடைத்துவிடும் என்று அவர்கள் நினைத்தனர்.

ஆனால், எதிர்பார்த்தபடி வேலை கிடைக்காததால், லாட்டரிச் சீட்டு, பேனா, சீப்பு விற்பது என்று பல தொழில்களை கிருஷ்ணன் குட்டி செய்தார்.

ஆனால், அதில் குறைந்த அளவு வருமானமே கிடைத்தது. அதை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்த முடியாது என்பதால் திருமணத்தைத் தள்ளிப் போட்டார்.

'எத்தனை ஆண்டுகள் ஆனாலும் கிருஷ்ணன் குட்டியை தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன் என்று அவருக்காக காத்திருந்தார், தங்கம்மா.

இந்நிலையில் கடந்த ஆண்டு ரயிலில் வேர்க்கடலை விற்கத் தொடங்கினார், கிருஷ்ணன்குட்டி. இதில் நல்ல வருமானம் கிடைத்து வந்ததால், திருமணம் செய்ய முடிவு செய்தார்.

எர்ணாகுளம் மாவட்டம் பரவூரில் அரிமா சங்கம் சார்பில் பல ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கப் பட்டது.

அந்த விழாவில் 42 வயதான கிருஷ்ணன்குட்டி தங்கம்மா திருமணமும் நடந்தது.

பார்வை உள்ள பலரும் காதலித்து துரோகம் செய்து விடுகின்றனர். ஆனால், பார்வையே இல்லாதவர்கள் 20 ஆண்டுகளாக காதலித்து திருமணம் செய்து கொண்டதை ஊர் மக்களே வாழ்த்திப் பாராட்டினர்.

## ஆலமரமே அந்தப்புரம்...

ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சிக்கு அருகே உள்ளது டாதிசில்வே கிராம். இந்த கிராமத்தைச் சேர்ந்தவர் மங்கரா மகாலி. கூலி தொழிலாளி. 25 ஆண்டுக்கு முன்பு இவர் தன்னுடைய கிராமத்தைச் சேர்ந்த பால்கியை காதலித்தார்.

காதலித்தவர் ஒரு கட்டத்தில் திருமணம் செய்து கொள்ள விரும்பினார்கள். இதற்கு இரு வீட்டாரும் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

மணந்தால் பால்கியைத்தான் மணப்பேன். இல்லை யென்றால், வாழ்நாள் முழுதும் தனித்தே இருப்பேன்' என்று மங்கராவும், நான் வாழ்ந்ல் மங்கராவோடுதான் வாழ்வேன் இல்லை என்றால், உயிர் பிரிவேன்' என்ற நிலையில் பால்கியும் இருந்தனர்.

ஒரு நாள் மங்கரா, தன் காதலியை அழைத்துக் கொண்டு ஊரை விட்டே வெளியேறினார். அவரை திருமணம் செய்து கொண்டார்.

திருமணம் நடந்துவிட்டது. இரு வீட்டாரின் எதிர்ப்பு எங்கு தங்குவது?

தங்குவதற்கு எங்கும் வீடு கிடைக்கவில்லை. கோயிலில் சென்று தங்கலாம் என்று சென்றவர்களுக்கு அங்கும், ஊர் மக்களுக்கு பயந்து பூசாரி மறுத்துவிட்டார்.

இந்நிலையில் ஏதும் வழி தெரியாத நிலையில் ரயில் நிலையத்திற்குச் சென்ற காதல் ஜோடி, அங்கு நின்றிருந்த ஆலமரத்தடியில் இரவு தங்கினர்.

காலையில் எழுந்த அவர்கள் மீண்டும் எங்கு தங்குவது என்று சிந்தித்தனர்.

ஏன் இந்த மரத்தடியிலேயே தங்கிக் கொண்டால் என்ன...? என்று இருவருமே சிந்தித்தார்கள். அதன்படியே அங்கேயே தங்கத் தொடங்கினார்கள். தாழ்வாக இருந்த அந்த மரத்தின் கிளைகளின் மீது பாலிதீன் கவர்களைப் போட்டு கூடாரம் போல் ஆக்கிக் கொண்டனர்.

அன்றிலிருந்து அவர்களுடைய இல்லம் அதுவே. பல் துலக்கும் வகையிலான ஆலமரக் குச்சிகளை இரயில்

நிலையத்துக்குச் சென்று விற்பனை செய்வதை பிழைப்பாக்கிக் கொண்டனர்.

இந்த ஆலமரத்து வீட்டில் வாழ்ந்தபடியே இரண்டு மகன்களையும் பெற்றெடுத்தனர். மூத்த மகனுக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்துவிட்டது. சமீபத்தில் அவர் புது வீடு கட்டி குடியேறிவிட்டார்.

தனது பெற்றோர்களை அங்கு வந்து தங்குமாறு கூறியுள்ளார். ஆனால், எக்காரணத்தைக் கொண்டும் இந்த வீட்டை விட்டு - ஆலமரத்தை விட்டு வரமாட்டோம் என்று இருவரும் மறுத்துவிட்டனர்....

''எங்களது இந்த 25 ஆண்டு கால வாழ்க்கையில், எல்லா சுக துக்கங்களும் இந்த மரத்தின் கீழ்தான் நடந்துள்ளது. இனிமேலும், அது அங்கேயே நடக்கட்டும்'' என்று கூறிவிட்டனர்.

இப்போது அந்த காதல் கிளிகளுக்கு ஐம்பது வயதுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும், தங்களது வசந்த கால நினைகளுடன் அதே மரத்தடியில் இளைய மகனுடன் ஆலமரத்தடியிலேயே வாழ்கின்றனர்.

ooo

# திருமணத் தேன்மொழிகள்

- திருமணம் என்பது உடற்சேர்க்கை மட்டுமல்ல; அது உணர்ச்சிகளின் சேர்க்கை, சிந்தனைகளின் சேர்க்கை. வாழ்க்கை வளங்களின் சேர்க்கைகளாகும்.

  ***- காண்டேகர்***

- திருமணம் என்பது தும்மல் போன்றது; அது எப்போது நிகழும் என்று சொல்ல முடியாத விசயம்.

  ***- ரஷ்யப் பழமொழி***

- திருமணத்திற்குப் பற்கள் உண்டு; அகப்பட்டவர்களைக் கடித்துவிடும்.

  ***- ஜமாகீகர்***

- திருமணம், ஜலதோஷம் ஆகிய இரண்டும் மனித குலத்தின் நிரந்தரமான பிரச்சினைகள். இதற்கு இதுவரை வழி ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

  ***- சிங்லேர் லூயி***

- நீ திருமணம் செய்து கொள்ளப் போகிறாயா? இல்லையா? எது செய்தாலும் பின்னால் நிச்சயம் கஷ்டப்படப் போகிறாய்.

  ***- சாக்ரடீஸ்***

- திருமணம் என்பது ஆயுள் தண்டனை, ஒருவர் உள்ளத்தை மற்றவர் திருடியதால் பெற்ற பரிசு.

  ***- ஞானி***

- திருமணம் பணத்திற்காக செய்ய வேண்டாம்; பணம் குறைந்த வட்டிக்கு வெளியே கிடைக்கும்.

  ***- மேஹர் பாபா***

- திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் ஒன்று பட்டிருக்க ஏற்படும் ஒரு சேர்க்கை. திருமணத்தின் மூலம் ஆண், பெண் இருவருக்கும் நட்புரிமை ஏற்படுகிறது. இது கெடாமல் இருக்க ஒருவரை மற்றவர் அடக்கி ஆளவோ, ஒருவர் சொல்லை மற்றவர் அலட்சியம் செய்யவோ கூடாது. தனக்கு ஒன்றைக்கூற எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே உரிமை மற்றவருக்கும் இருப்பதாக உணர வேண்டும்.

  ***- டேவிட் மேஸ்***

- திருமணம் செய்து கொண்டவன் என்றாவது அதற்கு வருந்துவான். செய்து கொள்ளாதவனும் என்றாவது அதற்கு வருந்துவான்.

  ***- செக்கோஸ்லோவேக்கியப் பழமொழி***

- திருமணமான பெண்கள் அனைவருமே மனைவியாக மாறிவிடுவதில்லை.

  ***- மெர்வீன்***

- ஆண்களுக்குத் திருமணம் என்பது ஒரு முற்றுப் புள்ளி; பெண்ணுக்கோ அது ஓர் ஆரம்பம்.

  ***- அலெக்ஸ்ட்யூபெ***

- திருமணம் என்பது ஒரு பொதுவான அறிக்கை. அதன் மூலமாக இருவரின் கண்டிப்பான அந்தரங்க நோக்கம் எல்லோருக்கும் அறிவிக்கப்படுகிறது.

  ***- பெர்னாட்ஷா***

- திருமணம் என்பது கணவனும் மனைவியும் சேர்ந்து தமக்கு மட்டுமே இன்பம் தேடிக் கொள்வதல்ல. வருங்கால சந்ததிக்கே நன்மை தேடிக் கொள்வதாகும்.

**- ருடாலஃப் பிஷர்**

- எப்படி இருந்தாலும் திருமணம் செய்து கொள். நல்ல மனைவியாகக் கிடைத்தால் மகிழ்ச்சியாய் இருப்பாய்; மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்.

**- சாக்டரடீஸ்**

- திருமணம் சிலருக்குக் காதலின் பூந்தோட்டம். ஆனால், பலருக்கு அதுவே போர்க்களம்.

**- கிளிண்டன்**

- அவசரப்படுத்தி திருமணம் செய்து கொள்கிறோம்; பின்னால் ஓய்ந்திருக்கும்போது அதற்காகவே வருந்துகிறோம்.

**- கான்கிரேவ்**

- திருமணத்தில் பெற்றோர்கள் பெற்றோர்கள் தலையீடு இருக்கக் கூடாது. நாட்டின் ஒழுக்கத்திற்கும் அமைதிக்கும் இது மிகமிக அவசியம்.

**- மாசேதுங்**

- திருமணம் என்பது ஒரு சிறை; அதில் பெண் கைதி; ஆண் அந்தச் சிறை அதிகாரி.

**- பகவான்**

- திருமணம் என்பது கடைசியாக வந்து சேருமிடம் அல்ல, அது ஒரு பிரயாணம்.

**- ஜர்னல் ஆப்லிவிங்**

- காதல் என்பது மனமயக்கம். திருமணம் என்று சிறு சடங்குடன் அது சமாதியடைந்துவிடுகிறது.

  ***- மேரி கொரில்லி***

- மனிதன் பார்த்து வியக்கும் நட்சத்திரம் காதல்; அதைப் பார்த்தபடி அவன் இடறி விழும் படுகுழி திருமணம்.

  ***- மென்கென்***

- திருமணம் ஆகாதவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். திருமணம் ஆனவர்களோ அத் தொடர்பில் இருந்தும் விடுபட்டு வெளியேற விரும்பு கிறார்கள்.

  ***- எமர்சன்***

- உணவை எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லு; உடையை எப்படி அணிய வேண்டும் என்று சொல்லு; ஆனால் திருமணத்தில் மட்டும் தலை யிடாதே அது அவரவர்கள் பிரியம்.

  ***- ஆமென்***

- திருமணம் என்பது காதலின் அஸ்தமனம்.

  ***- பிரான்சுப் பழமொழி***

- இரு மனமும் ஒருமனப்பட்டதே திருமணம் ஆகும்.

  ***- பாரதிதாசன்***

- திருமணத்திற்கு முன் பெண் அழுவாள்; திருமணத்திற்குப் பின் கணவன் அழுவான்.

  ***- போலந்துப் பழமொழி***

- மனிதன் தான் செய்த பாவங்களுக்காக அனுபவிக்கின்ற, நரகத்திற்கும் சொர்க்கத்திற்கும் இடையே உள்ள இடம்தான் திருமணம்.

*- ஜான்டன்ஸ்*

- யாரோ பெற்ற ஒருத்திக்கு, யாரோ ஒருவன் தன் வாழ்நாள் எல்லாம் சோறு போட்டுக் காப்பாற்றுவதற்குப் பெயர், திருமணம்.

*- பெர்னாட்ஷா*

- பணத்திற்காகத் திருமணம் செய்து கொண்டவனைப் போன்ற அயோக்கியனுமில்லை. காதலுக்காக மட்டுமே திருமணம் செய்து கொண்டவனைப் போன்ற முட்டாளும் இல்லை.

*- ஜான்சன்*

- திருமணம் என்பது கணவனின் விழிகளை மனைவியும்; மனைவியின் விழிகளைக் கணவனும் இரசித்துப் பார்த்துக் கொண்டு இருப்பது அல்ல; இருவரும் ஒன்றாக இருந்து ஒரே திசையில் - ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்குவதேயாகும்!

*-யாரோ*

**(நிறைவு பெற்றது)**

